Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 22 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 ஏப்ரல் 2022

**04.04.2009 அன்று முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு சிங்களப்படைகளின் நச்சுக்குண்டு தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவைத்தழுவிக்கொண்ட மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய மாவீரர்களின்**




# சிங்கள இராணுவம் மற்றும் பொலிசாரின் சம்பள கொடுப்பனவுகளுக்கு சிறீலங்கா அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தல்!

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும் Sri Lanka, India, Germany போன்ற நாடுகளில் தையல் கலையில் பிரபலமான புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிபபிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
C$ 310.00
+ Graphic Extra...
Large Format Digital Printing
Design Only
C$ 9.99 / Sq. Ft (C$ 34.99 / ft.)
1000 Business Cards
with out design C$ 59.99
One Side - 16pt Card Stock
with out design C$ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

ULAGA VANIKAM உலக வணிகம்
2023 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**நாம்**
**ஒரு சத்திய**
**இலட்சியத்தில் பற்றுக்கொண்டு**
**உறுதிகொண்ட மக்களாக**
**ஒன்று திரண்டு நின்றால்,**
**எந்த ஒரு சத்தியாலும்**
**எம்மை அசைக்கவோ**
**அழிக்கவோ**
**முடியாது**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**முகநூல்** (Facebook)
Sangathamil Canada


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே நடந்திராத பெரும் சமர்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே நடந்திராத, சந்தித்திராத சவால்களோடும், சாதனைகளோடும், இழப்புக்களோடும் நடந்தது **ஆனந்தபுர பெரும் சமர்**. அனைத்து உலக நாடுகளின் உதவியுடனும்,பாரிய படைக்கலன் களுடனும், எம் இனத்தை அழித்துக் கொண்டிருந்த சிங்கள இனவெறியர்களை முழுப் பலத்தையும் பிரயோகித்து புதுக் குடியிருப்பு ஆனந்தபுரப்பகுதியில் இடை மறித்தார்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்.

ஆக்கிரமிப்பாளர்களின் அரக்கத்தனமான கொடும் யுத்தத்தை மனோபலத்துடன் எதிர் கொண்டார்கள் விடுதலைப்புலிகள். யுத்தகளங்களில் பயன்படுத்த, தடை செய்யப்பட்ட பல விதமான ஆயுதங்களாலும், போர் விமானங்களாலும், ஆட்லெறிகளாலும் பரவலாகத் துடைத்தெறிந்து முன்னேறியது சிங்கள இரா ணுவம்.

விடுதலை அல்லது வீரச்சாவு என்ற தாரக மந்திரத்தை உச்சரித் தபடி ஒவ்வொரு போராளிகளும்,பொறுப்பாளர்களும், தள பதிகளும் அக்களத்தில் சாதனை படைத்தனர். பல நூற்றுக் கணக்கான இராணுவத்தைக் கொன்று குவித்தனர். உண்ண உணவு இல்லை, குடிக்க தண்ணீர் கூட இல்லை அனைத்து உதவிகளும் தடை செய்யப்பட்ட நிலையில் தமக்கேற்பட்ட சோர்வைக் கூட மறந்த நிலையில் தம்மிடம் இருந்த வளங் களை வைத்து சாவின் உச்சகட்டத்தில் கூட தர்மயுத்தம் நடத் தினார்கள். அக்களத்தில் போரிட்ட ஒவ்வொரு வீரர்களுடைய அழிக்க முடியாத வரலாறுகளும் அவர்களுடைய செங் குருதிகளால் அந்த மண்ணில் பதியப்பட்டது.

**பிரிகேடியர் தீபன்**




“என்னைக் காப்பாற்ற வேண்டாம், என்னை விடுங்கோ இந்த சிங்களவனை பழி வேண்டணும்” என வீரச் சாவடையும் தரு ணத்தில்க் கூட ஒலிக்கிறது தளபதி தீபனின் குரல். போர்க் களங்களில் போராளிகளோடு வாழ்ந்த அந்த தளபதி ஆனந்தபுரத் தில் ஆவேசமானார். அதர்ம யுத்தம் நடந்தும் அரக்கர் கூட் டத்தை அழித்தொழித்து சாவேனே தவிர மண்டியிட மாட்டேன் என சபதம் பூண்டார். சிங்கள இராணுவம் நடத்தும் யுத்த மழையை எதிர்த்து ஒரு பகுதியால் தீபனும் அவர் போரா ளிகளும் சண்டை செய்து கொண்டிருக்கிறார்கள். இயங்கவே முடியாத அளவுக்கு தீபன் பலத்த காயம் அடைகிறார். அவரைக் காப்பாற்ற முயல்கிறார்கள் போராளிகள். தன்னைக் காப்பாற்ற வேண்டாம் என கத்தியபடி எதிரியை நோக்கி ஆவேசமாகத் தாக்குதல் நடத்தி வீரச்சாவடைகிறார் பிரிகேடியர் தீபன்.

எதிரிக்குத் தலைவலியாக இருந்த தீபனை, போராளிகளுக்குப் பக்க பலமாக இருந்த தீபனை, தெரியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. போர்க்களங்களில் ஓயாத புயலாக சுழன்றடிக்கும் தீபனை எதிரி நன்கறிவான். தீபனின் கட்டுப் பாட்டில் இருக்கும் பிரதேசத்தை எட்டிப் பார்க்கவே பயப்படுவான் எதிரி. போரா ளிகளை ஊக்குவித்து அவர்களை யுத்த களத்தில் எப்பவுமே மகிழ்ச்சியாக வைத்திருக்கும் தளபதி தீபனை அனைத்துப் போராளிகளுக்கும் பிடிக்கும். அவருடைய கட்டளைக்காகக் காத்திருப்பார்கள் போராளிகள்.

கள நிலவரங்களை அதி வேகமாகப் புரிந்துகொண்டு அதிரடி முடிவுகளை எடுத்து, எதிரியை திணறடிக்கும் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் வழிகாட்டலைப் பின்பற்றி வளர்ந்த தீபன்



அவர்கள், சாள்ஸ் அன்ரனி படையணியை வழிநடத்தி நல்ல வழிகாட்டியாக, நல்ல போர்த்தளபதியாக உயர்ந்து, கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்தார் .பல சாதனைகளுக்கும், பல வெற்றிகளுக்கும் காரணமாய் இருந்த தீபனுக்கு தமிழீழத்தில் தனி வரலாறுண்டு. எதிரிக்கு சவால் விட்டு, போர் புரியும் தீபன் சந்தித்த களங்கள் பற்பல. சாதனைகளோடு வாழ்ந்த அந்த வீரனின் சாதனைகள் என்றென்றும் பதியப்பட வேண்டியவை. தமிழினத்தால் படிக்கப்பட வேண்டியவை.

சாதனை வீரனே பிரகேடியர் தீபன்

உங்கள் கனவு நனவாகும் வரை

தொடர்வோம் உங்கள் தடம்…

**பிரிகேடியர் விதுஷா**




**பிரிகேடியர் துர்க்கா**

பெண் என்னும் மரபுக்கு முடிசூட்டும் முகமாக, அடக்கப்படும் பெண்ணே நீதான் அதற்கு எதிராகப் போரிடு,என தட்டிக் கொடுத்து சிங்களத்தை முட்டி போட வைத்த எம் தேசத் தலைவரின் வழி தோன்றலால்... ஈழத்துப் பெண்களின் வீரத்து நிகழ்வுகள் உலகையே பலதடவை உலுக்கி வைத்துள்ளது. இவ்வழியில் அடியெடுத்து ஆரம்பித்த வரிவடிவப்புலித் தள பதிகள்தான் பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா.

ஆணுக்கு நிகராய் போருக்கு எதிராய் நேருக்கு நேர் நின்று போரிடும் வலிமை , இவர்களைப் போல, ஈழத்துப் பெண்களை மிஞ்ச யாருண்டு, என நெஞ்சுரம் கொண்டு நிமிர்ந்து களங்கள் பல கண்ட ஈழக்கண் ஒளிகள்.

ஒவ்வொரு வித்துடல் எதிரியிடம் விடுபட்ட வேளையிலும் அக்கா வின் இரவுகள் விடிகாலைப் பொழுதுகளே, அக்கா உங்க ளையே நாம் விதைத்த பின்பு இன்றுவரை எமக்கு விடிய வில்லை காலைகள், இணைபிரியாத தோழிகளாய் தமிழீழம் காத்தவர்கள். காப்பரனில் நடந்தவர்கள். கடுகளவு யோசனை யும் பகிர்ந்த பின்பே கடமை செய்வார். காடு, நாடு,கடல் , வானம் தொட்ட எம் தமிழ் மறத்திகள் கண்ணாகக் கடமையேற்று, கருத் தோடு களமாடிய பெண்ணினத்தின் முதுகெலும்பு இவர் களென்றால் மிகையில்லை.




ஆனந்தபுரத்தில் கடுஞ்சமர் மூண்டபோது தலைமைதனைப் பாதுகாத்தும் சண்டையிட்ட போதுகூட, களமுனையும் பிரிக்க வில்லை இவர்களை. களத்திடை வீழ்ந்த வேளை துர்க்காக்கா வீழ்ந்த செய்தி விதுசா அக்கா செவிவந்து சிறிது நேரம் செல்ல வில்லை அனலாகி விரைகிறார் அக்காவும் முன்னோக்கி, அடுத்தநொடி பாரிய சண்டை. திணறுகிறான் எதிரி. போர்க் கோலம் கொண்டவளை துளைத்த ரவை எவனதுவோ? சிங்களமே இனி உனக்கு பெருமெதிரி நாங்களடா.

பல ஆயிரக்கணக்கான வீரர்களை ஈழயுத்த களங்களில் இருபத்தைந்து வருடங்களாக நேர் நின்று வழிநடத்தி சாத னைகள் படைத்தவர்கள். உடல் முழுவதும் காயமுற்ற நிலை யிலும் பருத்தியாடை போல் உடலை மீண்டும் பொருத்தி, ஈழ விடுதலைக்காய்த் தம்மை வருத்திய கட்டளை தளபதிகள்

உயிர் விடும் உச்சக் கட்டத்திலும் உயிரற்ற எம் உடல் கூட எம் தாய் மடியில் எருவாக வேண்டுமென்ற கொள்கையில் தவறாது நின்ற களங்களில், கடைசிக் களம்தான்ஆனந்தபுரம், ஈழத்துக் கான பாரிய யுத்தம்.

இதில், தலைவன் தலைமையில் தலை நிமிர்ந்து சென்றவர்

கள், கரும்புலிகளுக்குச் சமனாக பெரும் படையை எதிர்த்து சாவு வரும் வரை சிந்திக்க முடியாத துன்பங்களை எல்லாம் சந்தித்து, இறுகிய தொண்டையின் இறுதி ஓசை வரை, பெருகிய இரத்த ஆற்றின் நடுவினில் உயிர் விட்டவர்கள் .

அக்காக்கள் இருவருடன் ஆனந்தபுரத்தில், பல நூறு தோழர்களும் தோழியரும் வீச்சோடு சண்டையிட்டு வீரச்சாவு எய்திவிட்டார். இவர்களுக்காய் நாம் எப்பொழுதும் அழுதாலும் எம் உணர்வு குன்றிடாது. முப்பொழுதும் உமை நினைந்து உர மேற்றி நடக்கின்றோம். மிகவிரைவில் அண்ணன் அணி நடையேற்க ஆனந்தபுரத்திலே உங்கள் உடல் வீழ்ந்த மண்ணெடுத்து ஈழவிடுதலை பெற்று உடையணிந்து தேசியக்கொடி போர்த்தி தலைவன் கை பூத்தூவி உங்கள் தாகம் தீர்த்த பின்பு உறங்கவைப்போம் நீர் துயிலும் இல்லங்களில். உறுதி கொள்வோம் எண்ணங்களில். கல்லறைச் செல்வங்களே! நீங்கள் களத்திலும் உறங்கவில்லை,உணவின்றி, நீரின்றி உரமேற்றி வாழ்ந்தீர்கள். உங்கள் உறக்கம் தொலைத்தவர்கள் இனி ஒரு போதும் கண்ணயர முடியாது. உறுதிகூறி வீச்சோடு நடைபோட்டு, வீழ்த்திய சிங்களத்தின் உடல் ஏறி வந்து உரமிட்டுக் கல்லெடுத்து கட்டிய கல்லறைக்குப் பூத்தொடுத்து பூசிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை. அதுவரை பற்றைகள் போர்த்திய உம் விதைகுழிகள் பதுங்கி இருக்கட்டும்.

பெண் போராளிகளுக்கு "இரு தாய்களாக, இரு தளபதிகளாக" இருந்து படை நடத்திய பெரும் தளபதிகளே ! உங்கள் கனவு நிச்சயம் நனவாகும்.

**பிரிகேடியர் ஆதவன்**




"எங்கட உயிரைக் கொடுத்தாவது அண்ணையைக் காப்பாற்றணும்" ஆனந்தபுரத்தில் பிரிகேடியர் ஆதவன் போராளிகளுக்குக் கட்டளை வழங்கினார்.

போராளிகளில் ஒருவனாக மாறி, கட்டளைகளைப் பிறப்பித்த வண்ணம் பல தடைகளை உடைத்து, தானே குறிபார்த்துச் சுட்டு, எதிரிகளை வீழ்த்திய வண்ணம் முன்னேறுகிறார் ஆதவன்.

எப்பணி ஆற்றினாலும் தலைவரை பாதுகாப்பதே தன் முதற் பணி என எண்ணும் ஆதவனால் கள நிலைமைகளை அறிந்து கொண்டு பொறுமை காக்க முடியவில்லை, தலைவர் அருகிருந்து தலைவரைப் பாதுகாப்பதில் தன்னுடைய வாழ்நாட்களில் கூடிய காலங்களைக் கழித்த ஆதவன், கதி கலங்கி நின்றார். "எம் தலைவருக்கு சிறு இன்னல் நேருமாயின் அதைப் பார்க்க நான் உயிருடன் இருக்க கூடாது" என தன் போராளிகளிடம், தன் பிள்ளைகளிடம் அடிக்கடி கூறும் ஆதவனால் சினம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. பகை மேல் சீற்றம் கொண்டு சீறி எழுந்தார். படைகொண்டு தடையுடைத்து எதிரியை அழித்து தலைவரை காப்பற்றினார்.

அக்களத்தில் இருந்து தலைவரைப் பாதுகாத்த பின்பும், தான் நேசித்த மண்ணுக்காக, தான் வளர்த்த போராளிகளுக்காக அக்களத்தை விட்டு அகலாது கலங்காது போரிட்டார். போராளிகளை உற்சாகப் படுத்தி புயலாகப் போரிட்ட ஆதவன் அவர்கள் இயங்கவே முடியாத அளவுக்கு பலத்த காயம் அடைகிறார் . காப்பாற்ற முயன்ற போராளிகளைப் பார்த்து "எதிரி அண்மித்து விட்டான், என்னை விட்டுட்டுப் போங்கோ" எனக் கூறிய இறுதி வார்த்தைகளுடன் அவருடைய மூச்சு அடங்கிப் போனது.

தலைவரை உயிராக நேசித்த அந்த வீரத்தளபதி தன் இறுதி மூச்சை விடும் போது கூட தலைவரைப் பற்றியே நினைத்தார். தலைவருக்கு சிறு துன்பம் கூட நேரக் கூடாது என எண்ணினார்.

பல காலங்கள் தலைவரோடு நின்ற அந்த அற்புதத் தளபதியின் சாதனைகள் வியக்கத்தக்கது. எப்பணி ஆற்றினாலும் அப்பணியில் அத்தனை நேர்த்தி இருக்கும். மிகவும் கடினமான நிர்வாகப் பணியை சுலபமாக்கிய ஒரே தளபதி ஆதவன் அவர்களே. அனைத்துத் தளபதிகளுக்கும், அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், தலைவர் கூறும் வார்த்தை "நிர்வாகத்தை எப்படிச் செய்வது என்று கடாபியிடம் படித்து விட்டு வாருங்கள்". அது போலவே போராளிகளின் திறமைகளை இனம் கண்டு அவர்களை ஊக்குவித்து வளர்ப்பதிலும், அவர்களுடைய உள்ளத்துச் சிந்தனைகளைப் புரிந்து கொண்டு செயல்ப்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே. குறி வல்லுணரான ஆதவனைப் பார்த்து வியக்காதவர்களே இல்லை. சொல்லிவைத்துச் சுடுவதில் அவருக்கு நிகர் அவரே. கரும்புலி வீரர்களை உருவாக்கி அவர்களை வழி நடத்திய அந்த அற்புதத் தளபதியும் இவரே, புதிய வீரர்களை போராட்டத்துக்குள் உள்வாங்கி புத்துணர்ச்சியோடும், கருத்துச் சுதந்திரத்துடனும் பயில்வித்த வித்தகரும் இவரே .

பல பணிகளை நேர்த்தியாகச் செய்து, பல சாதனைகள் புரிந்து, தலைவர் மனதில் தனியிடத்தைப் பிடித்த பிரிகேடியர் ஆதவனே! என்றென்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டு உங்கள் கனவு நனவாகும் வரை உம் தடம் தொடர்வோம்...




பிரிகேடியர் ஆதவனோடு ஆனந்தபுரத்தில் அருகிருந்த பொறுப்பாளர்கள் இவர்கள். ஆதவனால் பல்லாண்டுகளாக பயில்விக் கப்பட்ட பண்பாளர்கள் இவர்கள். பல போர் வீரர்களை வளர்த் தெடுத்து, தேசக்கடமை ஆற்றிய சேவகர்கள் இவர்கள். வரலாறே பிரமித்து நிற்பதாக சிலரின் வரலாறுகள் அமைந்து விடு கின்றன. அத்தனை அர்ப்பணமும், ஈகமும், தியாகமும் அவர்களின் வரலாறு முழுவதும் நிறைந்தே கிடக்கும். அப்படியான ஒரு வரலாற்றுக்கு உரியவர்களாகவே இவர்கள் செயலாற்றினார்கள் .

தேசவிடுதலைப் போரில் ஒரு காலை இழந்திருந்த அகிலேசை தளபதி ஆதவன் அவர்கள் தளப் பணிக்காக அமர்த்திய போதும், "இல்லை அண்ணை நான் உங் களோடு சண்டைக்கு வாறன், என்னாலை சண்டை பிடிக்க முடி யும்." எனக் கூறி, போட்டிருந்த பொய்க் காலுடன் களம் புகுந்தவன்.

தன்னை வளர்த்த தளபதியோடு இணைந்து தன் தேசத்தையும், தலைவரையும் காப்பாற்றப் போரா டினான். பல்லாண்டுகளாக பல பணிகள் ஆற்றிய கேணல் அகிலேஷ் ஆனந்தபுரத்தில் விதையாகிப் போனான்.

அகிலேசுடனான எனது முதற்சந் திப்பு முள்ளியவளையில் ஒரு முகாமில் அகிலேசும் அவனது உற்ற தோழனும் அங்கு வந்திருந் தார்கள்.பார்ப்பதற்கு பெரியவர் பாவனையில் இருக்கும் இவ னோடு, பழகியபின் புரியும் அவனு டைய குழந்தைத்தனமான பேச்சும் பணிவும், வயது வேறுபாடின்றி அனைவரையும் மதித்து நடக்கும் பண்பு மிக்கவன்.அவனுடைய போராட்ட வாழ்க்கையில் அதிக காலத்தை பிரிகேடியர் ஆதவன்(கடாபி) அருகிருந்து பணி செய்தவன். இறுதி நாள் வரை அவனுடைய இறுதிக்கணம் வரை அவர் அருகிருந் தவன்.

மெல்லிய பேச்சுத் தடுமாற்றம் இழையோடும் இவன் பேச்சில் சுவாரசியமிருக்கும். பேசும் வேளையெல்லாம் கண்ணைச் சிமிட்டியபடியே பேசுவது அவனுடைய இயல்பு ஆதலால் ஒரு சிலர் பிழை நினைத்திருக்கவும் கூடும். என்னையே சிலர் கேட்டதுண்டு. ஆனால் அடுத்தவர் மனம்நோக இவன் வாழ் நாளில் என்றும் நடந்திருக்கமாட்டான். அப்படியொரு சாந்தம் குடிகொண்டவன். என்னை அன்பாக அவன் அழைக்கும் வார்த்தைக்காக என் மனம் இன்றும் ஏங்கி நிற்பது நீ அறிய வாய்ப்பில்லை.

பிரிகேடியர் ஆதவன் படுகாயமடைந்த நிலையில் அகிலேஷ் அவ்வணியை செவ்வனே வழிநடாத்தினான். அவர் அருகிருந்து அறிவுரை கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கைக்கான திட்டம் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அந்த வேளையில் தான் அது நடைபெற்றதாக ஏனைய தோழர்கள் சொன்னபோது உங்கள் இருவரின் கடைமைக்கு அப்பாற்பட்ட அன்பை பார்த்து வியந்து நின்றேன். எங்கிருந்தோ வந்த எதிரிரவை ஒன்று உன் நெற்றியை துளைத்துவிட ஆதவன் அண்ணா மடிமீது நீ சரிந்து வீழ்ந்ததாக! உனை ஊட்டி வளர்த்தவர், உரிமையோடு ஏசுபவர், உணவு கூடி உண்டவரின் குடும்பமும் உன் உறவாய் ஏற்றிருந்த உந்தனை அணைத்தபடி அழுதாராம் அந்தத்தளபதி.

27.03.2009 அன்று நீயும் உன் பொறுப்பாளரும் பச்சைப் புல்வெளியூடாக இறுதிப்பயணம் வந்தீர்கள். உன் வீட்டில் சொல்லி வைத்து கோழிசமைத்து இருவரும் சேர்ந்து உன் அம்மாவின் கையால் கடைசிச் சோறு உண்டதாக உன் துணைவி சொல்லி அழவே தெரிந்து கொண்டேன். யார் வீட்டிற்கும் அலுவலின்றி போகாத நீங்கள் இருவரும் அன்று நேசமாக அணைத்து விடை பெற்று சென்றதுவும் முன் ஏற்பாடான திட்டம் என்று பின்பு நாம் உணர்ந்து கொண்டோம். சிறு குழந்தைகள் என்றால் அகிலேஸ்மாமா ஆச்சுமாமா ஆகிடுவார். அது அவனுடைய செல்லப் பெயர். அனைவருக்கும் பார்த்தவுடன் இவனை பிடித்துக் கொள்ளும் பணிவு மிக்கவன். ஆனால் கடமையில் கண்ணயராது உழைத்தவன்.

இவனுடைய பல பணிகள் இன்றுமென்ன இனியும் இனிவரும் காலங்களில் கூட வெளித்தெரிய வாய்ப்பில்லை. இவன் தன் விசுவாசமான பணியால் மட்டுமே தலைமையின் அருகு சென்றவன். அண்ணனே அகிலேசின் வேலை என்றுதான் கதைத்ததை என் காதால் கேட்டிருக்கிறேன். இரகசியம் காப்பதில் நீ மகா கெட்டிக்காரன். உன் மனைவிக்கும் கூட மூச்சு விட மாட்டாய். அண்ணனால் பெரிதும் விரும்பப்பட்டவர்களில் நீ முக்கியமானவன்.

கடல் நடுவில் ஒரு திட்டமிட்ட தாக்குதலுக்காக ஆதவனோடு நீ சென்றிருந்தாய், அங்கு திட்டத்துக்கு மாறாக எதிரி உலங்கு வானூர்தி சடுதியாக மிக அண்மையில் தோன்றி தாக்குதலை ஆரம்பிக்க இருபகுதிக்கும் கடுஞ்சமர் மூண்டது. உடனடியாக பிரிகேடியர் ஆதவனின் கட்டளைக்கு, அகிலேஸ் உலங்கு வானுர்தி நோக்கி சற்றும் பதட்டம் இன்றி உந்து கணையை ஏவி விட உலங்குவானூர்தி வெடித்துச் சிதறியது. சற்றும் எதிர் பாராமல் கள நிலைமை மாறிவிட இவர்கள் வெற்றியோடு தளம் திரும்பினார்கள். இந்த வரலாற்றுச் சாதனைக்கு கேணல் அகிலேஷ்தான் சொந்தக்காரன் என்று யாரும் அறிய வாய்ப்பில்லை. அன்று மட்டும் துணிந்து இவன் கணப்பொழுதில் அவ் உலங்கு வானுர்தியை அழித்திருக்காவிட்டால் அனைவரும் படகோடு மூழ்கும் நிலையே இருந்ததாக ஆதவன் பெருமையாக கூறிக் கொண்டார்.

பல சந்தர்பங்களில் அவர் அருகிருந்தும், உன் கால் ஒன்றை இழந்த பின்னும் சளைக்காது பணி செய்தவன். அவரைக் காப்பரனாய்க் காத்து நின்றவன். உன் அருகிலேயே அவரும் உறங்கியதை நீ அறிய வாய்ப்பு இல்லை. உங்கள் அனைவரையும் விட்டு வர மனமின்றி கண்டல் காட்டுக்குள் தன் கல்லறையை அமைத்துக் கொண்டார். இனி நீ அமைதியாக சேர்ந்துறங்கும் உன் தோழர்களும் அங்குதான் உன்னருகில் துயில்கின்றார். அனைவரையும் இந்நாளில் மனதிருத்தி வணாங்குகிறோம்.




தமிழீழ விடுதலைப் போரில் பல களங்கள் கண்ட ராஜேஷ் களத்தில் ஒருகண்ணை இழந்திருந்தார். கடமையை கண்ணியத்துடன் செய்யும் ஓர் அற்புத வீரனாகவும், பல போராளிகளை வளர்த்தெடுத்து அவர்களுக்கு முன் உதாரணமாகவும் திகழ்ந்தார். நீண்ட காலங்களாக தேசவிடுதலைப் போரில் பங்காற்றியவர், களங்களில் மட்டுமின்றி தளங்களிலும், சிறப்புறப் பணியாற்றினார். தேசத் தலைவரைக் காக்கும் பணியிலும் பல வருடங்கள் ஈடுபட்டான்.

தமிழ்த் தேசத்தின் விடிவுக்காக அயராது உழைத்த லெப் கேணல் ராஜேஷ் ஆனந்தபுர பெருஞ்சமரில் வீர காவியமானான். இந்த வீரனை என்றென்றும் மனதில் இருத்தி இவன் தடம் தொடர்வோம்.




மூர்க்கத்தனத்தோடு முன்னேறிய இராணுவத்தைக் கொன்றுகுவித்து விதையானவன் இவன். தன்னுடைய இரண்டு வயதுக் குழந்தையை சிங்கள அரக்கர்களின் விமானத்தாக்குதலுக்குப் பலிகொடுத்து, அத்துயரில் இருந்து மீழமுன்பே களம் நோக்கி விரைந்தவன் நளன். ஆனந்தபுரத்தில் நடந்த உக்கிரப் போரில்

தேச விடுதலைக்காக பல பணிகள் ஆற்றிய இவன் இம்ரான் பாண் டியன் படையணியின் சிறப்புப் பொறுப்பாளராக சில



காலம் பணி புரிந்தான். மிகவேகமாகவே அனைவரது தேவைகளையும் அனைவரது கோரிக்கைகளையும் உள்வாங்கி படையணியை நிர் வகிக்கும் ஒருவனாக ஆகிப் போனான். நிர்வாகப் பணிகளை அழகாக போராளிகளுக்குக் கற்று கொடுத்தான்.

அனைவராலும் விரும்பப்படும் பொறுப்பாளனாகச் செயலாற்றிய லெப் கேணல் நளன் அவர்களை என்றுமே மறக்க முடியாது .

இவர்களோடு கப்டன் குட்டியருவி, கப்டன் இசைப்பிரியன், கப்டன் அமர்முரசு, கப்டன் நெடியவன், மேயர் ஈழச்செல்வன் இவர்கள் எம் இனத்தின் இருள் நீக்கிகள் ,எம்மனங்களில் சுடர் விட்டெரியும் சுடர் மணிகள். தூக்கம், சோர்வு, உணவு என்று எல்லாம் மறந்து எந்நேரமும் இயங்கியவர்கள். ஆனந்தபுரத்தில் பிரிகேடியர் ஆதவனோடு இறுதிவரை உறுதியுடன் உழைத் தவர்கள். கட்டளைக்குக் கீழ்ப் பணிந்து அனைத்துக் கடினமான பணிகளையும் அர்பணிப்புடன் ஆற்றியவர்கள். இந்தத் தியாகச் செம்மல்களை என்றும் எம் மனங்களில் இருத்திப் பூசிப்போமாக.

**கேணல் தமிழ்செல்வி**

உலகத்தில் வாழும் தாய்களுக்கெல்லாம் பெருமை தேடித்தந் தாள் ஆனந்தபுரத்தில் எங்கள் தமிழ்செல்வி. உக்கிரமான போர்க்களம் என்று தெரிந்து கொண்டும் இரண்டு வயதுக் பெண்குழந்தையை அருகிருந்தவர்களிடம் விட்டுக் களம் புகுந் தவள் இவள். கள நிலவரங்களைத் தெரிந்து கொண்டும் தான் பெற்ற பிள்ளையை விட்டு தன் தாய் நிலம் காக்க ஓடியவள் இவள். களத்தில் தன் தளபதி பிரிகேடியர் விதுசாக்காவிற்குப் பக்கதுணையாக நின்று போர் புரிந்தவள் இவள். தளபதிகளான பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா அக்களத்தில் வீரச் சாவைத் தழுவிய போது, அனைத்துப் பெண் போராளிகளையும் ஒழுங்குபடுத்தி, வழிநடத்திப் போர் புரிந்தவள் இவள் . களத்தில் தான் வீரச்சாவு அடைவது உறுதி எனத் தெரிய வந்த போது, தன் தோழிக்கு தொலைத்தொடர்பு மூலம் சொன்னாளாம்

"நான் இந்தச் சண்டையிலை இருந்து நிச்சயம் உயிரோடு வர மாட்டன். என்ரை பிள்ளையை நீங்கதான் எல்லாரும் பார்க் கனும். நீங்க எல்லாரும் பார்ப்பீங்கள் என்ற நம்பிக்கையோடு நான் போறன்"

அவள் தோழி தினமும் அவள் வார்த்தைகள் தன் காதில் ஒலித் துக்கொண்டு இருக்கிறது" எனக் கூறி கண்கலங்கி நின்ற போது... அவள் வார்த்தைகள் அனைவரையும் புல்லரிக்கச் செய்தது. அவளுடைய அந்தச் சாதனைகள் விண்ணைத் தொட்டு நிற்கின்றது.

சிறுவயதில் போராட்டத்தில் இணைந்த இவள் மணலாற்றில் தன்னுடைய பயிற்சியினை எடுத்து முடித்தவள். மணலாற்றில் உள்ள மண்கிண்டி மலையில் ஓர் தாக்குதலில் தன் திறமையை வெளிக்காட்டி அனைவராலும் இனம் காணப்பட்ட ஒரு போராளி ஆனாள். கனரக ஆயுதங்களைக் கையாள்வதில் இவளுக்க நிகர் இவளே. அனைத்துக் கனரக ஆயுத பயிற்சிகளையும் இலகுவாகப் பயின்றது மட்டுமின்றி, பிரதான கனரகப் பயிற்சி ஆசிரியருமானாள். ஜெயசிக்குறுவில் அவளுக்கென்று தனி வரலாறு உண்டு. அனைத்துக் காலநிலைகளிலும் நடந்த இச் சமரில் அவளுடைய பாதம் படாத இடமே இல்லை. மாலதி படை யணியின் தளபதியாக பல களங்களை வழி நடத்தி, சாதனை யாளராகப் தலை நிமிர்ந்து நின்றாள்.

விதையாகிப் போன கேணல் தமிழ்செல்வியே! விழி மூடித் துயில் கொள்ளு... உன் கனவு நனவாகும். அதுவரையும் ஓயோம்.

**பிரிகேடியர் மணிவண்ணன்**




இயல்பாகவே அமைதியான சுபாபமும், கனிவான பேச்சும் நிறைந்த மணிவண்ணன், போர்க்களங்களில் புயலாக மாறி விடுவார். பல போர்க்களங்களைச் சந்தித்து விழுப்புண் அடைந்த போதிலும் போர்க்குணம் மிக்க வீரனாகவே செயற் பட்டார். களநிலவரங்களை உடனுக்குடன் புரிந்துகொண்டு மோட்டார் செல்களை விரையப்படுத்தாமல் சரியான இலக்குக்கு செல்களை அடிக்க கட்டளைகள் பிறப்பிப்பார். "வருகுது பார" என மணிவண்ணன் களத்தில் உள்ள தளபதிகளுக்கு கட்டளை பிறப்பிக்கும் போது களத்தில் போரிடும் போராளிகளின் மகிழ்ச் சியைப் பார்க்கவே தேவையில்லை. போர்க்களங்களில் இறுக் கமான சூழ் நிலைகளிலெல்லாம் மணிவண்ணனைத்தான் போராளிகள் தேடுவார்கள். பல இறுக்கமான இடங்களில் எல் லாம் செல்களை விழுத்தி தடைகளை உடைத்து பல வெற் றிகளுக்குக் காரணமாய் இருந்தவர் மணிவண்ணனும் அவ ருடைய போராளிகளும் தான்.

கேணல் ராயு அவர்களால் வழிநடத்தப்பட்ட மணிவண்ணன், கேணல் ராயு அவர்கள் வீரச்சாவடைந்த பின்னர் ராயு அவர் களின் ஆலோசனைகளைப் பின்பற்றி, சிறப்பாக, மோட்டார் படையணியை வழிநடத்தினார். அனைவருடனும் அன்பாகப் பழகும் மணிவண்ணன் அவர்கள் எளிதில் அனைத்துப் போராளிகளின் மனதிலும் இடம் பிடித்து விடுவார். அனை வராலும் "மணியண்ணை" என அன்பாக அழைக்கப்படும் தளபதியாவார்.

ஆனந்தபுர பெருஞ்சமரில் செல்களை சரியான முறையில் சரியான இலக்குகளில் பயன்படுத்தி எதிரிகளைக் கொன்று குவித்தவர். வீரச்சாவடையும் தருணத்தில் அவரும் அவ ருடைய போராளிகளும் இணைந்து எதிரியிடம் பிடிபடாதபடி அனைத்து மோட்டார்களையும் அழித்துவிட்டு அன்னை மண் ணை முத்தமிட்டார் பிரிகேடியர் மணிவண்ணன்.

**லெப் கேணல் அமுதாப்**




சாள்ஸ் அன்ரனி படையணியின் தளபதிகளாகாக களம் பல கண்டவர்கள். இறுதி முச்சு வரையும் போர்களங்களில் போரா டிய இளம் தளபதிகள், சொல்லி வைத்து செயலாற்றுவதில் இவர் கள் உத்தமர்கள். ஆனந்த புரத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இவர்களை நெஞ்சில் இருத்தி தியானிப்போம்.

**கேணல் கோபித்**




இவன் ஒரு வேவுப்புலி வீரனாகவே எனக்கு அறிமுகம். மெலிந்த உயரமான இவன் கண்களில் மட்டும் தேடலுக்கான ஒளி கூர்ந்த பார்வை நிறைந்திருக்கும். ஆம் இவன் புகாத எதிரி முகாம் இல்லை எனலாம். தனது போராட்ட வாழ்க்கையில் பெரும் பகுதியை வேவுப்பணிக்காகவே செலவிட்டவன். பிரிகேடியர் பால்ராஜ், கேணல் தீபன், கேணல் ஜெயம் இவர் களோடு அருகிருந்து தன் பணியை சிறப்பாகச் செய்து தலைவர் வரை விரும்பப்பட்டவன். இவனது பொறுப்பில் வேவுபார்த்து நடாத்தப்பட்ட பல இராணுவமுகாம் தகர்ப்புக்கள் எமக்கு முழு மையான வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளது. எதிரியின் குகைக் குள் சென்று பட்டி தொட்டியெல்லாம் புகுந்து விளையாடியவன்.

அத்தோடு நின்றுவிடாது சாள்ஸ் அன்ரனி படையணியின் சிறந்த சண்டைக்காரன், ஒரு பொறுப்பாளன் இவ்வாறு வளர்ந் தவன் இறுதியில் சாள்ஸ் அன்ரனி படையணியின் சிறப்புத் தளபதியுமானான். அன்று தொட்டு இறுதிவரை கட்டளைத் தளபதியாகவும் இருந்து பலநூறு வீரர்களை வழிநடத்தியவன். இவனுடைய தியாகமும், வீரமும், நற்குணமும் நிறைந்து கிடக்கும் வீரவரலாற்றை என் பேனாவுக்குள் அடக்கிவிட முடியாது. இறுதிவரை நின்று கடுஞ்சமர் புரிந்தவன். ஆனந்தபுர ஆரம்பச்சமர்க்களத்தில் தனது படையணியை வழிநடத்தி சண்டையில் எதிரியை திணறடித்து வீரமரணம் அடைந்தாலும் எமது தமிழீழ வரலாற்று பதிவில் இவனுக்கு தனியிடம் உண்டு.

**லெப் கேணல் மெய்யறிவு**

இம்ரான் பாண்டியன் படையணியில் பல பணிகள் ஆற்றிய இந்த வீரர்கள் பிரிகேடியர் ஆதவனோடு ஆனந்தபுரத்தில் களமாடி காவியமானார்கள். நீண்ட வரலாறுகளைத் தந்த இந்த வீரர்களை மனத்திருத்தி தியானிப்போம்.

**கேணல் அமுதா**

பெண்ணாக பிறந்து புலியாக மாறி புயலாக எழுந்து பல களம் கண்ட வீரத் தளபதி இவள். ஆனந்தபுரத்தில் மோட்டார் அணி யின் பெண் போராளிகளை வழிநடத்தி களத்தில் காவிய மானவள். அமுதா பயிற்சிமுகாம் முடிந்த கையோடு கனரக ஆயுதப்பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். அங்கு 60mm மோட்டார் அணியில் ஒரு காப்பாளராக பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் போதே எனக்கு அறிமுகம். நிறத்த மெல்லிய நெடுத்த அவளது தோற்றம் கனரக ஆயுதத்திற்குப் பொருத்தமில் லாதவாறே பார்ப்பவர்கள் கணிப்பிடுவர். முகத்தில் என்றும் அமைதி குடிகொள்ள யாரை கண்டாலும் ஒரு சிரிப்பே இவளது பதிலாக இருக்கும். கதைப்பது குறைவு ஆனால் பயிற்சி வேளை யில் உருவத்திற்கு பொருத்தமில்லாதா சுமையை 60mm செல் பெட்டியை நிறைத்த மணலோடு தூக்கி கடின பயிற்சிகளை எல்லாம் இலாவகரமாகச் செய்து முடித்தாள். படிப்படியாக 60mm மோட்டார் கண்ணர், இரண்டு மோட்டார்களின் பொறுப்பாளர் என இவளுடைய பயிற்சி ஆசிரியர்களின் அரவணைப்பில் வளர்ந்தாள் எனலாம்.

மேஜர் சௌதினி,மேஜர் கோகிலா இவளுடைய பெரும் வழி காட்டிகள். தொடர்ந்து 82mm மோட்டார் தொட்டு 5 இன்சி வரை வைத்து இலகுவாகச் சண்டை செய்தவள். தனது ஒரு காலை இழந்த பின்பும் பல மோட்டார் அணிகளின் ஒருங்கிணைப்புப் பொறுப்பாளராய் சிறப்பாகச் செயல்பட்டு ஆனந்தபுரத்தில் கேணல் அமுதாவாக விதையாகிப் போனாள்.

**கரும்புலி லெப் கேணல் கிந்துஸ்தானி**

வெடிகுண்டை உடம்பில் கட்டி கண் இமைக்கும் நேரத்தில் பல எதிரிகளை கொன்று குவித்து ஆனந்தபுரத்தில் சாதனை படைத்த தமிழினத்தின் தடை நீக்கியே உன்னை மறந்துடுமா நெஞ்சம்.

**கேணல் நாகேஸ்**




ஆனந்தபுரக்போர்க்களத்தில் போராடி வீரச்சாவு அடைந்த புனிதா, லெப்-கேணல் மோகனா, மேஜர் தென்னரசி, மேஜர் குலமதி, கப்டன் தமிழினி, கப்டன் தமிழ்முகில் ,கப்டன் அமுதினி, கப்டன் இசைஎழில், கப்டன் காவேரி, கப்டன் மதியொளி, கப்டன் அலையரசி, கப்டன் அகல்மதி ஆகி யோரையும் இன் நாளில் நினைவு கூருகிறோம்.

சித்திரை மாதம் , 05ம் திகதி மட்டும் நடந்த இந்தச் சமரில் இறுதிவரை எதிரியோடு சமரிட்டு பல பிரிகேடியர் தரத் தளபதிகள், பல கேணல் தரத் தளபதிகள், பல லெப் கேணல் தர தளபதிகள் உட்பட 450க்கு மேற்பட்ட மாவீரர்களையும் இந் நாளில் நெஞ்சிருத்தி நினைவு கூறுகிறோம்.

ஆண்டுகள் பல ஆனாலும் அழியாது உங்கள் நினைவுகள் என்றென்றும் உங்கள் நினைவுடன் ...

**வீரவணக்கம்**

நன்றி: சி.கலைவிழி (ஆதவி), இருப்பு

# 1.03.2009 தொடக்கம் 05.04.2009 வரை ஆனந்தபுரத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இந்த மாவீரர்களுக்கும் இதில் பெயர் குறிப்பிடத் தவறிய அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிகேடியர் தீபன்
பிரிகேடியர் ஆதவன் (கடாபி)
பிரிகேடியர் விதுசா
பிரிகேடியர் துர்க்கா
பிரிகேடியர் மணிவண்ணன்
கேணல் தமிழேந்தி அப்பா
கேணல் நாகேஸ்
கேணல் தமிழ்ச்செல்வி
கேணல் அமுதா
கேணல் சேரலாதன்
கேணல் அன்ரன்
கேணல் அகிலேஸ்
கேணல் கோபால்
கேணல் ஜயனார்
கேணல் இளங்கீரன்
லெப். கேணல் நளன்
லெப். கேணல் பாரதி
லெப். கேணல் அகநிலா
லெப். கேணல் அறிவரசி
லெப். கேணல் குயில்வேந்தன்
லெப். கேணல் நசீர்
லெப். கேணல் வாகீசன்
மேஜர் சித்தா
மேஜர் ஒளிவாணன்
பூங்குயிலன் புலனாய்வுத்துறை (நிலை தெரியாது)
லெப். கேணல் குமரச்செல்வன் (சிறி)
மேஜர் கெங்கா (சங்கீதன்)
லெப். கேணல் அமிர்தாப்
லெப். கேணல் மொழி
லெப். கேணல் சசி
மேஜர் செங்கையாழினி
மேஜர் கலைமகள்
மேஜர் செஞ்சுரபி
லெப்டினன்ட் அகல்மதி
2ம் லெப்டினன்ட் அலையரசி
கில்லியரசன்
(ராதா படையணி) நிலை தெரியாது
லெப். கேணல் புரட்சிநிலா
மேஜர் எழில்வேந்தினி
மேஜர் யாழிசை
கப்டன் அருளரசி
கப்டன் யாழரசி
கப்டன் நந்தா
2ம் லெப்டினன்ட்
முகிலினி
கப்டன் தமிழருவி
கப்டன் மகிழன்
மேஜர் குரலமுதன்
லெப். கேணல் மாயவன்
லெப். கேணல் மகேந்திரம்
குமணன் (நிதித்துறை) நிலை தெரியாது
அமுதினி (நிதித்துறை) நிலை தெரியாது
லெப். கேணல் மெய்யறிவு
லெப். கேணல் நிலான்
லெப். கேணல் பிரபு
நீலவாசன் (வடபோர்முனை கட்டளைப் பணியகம்) நிலை தெரியாது
லெப். கேணல் வீஸ்மன்
லெப். கேணல் இளமாறன்
மேஜர் அழகு
மேஜர் தமிழேந்தி

மேஜர் தவம்
மேஜர் எழிச்சி
மேஜர் பாரதி
மேஜர் செங்குமரன்
மேஜர் செம்முகிலன்
மேஜர் தமிழ்பிரியன்
மேஜர் கவியாளன்
கப்டன் மெய்யாளன்
கப்டன் கொடைவெற்றி
கப்டன் இனியவன்
கப்டன் வீரக்கொடி
கப்டன் இகழ்
கப்டன் தூயவன்
லெப்ரினன்ட் இசைமலை
லெப். கேணல் அருந்தா
லெப். கேணல் புனிதா
மேஜர் சுரேந்திரா
ஃஅன்புமதி
மேஜர் இந்துமதி
லெப். கேணல் கிந்துஸ்தானி
லெப். கேணல் அன்பு
லெப். கேணல் ஆனந்தன்
ஆனந்தபுர முற்றுகைச் சமர் களத்தில் நேரடியாக நின்ற போராளியின் பதிவு






லெப்.கேணல் ராதா வான்காப்புப் படையணி

ஆனந்தபுர முற்றுகைச் சமரில் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த சகல படையணிகளும் பங்குபற்றியிருந்தன. அதைப்போன்று லெப்.கேணல் ராதா வான்காப்புப் படையணியில் பின்னர் பணியிலிருந்த எமது அணி போராளிகள் 40 பேர் ஆனந்தபுர முற்றுகை முறியடிப்புக்காக கணினிபிரிவின் 100ற்கு மேற்பட்ட பெண்போராளிகளை உள்ளடங்கிய தாக்குதல் அணியாக சென்றோம். எமது அணியை தாக்குதல் திட்டத்தின்படி மூன்று அணியாக பிரிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஒரு அணி தடையை உடைக்க மற்ற இரு அணிகளும் உள்நுழைவதே திட்டமாக இருந்தது. மார்ச்சு மாதம் 31 ம்திகதி எங்களது இரு அணிகள் ஆனந்தபுரத்தினுள் சென்றது ஒரு அணி ஆனந்தபுரத்திற்கு வெளியே பச்சைபுல் வெளியில் நிலை எடுத்தது. ஆனந்தபுர முற்றுகையிற்குள் எமது அணியினை சேர்ந்த 25ற்கு மேற்பட்ட நண்பர்களும் அதை போன்று முற்றுகையை உடைப்பதற்கான முயற்சியில் 5ற்கு மேற்பட்ட நண்பர்களும் வீரச்சாவடைந்திருந்தனர். அதைப்போன்று எமது அணியுடன் வந்த பெண்போராளிகளில் பெரும்பாலானோர் வீரச்சாவடைந்தும் விழுப்புண் அடைந்திருந்தனர். இந்த ஆனந்தபுர முற்றுகைச் சமரில் வீரச்சாவடைந்த எமது அணியினர் விபரங்கள்,

லெப்.கேணல் அனுஷன்
லெப்.கேணல் கபிலன்
லெப்.கேணல் அந்தியாஸ்
லெப்.கேணல் இளவரசன்
லெப்.கேணல் ஆற்றலோன்
லெப்.கேணல் பெருங்கீரன்
லெப்.கேணல் ஏழிசை
லெப்.கேணல் மதிவர்மன்
லெப்.கேணல் வல்லவன்
லெப்.கேணல் குலம்
லெப்.கேணல் கண்ணன்
லெப்.கேணல் நிறஞ்சன்
லெப்.கேணல் தயாபரன்
லெப்.கேணல் மைந்தன்
லெப்.கேணல் வண்ணம்
மேஜர் வாணவன்
மேஜர் சோலையப்பன்
கப்டன் சுடரவன்

கால நீட்சியில் எமது நினைவுகளில் 18 நண்பர்களின் பெயர்களே நினைவில் உள்ளது. அதைபோன்று சில நண்பர்களின் புகைப்படங்களே எம்மால் சேகரிக்க முடிந்தது ஆனந்தபுர முற்றுகைச் சமரின் பதிவுகளை பதிய முற்பட்ட போதே காலம் பல நினைவுகளை அழித்துள்ளதை உணரமுடிகிறது. எம்மை போன்று வாழும் சகமுன்னால் போராளிகள் உங்களுடன் உடன் களமாடிய நண்பர்களின் நினைவுகளையும் தியாகங்களையும் பதிவிடுங்கள் ஒரு போராளியின் சாவு சாதாரண சாவல்ல அது தமிழீழ விடுதலைக்கான வரலாறு.

## வீரவணக்கம்



நிலையுடன் பெயர்: கேணல் வேங்கையன் (ஜயனார்)
நிலையான பெயர்: சிவரத்தினம் துசியந்தன்
வீரப்பிறப்பு: 06.04.1980
நிலையான முகவரி: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
நிகழ்வு: 04.04.2009 அன்று ஆனந்தபுரம் பகுதியில் சிறீலங்கா சிங்களப்படைகளின் இரசாயன குண்டுத்தாக்குதலின் போது வீரச்சாவு

## வீரவணக்கம்



நிலையுடன் பெயர்: கேணல் வீரத்தேவன்
நிலையான பெயர்:
வீரப்பிறப்பு: 24.07.1976
நிலையான முகவரி: திருகோணமலை
நிகழ்வு: 04.04.2009 முள்ளிவாய்கால் முற்றுகை முறியடிப்புச் சமரின் இரகசிய தரவிறக்கம் நடவடிக்கையில் அளம்பில் பகுதியில் சிறீலங்கா படையுடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவு

## வீரவணக்கம்



நிலையுடன் பெயர்: கேணல் சேரலாதன் (சேரா)
நிலையான பெயர்: சிவசோதி சிவகுமரன் (சிவா)
வீரப்பிறப்பு: 02.07.1972
நிலையான முகவரி: நயினாதீவு, யாழ்ப்பாணம்
நிகழ்வு: 05.04.2009 அன்று ஆனந்தபுரம் முற்றுகை முறியடிப்பின் போது வீரச்சாவு




# பறாளாய் முருகன் ஆலய வளாகத்தில் புத்தர்சிலை வைக்க அனுமதிக்க மாட்டோம்!

-தர்மகத்தா சபையும் மக்களும் தீர்மானம்-



மார்ச் 16, 2022

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தின் கீழ் புத்தர் சிலை வைப்பதற்கோ பிரித் ஓதுவதற்கோ தாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என ஆலய தர்மகத்தா சபையும் ஊர் மக்களும் தீர்மானித்துள்ளனர்.

சைவ ஆலயமான இவ்வாலயத்தில் எந்த மதத்தவர்களும் வந்து வழிபட முடியும் எனவும், அவர்கள் தமது மதச் சின்னங்களை நிறுவுவதற்கோ அது சார்ந்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கோ முருகன் அடியார்களும் ஊர் மக்களும் அனுமதிக்க மாட்டார்கள் எனவும் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி முருகன் ஆலய உள் வீதியில், தீர்த்தக் கேணிக்கு அருகே, நீண்ட காலமாக அரச மரம் ஒன்று உள்ளது. யுத்தம் முடிவடைந்த பின்னர் அவ்வப்போது ஆலயத்திற்கு வருகின்ற பிக்குகள் முருகனை வழிபட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், நாளை பௌர்ணமி தினத்தன்று இங்குள்ள அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையொன்றை வைத்து பிரித் ஓதுவதற்கு பிக்குகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தகவல்கள் வெளியாகி இருந்தன. குறித்த செய்தி அறிந்த மக்கள் கடும் சீற்றமடைந்தனர்.
இது தொடர்பாக ஆலயத்தில் இன்று விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தின்போது சைவ ஆலயமான பறாளாய் முருகன் ஆலயத்தில் புத்தர் சிலை வைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கு கடும் கண்டனமும் வெளியிடப்பட்டது.

இக்கூட்டம் இன்று நடைபெறுவதாக அறிந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், சட்டத்தரணி சுகாஸ், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி ச.அனந்தி மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

# சிறீலங்கா நீதி அமைச்சர் ஒட்டுமொத்த தமிழினத்தையும் மலினப்படுத்துகின்ற மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட ஒருவர்!

பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்

மார்ச் 17, 2022

காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் மரணித்தவர்களுக்கு 100,000 ரூபா கொடுப்பனவு என தெரிவித்த நீதி அமைச்சர் ஒரு ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற மனித நேயத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுகின்ற ஒருவர் என்பதுடன் தமிழ்களுடைய உயிர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியா? என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமல் போனோரின் உறவுகளுக்கு அரசினால் ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கும் யோசனையை நீதி அமைச்சர் அமைச்சரவையில் முன்வைத்தார். இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் நீதி அமைச்சர் காணாமல் போனோர் தொடர்பாக அமைச்சரவையில் முன்வைத்த யோசனை ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற விடயமாகும் என்பதுடன் தமிழர்களை இவர்கள் எவ்வாறு எந்தளவுக்கு வைத்திருக்கின்றார்கள் என்பது இந்த நீதி



அமைச்சர் வெளியிட்டிருப்பது ஒரு வேதனையான கவலையன விடையம்.

அதேவேளை தமிழ்களுடைய உயிர் ஒரு 100,000 ரூபா பெறுமதி என்ற அடிப்படையில் இவர்கள் கையாளுகின்ற விடயத்தை நாங்கள் மனவேதனையுடனான எதிர்ப்பை தெரிவித்துக்கொள்கின்றேன் .

தமிழ் மக்கள் இந்த நாட்டில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் ஆனால் அரசாங்கம் அதுசம்மந்தமாக எந்த விதமான நியாயமான ஒரு விடையங்களையும் கையாள்வதற்கு தயாரில்லை என்ற அடிப்படையில் உள்ளது.

இந்த நிலையில் இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எமது உறவுகள் நீண்டகாலமாக அவர்களது நியாயங்களை பெற்றுத்தரவேண்டும் என சர்வதேசத்தை கோரி வருகின்றனர். இவ்வாறு சர்வதேசத்தை கோரிவரும் இந்த கால கட்டத்தில் இந்த நீதி அமைச்சர் முன்வைத்திருக்கின்ற விடையம் எமது தமிழினத்தை மிக மோசமாக இந்த அரசாங்கம் கையாளுகின்ற விடையத்தை இதன் மூலமாக எடுத்துரைத்துள்ளனர்.

காணாமல் போன உறவுகள் மற்றும் மனித உயிர்களை பறிகொடுத்த சமூகத்தை மோசமான ஒரு சூழலுக்கு இட்டுச்செல்லும் என்பதுடன் மரணித்தவர்களுக்கு ஒரு இலச்சம் ரூபா கொடுப்பனவு என தெரிவித்த நீதி அமைச்சர் ஒரு மனித நேயத்துக்கு அப்பாற்பட்டவ் என்பதை காட்டுகின்றது.

எனவே இவ்வாறு நாட்டில் ஒரு நீதி அமைச்சர் ஒட்டுமொத்த தமிழினத்தை மலினப்படுத்துகின்ற விடயமாக செயற்படுகின்ற நடவடிக்கையை கைவிடவேண்டும். என அவர் தெரிவித்தார்.

# சிறீலங்கா ஜனாதிபதியுடன் பேசவுள்ள விடயங்கள் தொடர்பில் நிகழ்ச்சி நிரலொன்றை கூட்டமைப்பினர் தயாரிக்க வேண்டும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன்

மார்ச் 17, 2022

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசவுள்ள விடயங்கள் தொடர்பில் நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கௌரவமான தீர்வு வழங்க இந்த அரசாங்கம் தயாராக இல்லை. தமிழ் மக்களை இந்த அரசாங்கத் தரப்பினர் மிகவும் மோசமாகத்தான் நடத்துகின்றனர். ஒரு பேச்சுவார்த்தைக்கான சரியான ஒரு சூழலைக்கூட இந்த அரசாங்கத்தால் உருவாக்க முடியவில்லை.

ஒரு பக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்துக் கொண்டு மறுபக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் மரணச் சான்றிதழும், ஒரு இலட்சம் ரூபா பணமும் வழங்க இந்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த நடவடிக்கை பாதிக்கப்பட்ட மக்களை மேலும் மேலும் துன்பத்திற்கு உள்ளாக்கக் கூடிய விடயம்.

எனவே, காணி கபளீகரம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், பொருளாதார நெருக்கடி குறித்தும் ஜனாதிபதியுடன் பேச்சுக்கு செல்லவுள்ள தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேசவுள்ள விடயங்கள் தொடர்பில் நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.



என்னென்ன அமைச்சு சார்ந்த விடயங்களில் பிரச்சினைகள் உள்ளது என்பதை தீர்மானித்து முன்னரே ஜனாதிபதியிடம் அறிக்கையாக கொடுக்கும்போது அது சார்ந்த அமைச்சர்களும் பேச்சுவார்த்தையில் பங்கேற்று ஒரு தீர்க்கமான முடிவொன்றை பேச்சுவார்த்தையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

# ஒரு இலட்சத்திற்கும் மேலதிகமான பலமடங்கு தொகையை நாம் அரசிற்கு வழங்கத் தயார் எமது உறவுகளே எமக்குத் தேவை

## முல்லை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கச் செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா

மார்ச் 16, 2022

ஒரு இலட்சம் ரூபாய்க்கும் மேலதிகமான பலமடங்கு தொகையை நாம் அரசாங்கத்திற்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம். அரசாங்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை கண்டு பிடித்து எம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கச் செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோரின் நெருங்கிய உறவினருக்கு, குடும்ப மறுவாழ்விற்காக ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படும் ஒரு இலட்சம் ரூபாயினை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நீதி அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பில் முன்வைத்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இந் நிலையில் கடந்த 1832நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இலங்கை அரசின் இத்தகைய தீர்மானத்தையும், நீதி அமைச்சர் அலி சப்ரியின் இத்தகைய ஆலோசனையையும் கடுமையாக எதிர்க்கின்றனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க தலைவி மரிய சுரேஸ் ஈஸ்வரி மற்றும், செயலாளர் பிரபாகரன் ரஞ்சனா ஆகியோர் 16.03.2022 இன்று ஊடக சந்திப்பொன்றினை ஏற்பாடுசெய்திருந்தனர்.

அவ் ஊடகசந்திப்பில் கருத்துவெளியிடும்போதே முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்க செயலாளர் பி.ரஞ்சனா மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஊடாக, காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நட்டஈடும், காணப்படவில்லை என்ற சான்றிதழ், அல்லது மரணச்சான்றிதழ் வழங்கிவைக்க இருப்பதாக அறிகின்றோம்.

அந்த மரணச்சான்றிதளோ, அல்லது காணவில்லை என்ற சான்றிதளோ எமக்குத் தேவையில்லை.

நாம் இராணுவத்திடம் எமது உறவுகளை ஒப்படைத்திருக்கின்றோம். அவ்வாறு ஒப்படைத்த உறவுகளை இவர்கள் என்ன செய்தார்கள்.

இந்த அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி, எமது உறவுகளின் பெறுமதி ஒரு இலட்சமா?

அந்த ஒருஇலட்சம் ரூபாய் பணமும் எமக்குத் தேவையில்லை. இந்த ஒரு இலட்சம்ரூபாய் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் இவ்வாறு வீதியில் இறங்கிப் போராடவில்லை.

இந்த அரசாங்கத்திடம் எமது உறவுகளைக் கேட்டு பதில் எதுவும் கிடைக்காத நிலையிலே, தற்போது நாம் சர்வதேசத்தினைக் கோரி நிற்கின்றோம். உள்ளகப் பொறிமுறையினை ஒருபோதும் நாம் நம்பப்போவதில்லை.

எமது உறவுகளின் உயிர் ஒரு இலட்சம் எனத் தீர்மானிப்பதற்கு இவர்கள் யார்?

நாம் எமது உறவுகளின் பெறுமதியினை நன்கு புரிந்து வைத்திருக்கின்றோம்.



எமது உறவுகளுப் பதிலாக இவர்கள் ஒரு இலட்சம் தர வேண்டாம். இவர்களுடைய ஒரு இலட்சம் ரூபாய் பணத்திற்கு மேலதிகமாக, பலமடங்கு தொகையை நாம் அரசாங்கத்திற்கு கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். நாம் அவர்களிடம் கையளித்த உறவுகளை எம்மிடம் கையளிக்கவேண்டும்.

நாம் அவர்களிடம் கையளித்த உறவுகளை அவர்கள் மீண்டும் எம்மிடம் கையளிக்கும்வரையில் எமது போராட்டம் தொடரும்.

ஒருபோதும் இலங்கை அரசாங்கத்தின் காணாமல் ஆக்கப்பட்டோரது அலுவலகத்தால் வழங்கப்படுகின்ற மரணச் சான்றிதளோ, காணாமல் போனசான்றிதளோ, நட்ட ஈடோ எங்களுக்குத் தேவையில்லை.

எமக்கான தீர்வு கிட்டும்வரை எமது போராட்டம் தொடரும் - என்றார்.

# ஒரு இலட்சம் ரூபாயை தந்து நீதியை இல்லாமல் ஒழிப்பதற்கே நீதியமைச்சர் முயல்கின்றார்

## வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டடோர் சங்கத்தின் செயலாளர் சி. ஜெனிற்றா

மார்ச் 16, 2022



ஒரு லட்சம் ரூபாயையும், சான்றிதழையும் தந்து நீதியை இல்லாமல் ஒழிப்பதற்காகவே நீதியமைச்சர் அலி சப்ரி இவ்வாறு கூறிக்கொண்டிருக்கின்றார் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,
நீதி அமைச்சரின் நடமாடும் சேவையில் காணாமல் போனோருக்கான அலுவலகம் வேண்டாம் என நாங்கள் கூறியிருந்தோம். இழப்பீடோ, மரணச்சான்றிதழோ தேவையில்லை என கூறியிருந்தோம். அப்படியிருந்தும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மீது திடீரென ஏன் அக்கறை வருகின்றது.

ஒரு லட்சம் ரூபா நிதியினை எமது உறவுகளுக்கு வழங்கி அந்த நிதியில் வாழ்க்கை செலவை கட்டியெழுப்ப முடியுமா? இந்த நிதியில் எமது உறவுகள் வாழ முடியுமா? நீதிக்காக இதுவரை காலமும் போராடி கொண்டிருந்தோமே தவிர ஒரு லட்சம் ரூபாவிற்காக போராடவில்லை.
யுத்தம் முடவடைந்து 13 வருடங்களை கடந்தும் எமது உறவுகளை தான் தேடிக்கொண்டிருக்கின்றோம். உறவுகளுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கி உறவுகளை திருப்திப்படுத்துவதாக நீதி அமைச்சர் கூறியிருக்கின்றார்.

எமது உறவுகள் நிதிக்காக போராடவில்லை. சர்வதேசமானது நீதி அமைச்சர் அலிசப்ரி கூறுகின்ற கூற்றையும், பதிவாளர் நாயகம் எடுத்திருக்கின்ற இந்த முடிவும் தவறானது. ஏனென்றால் நாங்கள் 13 வருடமாக தொடர்ச்சியாக வீதியோரத்தில் நின்று நிதிக்காகவோ, காணாமல் போனவர்களுக்கான சான்றிதழிற்காகவோ போராடவில்லை. எமக்கு நீதி தான் தேவையென்றே போராடி வருகின்றோம்.

சர்வதேசமானது இதனை கண்டித்து 49 ஆவது கூட்டத்தொடரிலாவது எமக்கு நீதி வழங்க ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையிலே காத்திருக்கின்றோம். ஒரு லட்சம் ரூபாயையும், காணாமல் போனவர்களுக்கான சான்றிதழையும் தந்து நீதியை இல்லாமல் ஒழிப்பதற்காகவே நீதியமைச்சர் அலி சப்ரி இவ்வாறு கூறிக்கொண்டிருக்கின்றார். இவரின் கருத்தை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இலங்கை அரசின் நீதி மறுக்கப்பட்ட போதுதான் சர்வதேசத்தை நோக்கி போராடி வருகின்றோம். இலங்கை அரசின் உள்ளக பொறிமுறையோ, காணாமல் போனோரின் அலுவலகமோ எமக்கு தேவையில்லை என்பதனை தான் கூறிக்கொண்டிருக்கின்றோம்.

இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி பொறுப்பு கூற வேண்டிய கடமை இருக்கிறது. ஏனென்றால் கையில் ஒப்படைக்கப்பட்டவர்களும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களும், இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வலுக்கட்டாயமாக கடத்தப்பட்டவர்களும் , இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்களையும் தான் நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கின்றோம்.

ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியா எமது உறவுகளின் பெறுமதி? இதனை ஊடக எமது உறவுகள் யாரும் வாங்க கூடாது என்பதனை ஊடக வாயிலாக தெரிவித்து கொள்கிறேன் என மேலும் தெரிவித்தார்.

# அரசியற் தீர்வு குறித்து பேசவா ஜனாதிபதி அழைக்கின்றார்? செல்வம் அடைக்கலநாதன் கேள்வி

மார்ச் 20, 2022

ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான சமிஞ்சை கிடைக்காத



வரையில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளப் போவதில்லை என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

கட்சியின் மட்டக்களப்பு அலுவலகத்தில் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி முதலில் இந்த நாட்டில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை ஒப்புக்கொண்டு வெளிப்படையாக கூறினால் மாத்திரமே பேச்சுவார்த்தைக்கு செல்வோம் என அவர் கூறினார்.

மேலும் கட்சியின் நிலைப்பாடு குறித்து பங்காளிக் கட்சிகளிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர்களும் இதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் புத்தர் சிலை நிறுவுகின்ற செயற்பாடு நேற்றும் நடைபெற்ற நிலையில் இந்த அரசாங்கம் இக்கட்டான நிலைமையில் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே அவர்களை காப்பாற்றும் செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது என்றும் குறிப்பிட்டார்.

மேலும் தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்ற நாடுகளினுடைய ஒட்டுமொத்த அழுத்தத்தைக் குறைப்பதற்காக தொடர்ந்து நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம் என்ற வாய்ப்பினை ஜனாதிபதி பெறப்போகின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு அரசியற் தீர்வுக்காத்தான் அழைக்கின்றார் என்று நாம் கற்பனையில் இருந்தாலும் எதற்காக பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றார் என்ற விடயம் ஜனாதிபதி செயலக நிகழ்ச்சி நிரலில் கூடச் சொல்லப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

# யாழில் மகிந்த ராஜபக்சவுன்கு எதிரான போராட்டத்திற்கு வந்தவர்களை பேருந்தில் இருந்து இறங்க விடாது தடுத்துவைத்த சிங்கள பொலிஸார்

மார்ச் 20, 2022



யாழ்ப்பாணம் வந்துள்ள சிறீலங்கா பிரதமர் மஹிந்த ராஜபக்சேவிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்த வந்த மக்கள் வீதியில் வழிமறிக்கப்பட்டு வாகன சாரதி பொலிசாரின் தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள மஹிந்த ராஜபக்சே இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டுவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்து வைக்கவுள்ளார்.

அந்நிலையில் குறித்த நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரதமரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுக்க திட்டமிடப்பட்டு இருந்தது.

அதில் கலந்து கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பேருந்தில் வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை மட்டுவில் அம்மன் கோவிலுக்கு அருகில் வழிமறித்த பொலிஸார், வாகனத்தில் இருந்து எவரையும் இறங்க விடாத வாறு, வாகனத்தின் இரு வாசல்களிலும் காவலுக்கு நிற்கும் நிலையில்,



சாரதியை கடுமையான விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர்.

இதேவேளை பொலிசாரின் காவலையும் மீறி பேருந்தில் இருந்து இறங்கிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதியில் அழுது புரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.







இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# எதிர்ப்பை அடுத்து கந்தரோடை செல்லும் திட்டத்தை கைவிட்ட மஹிந்த ராஜபக்ச

மார்ச் 19, 2022



பிரதமர் மஹிந்த ராஜபக்ச கந்தரோடை விகாரைக்கு வழிபடுவதற்காக செல்லவிருந்த தனது திட்டத்தை கைவிட்டு உள்ளாரென தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிறீலங்கா பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ இன்றைய தினம் மத தலங்களுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்நிலையில் அதன் ஒரு அங்கமாக கந்தரோடை விகாரைக்கும் சென்று வழிபட தீர்மானித்திருந்தார்.

கந்தரோடை விகாரையில் பிரதமர் அடிக்கல் நாட்டுவதாக செய்தி வெளியான நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீடிரென கந்தரோடை விகாரைக்கான தனது விஜயத்தை ரத்து செய்தார்.

இதனையடுத்து அப்பகுதியில் பிரதமரது பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கிருந்து விலகிச்சென்றமை குறிப்பிடத்தக்கது.





# வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மாரை தாக்குவதற்காகவா மகிந்த ராஜபக்ச யாழ் வந்தார்?

## வலிகாமம் கிழக்குப்பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்

மார்ச் 20, 2022

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜனநாயக ரீதியில் நீதி கேட்டு போராட முயற்சித்த போது, அவர்களை வழி மறித்து பஸ்களில் இருந்து இறங்கவிடாது அச்சுறுத்தி தாக்கிய சம்பவங்கள் இலங்கையின் ஆட்சி



யாளர்களிடத்தில் தொடரும் ஜனநாயக மறுப்பை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரதமரின் வருகையின் போது நீதி கேட்டு ஜனநாயக வழியில் போராடுவதற்காக வேவ வேறு மாவட்டங்களிலும் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்தனர். மட்டுவில் திறந்த வர்த்தக சந்தைப்பகுதி பிரதமர் மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்படும் போது, அமைதியாக கவனயீர்ப்பினை மேற்கொள்வதற்கு வலிந்த காணமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முயற்சித்தனர். இந் நிலையில் வலிந்து காணமலாக்கப்பட்ட தாய்மார் வருகை தந்த பேருந்து பொலிசாரினாலும் விசேட அதிரடிப்படையினராலும் வழிமறிக்கப்பட்டு கதவுகள் பூட்டப்பட்டு பேருந்தின் சாரதியின் ஆவணங்களும் பறிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டது. இதற்கு மேலாக நீதிக்காகப் போராடும் அந்த வயோதிபத் தாய்மார் மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர். தடியடிப்பிரயோகம், கட்டைகளாலும் அடிக்கப்பட்டு தூஷண வார்த்தைகளாலும் நிந்திக்கப்பட்டனர்.

இவ்வாறாக காட்டுமிராண்டித்தனம் நடைபெறுவதை யடுத்து மக்கள் பிரதிநிதி என்ற வகையில் நான் உடனடியாக அங்கு சென்றபோது அப்போது பிரதமர் மகிந்த ராஜபக்ச நிகழ்வை முடித்துக்கொண்டு வெளியேறியிருந்தார். அவரின் வெளியேற்றத்தையடுத்து பொலிசாராலும் இராணுவத்தினராலும் அடித்து குத்தி அடக்கிவைத்திருந்த மக்கள் விடுவிக்கப்பட்டு அவர்கள் குறித்த வர்த்தக கட்டிடத்தினை நோக்கி வந்தார்கள். தாக்குதல்களின் காரணமாக சாறி சட்டைகள் கிழிந்த நிலையில் அந்த தாய்மார் வருவதைக் கண்டேன். இதனைத் தொடர்ந்து நாமும் அவர்களுடன் இணைந்து ஜனநாய வழியில் போராடினோம். தாய்மார்கள் தாக்கப்படும் போது அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பிரதமருடன் மகிழ்ச்சியைக் கொண்டிக் கொண்டிருந்தனர்.

அடிப்படையில் ஜனாதிபதி உலகத்தினை ஏமாற்றுவதற்காக இங்கே தான் ஜனநாயக உரிமைகளுக்கு மட்டுப்பாடு விதிக்கவில்லை என ஐ.நாவில் உத்தரவாதம் கொடுத்திருக்கின்றார். ஆனால் வலிந்து காணாமலாக்கப்பட்டதலுக்கு முழுமையான காரணகர்த்தாவும் இன்றும் பொறுப்புச் சொல்லவேண்டிய பதவியில் உள்ளவருமான பிரதமர் மகிந்த ராஜபக்ச நீதிக்காக போராடும் அப்பாவித் தாய்மார்களை அவர்களது அமைதியான போராட்டத்தை கூட ஏற்க முடியாது ஆயுதம் ஏந்திய படைகளைக் கொண்டு உத்தரவிட்டு அடக்கியிருக்கின்றார். தனக்கு தொந்தரவு என்பதற்காக அந்தத் தாய்மார்களை கொன்றொழிக்கவும் இந்த அரசாங்கம் பின்னிற்காது என்பது வெளிப்படையானது.

அடிப்படையில் இலங்கையில் மனித உரிமைகள் ரீதியில் எதாவது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேசம் மடையர் ஆகிவிடக்கூடாது. இங்கே நியாயம் கேட்கும் சக்திகளை ஆயுத மற்றும் இதர அச்சுறுத்தல் வழிமுறைகள் ஊடாக அடக்கியாளவே அரசாங்கம் முயற்சிக்கின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்

# மட்டுவிலில் பரபரப்பு! மஹிந்த ராஜபக்சவிற்கு எதிர்பு தெரிவித்து போராட வந்தவர்களை வழிமறிந்து சிங்கள பொலிஸார் தீவிர விசாரணை

மார்ச் 01, 2022

யாழ்ப்பாணம் வந்துள்ள சிறீலங்கா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்த வந்த மக்கள் வீதியில் வழிமறிக்கப்பட்டு வாகனத்தை செலுத்திவந்த சாரதி பொலிசாரின் தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்து வைக்கவுள்ளார்.

அந்நிலையில் குறித்த நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரதமரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுக்க திட்டமிடப்பட்டு இருந்தது.



அதில் கலந்து கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பேருந்தில் வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலுக்கு அருகில் வழிமறித்த பொலிஸார், வாகனத்தில் இருந்து எவரையும் இறங்க விடாதவாறு, வாகனத்தின் இரு வாசல்களிலும் காவலுக்கு நிற்கும் நிலையில் , சாரதியை கடுமையான விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர்.

இதேவேளை பொலிசாரின் காவலையும் மீறி பேருந்தில் இருந்து இறங்கிய காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதியில் அழுது புரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டுவில் பொருளாதார மத்திய நிலைய பகுதியில் பெருமளவான பொலிஸார் , இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# இலங்கை ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சி

மார்ச் 30, 2022

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை இன்றைய தினம் 298.99 ரூபாவாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை இன்று 288.74 ரூபாவாக பதிவாகியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

# சர்வதேசத்தை ஏமாற்றும் முயற்சியில் சிங்கள அரசு

## நாடளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

மார்ச் 22, 2022

சர்வதேசத்தை ஏமாற்றும் முயற்சியில் சிங்கள அரசு தற்போதும் செயற்பட்டு வருகிறது என நாடளுமன்ற உறுப்பினர் எம்.எ சுமந்திரன் சபையில் இன்று தெரிவித்துள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத, நீதிமன்ற உத்தரவை மதிக்காமல், அரசியல் அமைப்புக்கு சாராமல் தயாரிக்கப்பட்டது தான் இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம். அன்று முதல் இன்று வரை அதனை பயன்படுத்தி தமிழ் மக்களைத் தான் பழிவாங்கிறார்கள். இப்போது சட்டத் திருத்தப்படுவதாக தெரிவித்து உலகை ஏமாற்றுகின்றனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு சட்டத்தை பயன்படுத்தி அரசு பழிவாங்குகின்றனர். இது தவிர பயங்கரவாத தடைச் சட்டம் வேண்டாம் என்று பலர் தெரிவித்த,எழுத்து மூலமான ஆவணங்களில், நீல நிற பேனையால் வேண்டும் என்றும் அதாவது "டாம்","டும்' (வேண்டாம், வேண்டும்) என்று பல பக்கங்களில் வேண்டும் வேண்டும் என்று மாற்றியுள்ளனர்.- என்றார்.

# சிறீலங்கா பிரதமர் மஹிந்தவின் வருகையை எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டம்!




மார்ச் 19 2022

சிறீலங்கா சிங்கள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாணத் திற்கான வருகையை எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டம் ஒன்றை இன்றைய தினம் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக 9.30 மணியளவில் ஒன்றுகூடிய போராட்டகாரர்கள் மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, அரசியல் கைதிகளை விடுதலை செய், காணாமலாக்கப்பட்டோரை கண்டறிய சர்வதேச விசாரணை வேண்டும், இனப்படு கொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், கந்தரோடையில் புத்தர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டாதே, நாவற்குழி சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்து போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இந்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் சட்ட ஆலோசகர் சுகாஸ் உட்பட கட்சியின் உறுப்பினர் கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிசாரும் புலனாய் வாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட் டிருந்தனர்

# யாழ் – மருத்துவமனையில் மருந்துப் பெருட்களுக்கு தட்டுப்பாடு! கண் சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தம்!

மார்ச் 22, 2022

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் பதில் பணிப்பாளர் வைத்தியர் மு.நந்தகுமார் தெரிவித் துள்ளார்.

மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை யினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கண் சத்திர சிகிச்சைக்கான மருந்துப் பொருட்கள் சில வற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.




அத்துடன் சில மருந்துப் பொருட்கள் குறைந்தளவிலேயே உள்ளன.

இதனாலேயே சத்திர சிகிச்சை பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மருந்துப் பொருட்களுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவை கிடைக்கும் பட்சத்தில் மீண்டும் சத்திர சிகிச்சைகள் முன்னெடுக்கப்படும் என யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் மு.நந்தகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்திற்கு முண்டுகொடுக்ககூடாது

**தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம்**

மார்ச் 11, 2022

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றால், தமிழ் கட்சிகள் அரசியல் தலைவர்கள் அரசுக்கு முண்டு கொடுக்க வேண்டாம், அழுத்தம் கொடுங்கள் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக பதவி ஏற்ற கோட்டபாய 2 ஆண்டுகள் 4 மாதங்கள் முடிவடைந்த பின்னே தமிழ்த் தேசிய கூட் டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

புதிய நிபுணர் குழு அறிக்கை வெளிவந்திருப்பதாகவும், மொழிபெயர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகின்ற போதிலும் அது பற்றிய கலந்துரை யாடல் நடத்தாமல் இடைக்கால பிரச்சினைகளை தீர்ப




பதாகவும் கோட்டபாய தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலையை மறுத்து, பயங்கரவாத தடைச் சட்டங்களை மீளப்பெறும் படி வலியுத்தியும் இன்று வரை ஒன்றும் நடைபெறவில்லை. நீதிமன்றத்தால் எந்தவொரு தண்டனைகளும் விதிக்கப் படாதவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பை வழங்க முடியும். ஆனால் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் ஒன்றும் நடைபெறவில்லை.

சிங்களத் தலைவர்களின் நாடகம் ஆடுகிறார்கள். என்ன தெரிவிப்பதாக இருந்தாலும் சர்வதேச மத்தியஸ்தகர் முன் னிலையில் பேசுங்கள். எந்தந்த இடங்களில் தீர்மானங் களை எடுத்தார்களோ அதற்கேற்ப வர்த்தமாணி அறிக் கையினை வெளியிட வேண்டும்.

இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்ள 20 சாசனங் களுக்கும், இலங்கை அரசாங்கம் தீர்வினை பெற்றுத் தராது. ஆகவே சர்வதேச அழுத்தத்தினால் தான் இதற்கு முடிவினை பெற்றுக்கொள்ளலாம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் உட்பட தமிழ் மக் களின் பிரச்சினைகளுக்கு, தமிழ் கட்சிகள் அரசுக்கு முண்டு கொடுக்க வேண்டாம், அழுத்தம் கொடுங்கள்.- என்றார்.

# எனது மகன் கடத்தப்பட்டுள்ளார்: ஆதாரங்கள் இருந்தும் சிறீலங்கா பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை

## வவுனியாவில் தாயார் ஒருவர் குற்றச்சாட்டு!

மார்ச் 27 2022

எனது மகன் கடத்தப்பட்டுள்ளார். ஆதாரங்கள் இருந்தும் பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என கடந்த ஜனவரி 27 ஆம் திகதி காணாமல் போன பாலகிருஸ்ணன் நிரேஸ் என்ற வவுனியா இளைஞனின் தாயார் திருமதி கணேஸ் பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் (27.03) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,




எனது மகன் பாலகிருஸ்ணன் நிரேஸ் அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி காணாமல் போயுள்ளார். அவர் தனது வீட்டில் இருந்து புறப்பட்டு குருமன்காடு பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு முன்னால் தனது மோட்டர் சைக்கிளை நிறுத்திவிட்டு அவ் வர்த்தக நிலையத்திற்கு காணாமல் போன தினம் பிற்பகல் 5.02 இற்கு சென்றுள்ளார்.

அதன்பிறகு அவன் தனது மோட்டர் சைக்கிளை எடுப்பதற்கு வெளியில் வரவில்லை. அவரது மோட்டர் சைக்கிளை 6.47 நிமிடத்திற்கு வேறு ஒருவர் வந்து எடுத்துச் செல்வதை சிசீரீவி வீடியோவில் காண முடிகிறது. இதனை நான் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளேன். இது தொடர்பில் நான் ஜனவரி 29 ஆம் திகதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்தேன்.

எனது மகனை காணவில்லை என நான் முறைப்பாடு செய்தேன். ஆனால் எனது மகன் இரண்டு நாளாக வீட்டிற்கு வரவில்லை என தான் முறைப்பாட்டு கொப்பியில் எழுதப்பட்டுள்ளது. நான் கொழும்பிலும் இது தொடர்பில் அண்மையில் முறைப்பாடு செய்துள்ளேன். பொலிசார் தேடிக் கொண்டிருப்பதாக கூறுகிறார்களே தவிர, இரண்டு மாதங்களுக்குள் எந்தவித காத்திரமான பதிலும் எனக்கு கிடைக்கவில்லை.

செட்டிகுளத்தில் இருந்து நபர் ஒருவர் என்னிடம் 15 இலட்சம் கப்பம் கோரினார். மூன்றரை இலட்சம் உடனடியாக தந்தால் மகனை விடுவதாக கூறியிருந்தார். அவர் பொலிஸ் முறைப்பாட்டு துண்டின் பிரதி, மகனின் போட்டோ, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் அவர்களின் கடிதம் என்பவற்றை தருமாறு கோரினார். நாம் குறித்த நபரின் குரல் பதிவை பதிவு செய்து பொலிசாரிடம் கொடுத்தோம். அதனடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். போதியளவிலான ஆதாரம் இல்லை என அவரை விடுவித்துள்ளதாக கூறுகிறார்கள். ஆனால் அந்த நபரை விசாரித்தால் எனது மகனை கண்டு பிடிக்க முடியும்.

எனது மகன் குருமன்காடு பகுதியில் உள்ள குறித்த வர்த்தக நிலையத்தில் தனது இரண்டரை வருட உழைப்பு பணத்தை வழங்கியுள்ளார். குறித்த வர்த்தக நிலையத்தின் முகாமையாளிடம் 85, 90 இலட்சம் ரூபாய் வரை செலுத்தியுள்ளார். தனது 30 ஆவது வயதில் மகன் புதிய தொழில் செய்ய திட்டமிட்டு இருந்தார். அந்தப் பணத்தைக் கேட்டு சென்ற போது தான் அவர் கடத்தப்பட்டுள்ளார். இதுவரை அவரை விடவில்லை. இரண்டு மாதம் கடந்து விட்டது. நான் ஒவ்வொரு இடமாக தேடி வருகின்றேன். ஊடகங்கள் மூலமாவது நீதி கிடைக்குமா என நம்பித் தான் இங்கு வந்துள்ளேன்.

எனது மகனை பிடித்து வைத்திருக்கிறார்கள். அவரை வைத்து என்ன செய்கிறார்களோ தெரியாது? எனது மகனின் மோட்டர் சைக்கிளும் இதுவரை இல்லை. அவரது வங்கி அட்டைகளும் இல்லை. அவரது வங்கி கணக்குகள் பொலிசாரிடம் கொடுத்தோம். அவர்கள் பார்க்கிறோம் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. குறித்த வர்த்தக நிலையத்திற்கு சென்ற நிலையிலேயே அவரை காணவில்லை. அதனால் அதன் உரிமையாளர் மற்றும் முகாமையாளர் தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்.

எனது மகன் தனது நண்பர் ஒருவரின் 5 இலட்சம் பணத்தை வாங்கி குறித்த வர்த்தக நிலையத்திற்கு வழங்கியுள் ளார். எனது மகன் காணாமல் போன பின் மகனின் நண்பர் குறித்த வாத்தக நிலையத்திற்கு சென்று தனது 5 இலட்சம் பணத்தை தருமாறு கோரினார். இதன்போது நிரேஸ் கொடுக்கச் சொன்னது என்று கூறி 5 இலட்சம் பணத்தை கொடுத்துள்ளனர். எனது மகன் காணாமல் போன பின் தான் இந்தச் சம்பவம் நடந்தது. மகன் பணத்தை எப்போது கொடுக்கச் சொன்னவர் என்பதை அறிய வேண்டும். எனவே எனது மகன் கடத்தப்பட்டுள்ளார். அவர் கண்டுபிடிக்க பொலிசார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# வவுனியாவில் வனவளத் திணைக்களகத்தினரின் செயற்பாட்டிற்க்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

மார்ச் 282022

கால்நடைகளுக்கான மேச்சல் தரையை வனவளத் திணைக்களகத்தினர் வேலி போட்டு அடைப்பதாக தெரிவித்து வவுனியா மதுராநகர் மற்றும் இத்திக்குளம்



பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா மதுராநகர் கிராமத்தின் பின்புறமாக உள்ள வனவளத்திணைக்களகத்தினருக்கு உரிய காணியில் குறித்த பகுதியை சேர்ந்த 6 கிராமங்களை சேர்ந்த மக்களின் கால்நடைகள் மேச்சலுக்காக சென்று வரும் நிலையில் கடந்த சில நாட்களாக வனவளத்திணைக் களகத்தினர் குறித்த பகுதிக்குள் கால்நடைகள் வருவதை தடை செய்யும் வகையில் வேலி அமைத்து கால்நடை வளர்ப்பாளர்களையும் அச்சுறுத்தி வந்துள்ளனர்.

இதன் காரணமாக தமது கால்நடைகளுக்கு உணவு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த பகுதிக்குள் காணப்படும் குளத்தின் நீரேந்து பிரதேசத்திலேயே கால்நடைகள் நீரை பருகுவதால் தற்போது அதுவும் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கிராம மக்கள் தமது கால்நடைகளை மேய்ப்பதற்கான இடத்தினை வேலி போட்டு அடைப்பதனை வனவளத்திணைக்களகத்தினர் நிறுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்திக்குளம் காட்டு அம்மன் ஆலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுமார் 6 கிராமங்களை சேர்ந்த 2000 கால்நடைகளின் மேச்சல் தரை இல்லாமல் போவதாகவும் தாம் கால்நடை வளர்ப்பை கைவிட்டு கிராமத்தினை விட்டு இடம்பெயர வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த நிலையில் ஊர்வலமாக சுமார் 3 கிலோ மீற்றர் சென்று மதுராநகர் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்நிலையில் குறித்த பகுதிக்கு வருகை தந்த வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கு. திலீபனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது பிரச்சனைகளை தெரிவித்ததை அடுத்து குறித்த பகுதிக்கு வனவளத்திணைக் களகத்தினரை வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் பணித்திருந்தார்.



இதனையடுத்து அங்கு வந்த வனவளத்திணைக் களகத் தினரிடம் குறித்த வேலி அமைக்கும் பணியை தற்காலிக மாக கைவிடுமாறும் மக்கள் கால்நடைகளை மேய்ப் பதற்கு தடை ஏற்படுத்த வேண்டாம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

எனினும் வனவளத் திணைக்களத்தினர் குறித்த பகுதியில் வனம் உருவாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்திருந்தனர்.

எனினும் எதிர்வரும் புதன்கிழமை அரசாங்க அதிபர் தலைமையில் வனவளத்திணைக்களகத்தினர் கிராம மக்கள் சந்தித்து குறித்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் எனவும் அதுவரை வனவளத்திணைக் களகத்தினர் பொது மக்கள் கால்நடைகளை குறித்த பகுதிக்குள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல அனுமதிக்குமாறு தெரிவித்திருந்தார்.

இதற்கு சம்மதம் தெரிவித்த வனவளத்திணைக்களகத்தினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களும் குறித்த பகுதியில் இருந்து கலைந்து சென்றிருந்தனர்.

# எரியும் இலங்கை! அழிக்கப்படுகிறதா இந்து கோவில்கள்?

## கே.எஸ். இராதாகிருஷ்ணன்

மார்ச் 25 2022

நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த சைவ ஆலயங்களிலும் சமய இலக்கியங்கள் மற்றும் ஏட்டுச் சுவடிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள சைவ ஆலயங்கள் பலவற்றில் பௌத்தத் தொல்லியல் அடையாளங்கள் இருப்பதாக இலங்கைத் தொல்லியல் துறை கடந்த 10 ஆண்டுகளாக உரிமை கோரி வருகின்றது.

அவற்றில் சில:

1. ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம் ஆலயம்
2. மாந்தை கிழக்கு பத்திரகாளி அம்மன் கோயில்
3. குமாரபுரம் சிறீ சித்திரவேலாயுதம் முருகன் கோயில்
4. குமுழமுனை ஆஞ்சனேயர் கோயில்
5. பாண்டியன்குளம் சிவன் கோயில்
6. வவுனிக்குளம் சிவபுரம் சிறீமலை கோயில்
7. குமுழமுனை குறிஞ்சிக்குமரன் கோயில்
8. மன்னார் திருக்கேதீஸ்வரக் கோயில்
9. மயிலிட்டி போர்த்துகேயர் கோயில்
10. ஒதியமலை வைரவர் கோயில்
11. முள்ளியவளை குமாரபுரம் முருகன் கோயில்
12. திருகோணமலை தென்னமரவடி கந்தசாமிமலை
13. செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம்
14. புல்மோட்டை அரிசி ஆலை மலைக் கோயில்
15. வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம்
16. மூதூர், சூடைக்குடா மலைப்பகுதி முருகன் ஆலயம்
17. திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம்
18. மூன்றுமுறிப்பு கண்ணகி அம்மன்
19. சிவபுரம் சிவாலயம்
20. மாந்தை கிழக்கு ஆதிசிவன் கோயில்
21. குஞ்சுமப்ப பெரியசாமி கோயில்
22. ஸ்ரீமலை நீலியம்மன் கோயில்
23. கல்லுமலை பிள்ளையார் கோயில்
24. மட்டக்களப்பு தாந்தாமலை ஆலயம்
25. மட்டக்களப்பு கச்சக்கொடி சுவாமிமலை
26. குருந்தூர்மலை ஆதி ஐயனார் கோயில்
27. மட்டக்களப்பு, சித்தாண்டி முருகன் ஆலயம்
28. கன்னியா வெந்நீர் ஊற்று
29. உருத்திரபுரம் சிவன் கோயில்
30. குசலமலை சைவ குமரன் ஆலயம்
31. காங்கேசன்துறை சைவ ஆலயம்
32. வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலயம்

மேற்குறிப்பிட்ட ஆலயங்களில், திருகோணமலை, கோணேஸ்வரம் கோயிலில், நிர்மாணிக்கப்பட்டு வந்த சகல கட்டுமானங்களையும் தொல்லியல் திணைக்களம் 2015 ஆம் ஆண்டு முதல் தடுத்து வருகிறது. குறிப்பாக, இந்தக் கோயில் வளாகத்தில் இருக்கின்ற கட்டுமானங்களில் 99 சதவீதமானவை, சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும் அந்த இடம் பௌத்த மதத்திற்கு உரியது என்றும் அறிவித்துள்ளனர்.

அதேநேரம், கிழக்கு மாகாணத் தொல்லியல் தொடர்பான குடியரசுத் தலைவர் செயலணியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர், திருக்கோணேஸ்வர ஆலயம் அனுராதபுர காலத்தில் கட்டப்பட்ட கோகண்ண விகாரை மீதே கட்டப்பட்டுள்ளது என்று உரிமை கோரியிருக்கிறார். அதேபோல, திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீமலை நீலியம்மன் கோயில் அழிக்கப்பட்டுக் கோயில் வளாகத்தில் பாஷண பப்பாத ராஜமஹா விகாரை (Pashana Pabbatha Rajamaha Vihara) என்கிற பௌத்த ஆலயத்தையும் அமைத்திருக்கிறார்கள்.

இதுமட்டுமின்றி திருகோணமலை மாவட்டத்தில் முகத்துவாரம் பிரதேசத்தில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த குஞ்சுமப்ப பெரியசாமி கோயில் முழுமையாக அழிக்கப்பட்டு அந்த கோயில் இருந்த இடத்தில இப்போது 'லங்கா பட்டுன சமுத்திரகிரி' என்கிற பெயரில் புதிய விகாரை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது.

திருகோணமலையில் பட்டணமும் சூழலும் பிரதேச சபை நிர்வாகத்தில் இருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுகள் மத்திய அரசின் தொல்லியல் திணைக்களத்துக்குக் கீழ் கொண்டு வரப்பட்டு பௌத்த மத அடையாளங்கள் இருப்பதாக உரிமை கோருகிறார்கள்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை தென்னமரவடி கந்தசாமி மலை ஆலயத்தில் வழிபாடு நடத்த தொல்லியல் திணைக்களம் தடை விதித்துள்ளது. கந்தசாமி மலை பௌத்த மத பூமி என உரிமை கோரி இருக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை நீராவியடி பிள்



ளையார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக புத்தர் சிலை ஒன்றை நிறுவியுள்ளனர். நீதிமன்ற உத்தரவுகளை மீறி கோயில் வளாகத்தில் புத்த பிக்கு ஒருவரின் இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டன.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாடுகள் நடத்த தொடர்ச்சியாக தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருவதோடு ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

குருந்தூர்மலை ஆதி ஐயனார் கோயில் சூலத்தை அகற்றியதோடு நீதிமன்ற உத்தரவுகளை மீறி பௌத்த விகாரை ஒன்றை நிறுவும் வேலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த ஆலயச் சூழலில் குருந்த அசோகராம என்கிற புராதன பௌத்த ஆலயம் இருந்ததாக தொல்லியல் திணைக்களம் உரிமை கோருகின்றது

காங்கேசன்துறையில் உள்ள சைவ ஆலயம் ஒன்று இடிக்கப்பட்டு ஆலய சூழலில் கெமுனு விகாரை என்கிற பெயரில் பௌத்த விகாரை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலமலை சைவ குமரன் ஆலயச் சூழலில் பௌத்த மத அடையாளங்கள் இருப்பதாக பௌத்த பிக்குகள் உரிமை கோரி வரும் நிலையில் ஆலயத்தின் முன் கதவு, கருவறை விக்கிரம் அடித்து நொறுக்கப்பட்டு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தாய்மாருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதிக்கு எதிராக குரல்கொடுக்க அணி திரளுங்கள்

## வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி யோ. கனகரஞ்சினி

மார்ச் 27 2022

யாழ்ப்பாணத்தில் பிரதமரின் வருகையின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தாய்மாருக்கு எதிராக பொலிஸாரால் கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதிக்கு எதிராக குரல்கொடுக்க அணி திரளுங்கள் என வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி யோ. கனகரஞ்சினி தெரிவித்தார்.

எதிர்வரும் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள பேரணி தொடர்பில் வவுனியா மாவட்ட பொது அமைப்புகளுக்கு விளக்கமளித்தும் ஆதரவு கோரியும் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,
பிரதமர் மகிந்தவின் யாழ் வருகையை எதிர்த்து கண்டன பேரணியை நடாத்துவதற்காக நாம் சென்றிருந்தபோது எமது தாய்மார் மீது கண்மூடித்தனமான தாக்குதல் பொலிஸாரால் நடத்தப்பட்டது.

கொடூர யுத்தத்தினையும் இன அழிப்பையும் மேற்கொண்ட இந்த அரசாங்கம் ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் இந்நிலையில் வடக்கு கிழக்கிற்கு வருகை தந்து எங்களுடைய பெறுமதி மிக்க பிள்ளைகளின் எங்களுடைய உறவுகளின் இரத்தத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தினை திறந்து வைப்பதற்காக எவ்வாறு வரலாம்.

அவருடைய வருகை போலித்தனமான வருகை. அவர் இங்கு வந்ததற்கான காரணம் எமது பகுதிகளில் நில ஆக்கிரமிப்பை செய்து பௌத்த விகாரைகளை அமைத்து பௌத்தத்தினை பரப்புவதற்காகவேயாகும்.



எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது அவர்கள் என்ன ஆனார்கள்?என இந்த அரசாங்கம் கூற முடியாது போது எங்களுடைய பிள்ளைகள் தவழ்ந்து நடந்து திரிந்த மண்ணிலே வந்து நிகழ்வுகளை நடத்த என்ன தேவை ஏற்பட்டுள்ளது. எனவே நாம் அதனை எதிர்த்தோம்.

இந்த கொடூர யுத்தத்தினையும் இன அழிப்பினையும் மேற் கொண்ட இந்த அரசானது அன்றைய தினம் எங்களுக்கு செய்த துன்புறுத்தல்கள் எங்களுக்கான அநியாயங்கள் மானபங்கப்படுத்தி கட்டிய மனைவியை கூட கணவன் தொட்டிராத இடங்களிலெல்லாம் இந்த வயது முதிர்ந்த அம்மாக்களை தொட்டு அடித்து இரும்பு கம்பிகளால் தாக் கினார்கள்.

உண்மைக்கும் நீதிக்குமாக போராடும் எம் தாய்மாருக்கு நடந்த அநீதியை கண்டித்து எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 யாழ்ப்பாணம் பழைய பேரூந்து நிலையத்தில் இருந்து முத்தவெளி மைதானம் வரையும் கண்டன பேரணியை நடத்தவுள்ளோம்.

மட்டுவிலில் இடம்பெற்ற அநீதிக்கு எதிராகவும் அதனை கண்டித்தும் இவ்வாறான அராஜகங்கள் இனிமேல் நடக்க கூடாது என்பதற்காகவும் ஏற்பாடு செய்துள்ளோம்.

எனவே ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருக்கும் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளூர் அமைப்புக்கள் வர்த்தக சங்கங்கள் உட்பட அனைத்து பொது அமைப்புக்கள் விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரும் கலந்து கொண்ட அநீதிக்கு விராக குரல்கொடுக்குமாறு அழைக்கின்றோம் என தெரிவித்தார்.

# இந்திய தமிழக மீனவர்களுடன் எந்த ஒரு பேச்சு வார்த்தையிலும் கலந்து கொள்ளப் போவதில்லை!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் என்.எம். ஆலம்

மார்ச் 30, 2022

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் ஸ்தம் பிதம் அடைந்துள்ளதோடு, எமது முயற்சிகள் வெற்றியளிக் கப்படாமல் இருக்கின்றது என வடமாகாண கடற் றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் இன்று புதன்கிழமை (30) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதோடு, வெற்றி அளிக்கப்படாமல் இருக்கின்றது.

நாங்கள் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளையும் ஆர்ப் பாட்டங்களையும் நடத்திய போதும் இன்னும் இந்திய மீன வர்களின் அத்துமீறல்கள் குறைவடையவில்லை.

புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் ஊடாக இதற்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்று நம்பி இருந்த போதும் உரிய கடற்றொழில் அமைச்சரினால் எந்த ஒரு நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை.

இரண்டு வருடங்கள் கடந்தும் அதற்கான எந்த ஒரு தீர்வும் கிடைக்கவில்லை.

அண்மையில் கச்சதீவில் இந்திய மீனவர்களுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தி இருக்கிறார்கள். அந்தக் கலந் துரையாடலில் உரிய விடயங்கள் எதுவும் பேசப்பட வில்லை.

ஆனால் இந்திய தரப்பால் இலங்கை மீனவர்களுடன் பேசுவோம். பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வோம் என்று அவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

வட பகுதி மீனவர்கள் என்ற வகையில் இந்திய தமிழக மீனவர்களுடன் எந்த ஒரு பேச்சுவார்த்தையிலும் கலந்து கொள்ளப் போவதில்லை என்ற செய்தியை நாங்கள் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக நீண்ட வரி சையில் நின்று எரிபொருள்களை மீனவர்களும் பொது மக்களும் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்.

இந்த நெருக்கடி நிலை ஏன் ஏற்பட்டது என்று எங்களுக்கு விளங்கவில்லை. குறிப்பாக வட பகுதிக்கு வருகின்ற எரி பொருட்களை சமமாக பங்கிட்டு ஒரு படகுக்கு இவ்வளவு தான் என்று முறையாக செயல்படும் போது இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும்.

இது தொடர்பாக நாங்கள் செவ்வாய்க்கிழமை (29) மன் னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையா டலின் போது மாவட்ட செயலாளரிடம் தெரிவித்திருந் தோம்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கத்தில் 33 சங் கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் கண்ணாடி இழை படகுகள் 3500 இருக்கிறது. ஒரு படகுக்கு கிட்டத்தட்ட 30 லிட்டர் எரிபொருள் தேவை என்று பார்த்தாலம் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் எரிபொருள் தேவைப் படுகிறது.

எனவே வருகின்ற எரிபொருட்களை சமமாக பங்கிட்டு வழங்கியிருந்தால் மீனவர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் நிற்க வேண்டிய தேவை இருக்காது.

மீனவர்களுக்கான எரிபொருட்களை மீன்பிடி சங்கங் களுக்கு வழங்கி அந்த சங்கங்களின் ஊடாக அங்கத்த வர்களுக்கு வழங்குவது இலகுவாக இருக்கும்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலங்களில் நாங்கள் இதையே மேற்கொண்டோம்.
பொதுமக்கள் தங்களுக்கு தேவையான எரிபொருளை எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக பூர்த்தி செய்து கொள்வார்கள் குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மாவட்ட கடற்தொழில் உதவி ஆணையாளர் போன்றவர்களுக்கு தெளிவுபடுத்தி இருக் கின்றோம்.

எனவே மாவட்டத்தில் இயங்கும் எரிபொருள் வழங்கும் நிலையங்கள் மீனவர்களுக்கான எரிபொருட்களை மீனவ சங்கங்களுக்கு பகிர்ந்தளித்து மீனவர்களின் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் செயல்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதி கைவிடமாட்டார்!

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந. சிறீகாந்தா

மார்ச் 26.2022

பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனா திபதியும் மற்றும் பிரதமர் உட்பட ஏனைய பிரதான அமைச் சர்களும் கைவிடுவார்கள் என்று எங்களில் யாராவது நம்பினால், அதைவிட அரசியல் அறியாமை வேறு இருக்கவே முடியாது என தமிழ்த் தேசியக் கட்சியின்



தலைவர் ந. சிறீகாந்தா தெரிவித்தார்.

அவர் இன்றைய தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத் துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ் விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், கூட்டமைப்புடன் நேற்று நிகழ்ந்த உயர்மட்ட பேச்சு வார்த்தைகளில், அரசாங்கத் தரப்பினால் மேலோட்டமான முறையில் வாக்குறுதிகள் தாராளமாகவழங்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழர் தாயகமான வடக்கு மற்றும் கிழக்குமாகாணங்களில் அரசாங்கத்தின் சார்பில் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கும் சகல அத்துமீறல்களும் அடாவடி நடவடிக்கைகளும் உடனடி யாக நிறுத்தப்படாத வரையில், இந்த வாக்குறுதிகள் எல்லாம் விரைவில் அர்த்தம் அற்றுப் போய்விடும்.

அத்துடன், அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்து வதற்கான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப் பதிலும், நீண்ட பல வருடங்களாக சிறைக்குள் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை, காலதாமதம் செய்யாமல் விரைவாக விடுவிப்பதிலும் அரசாங்கத்திற்குளந்த தடை யும் இருக்க முடியாது. இந்த விவகாரங்களில் ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளே அரசாங்கத்திடம் எதிர்பார்க்கப் படுகின்றன. அடுத்து வரும் ஒரு சில வாரங்களில் தனது வாக்குறுதிகளின் விடயத்தில் அரசாங்கம் தன்னைத் தானே நிரூபித்தாக வேண்டும். காலத்திற்கு காலம் சிங் கள ஆட்சியாளர்கள் தமது உடனடி அரசியல். தேவை களுக்காக வழங்கிச் சென்ற வாக்குறுதிகள் எல்லாம் தமிழர் மனங்களில் இப்பொழுதும் பசுமையாகவே உள்ளன.

1977ல், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் காலத்தில் இருந்து 40 வருடங்கள் கழித்து சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலம் வரையில், தேர்தலில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைகளுக்கு சிங்கள ஆட்சித் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கிய வாக்குறுதிகள்காற்றில் பறக் கவிடப்பட்டதை கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் உட்பட உரிமை கோரும் தமிழர்கள் எவரும் மறந்துவிட முடியாது. வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிகள் சிக்கி திணறிக் கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியாவின் உதவியும், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகளின் ஆதரவும் அவசரமாக தேவைப் படும் இக்கட்டான இந்த நேரத்தில், தமிழர்களை தான் அனுசரித்துப் போவதான ஓர் தோற்றப்பாட்டினை காட் டுவதற்கு அது முயற்சிக்கின்றது என்பது தெட்டத்தெளி வானது.

தமது பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதியும் மற்றும் பிரதமர் உட்பட ஏனைய பிரதான அமைச்சர்களும் கைவிடுவார்கள் என்று எங்களில் யாராவது நம்பினால், அதைவிட அரசியல் அறியாமை வேறு இருக்கவே முடியாது. காணமலாக்கப்பட்ட தமிழர் களின் விவகாரத்தில், இந்த அரசாங்கம் எதுவும் செய்ய மாட்டாது. அப்படிச் செய்வதாக, இருந்தால் தமக்குத் தாமே படுகுழிதோண்டுவதாகவே அது இருக்கும் என்பதும் அரசாங்கத் தலைவர்களுக்கு நன்கு தெரியும். அதனாலத் தான் காசைத் தந்து, கண்ணீர் விடும் உறவுகளின் வாய்களை மூட வைக்கலாம் என்ற முட்டாள்த்தனமான சிந்தனை மேலோங்கி நிற்கின்றது.

இந்த நிலைமையில், தமக்குள் பரஸ்பர விமர்சனங் களையும், குற்றச்சாட்டுக்களையும் தமிழர் தரப்பு தவிர்த் துக் கொண்டு, இன்றைய சூழ்நிலையை இனி எப்படி பயன் படுத்துவது என்று சிந்திக்க வேண்டும். விசுவாசத்துடன் சொல்வதானால், அடுத்த கட்ட பேச்சுவார்த்தை என்பது நடக்குமாக இருந்தால், எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த போது உத்தியோகபூர்வமாக தனக்கு வழங் கப்பட்டு, இப்பொழுதும் அரசாங்கத்தின்தயவில் தான் தொடர்ந்து வசித்து வரும் ஆடம்பர அரச மாளிகையை மீண்டும்அரசாங்கத்திடம் கையளித்து விட்டு, ஓர் பாராளு மன்ற உறுப்பினர் என்றமுறையில் தனக்கு தரப்பட வேண் டிய அரசாங்க குடியிருப்பு தொகுதி வீடு ஒன்றிலிருந்து, அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள சம்பந்தன் வரமுடியுமாக இருந்தால், பேச்சுவாரர்த்தை மேசையில் அவரின் ஆக்ரோச குரலுக்கு பலமடங்கு பலம் சேரும்.

ஏற்கனவே, பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள நிபந் தனை விதிக்கப்படவேண்டும் என்ற ரெலோவின் நிலைப் பாடு, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனாலும் அதன் ஏனைய இரண்டு கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்ட நிலை யில், அதிலிருந்துரெலோ ஒதுங்கி நின்றதன் மூலம், பேச்சு வார்த்தை மேசையில் சம்பந்தனின் குரலுக்கு எதிர் மறையான முறையில் வலு சேர்க்கப்பட்டிருக்கின்றது என் பதை குறிப்பிட்டாக வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மனித உரிமை செயற்பாட்டாளரான கனடிய ஈழத்தமிழ்ப் பெண் மீது அமெரிக்காவில் துப்பாக்கி சூடு

மார்ச் 16, 2022

மனித உரிமை செயற்பாட்டாளரும், ஒருங்கிணைந்த சர்வதேச பெண்கள் அமைப்பின் நிறுவுனருமான இலங்கை தமிழ்ப் பெண் ராஜி பற்ரிசன் பயணித்த வாகனம் மீது அமெரிக்காவில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினரான டானி டேவிஸால் ஒழுங்குபடுத்தபட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள சென்றிருந்த ராஜி அங்கு வழங்கப்பட விருது ஒன்றிற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தார்.

நிகழ்வுக்கு குடும்ப சகிதம் சிகாகோவின் நெடுஞ்சாலை வழியே மகிழுந்தில் சென்று கொண்டிருந்த வேளை பக்கவாட்டாக வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் வாகன கண்ணாடி வழியே சுட்டுவிட்டு வேகமாக தப்பிச் சென்றுள்ளனர்.

வழமைக்கு மாறாக பக்கவாட்டில் திரும்பி இருந்ததால் ராஜி மயிரிழையில் உயிர்தப்பி உள்ளார். இச்சம்பவம் சம்பவம் தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்படத்தை அடுத்து அவர்கள் விரைந்து வந்து ராஜியை மீட்டு அவசர சிகிச்சை வாகனம் மூலம் வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்ததாக தெரியவருகிறது. சிக்காக்கோ பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அவர் தான் எழுதிய  நூலின் பிரதிகளை அந்நிகழ்வில் கலந்து கொள்ள இருந்த முக்கிய காங்கிரஸ் பிரமுகர்களுக்கு வழங்குவதற்காக எடுத்துச் சென்றிருந்தார்.



இது சிறீலங்கா அரச சதியா?

# ஸ்காபரோவில் முதல் மருத்துவக் கல்லூரி அறிமுகம்

மார்ச் 17, 2022




முதன்முதலாக ஸ்காபரோவில் மருத்துவப் படிப்புக்கான துறையை அறிவிப்பதில் நான் பெருமைகொள்கிறேன்.

ஒன்றாறியோ அரசாங்கம், ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாக மருத்துவப் பிரிவு மற்றும் ஒருங்கிணைந்த சுகாதாரப் பிரிவு புதிதாக 30 இளங்கலைப் படிப்புக்கான இடங்களையும் 45 முதுகலைப் படிப்புக்கான இடங்களையும் கொண்டு அமையவுள்ளதென அறிவித்துள்ளது.

ஒன்றாறியோவில் மருத்துவப் படிப்பை நாம் கணிசமானளவு விரிவுபடுத்துவதுடன், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 295 முதுகலைப் படிப்புக்கான இடங்களையும் 160 இளங்கலைப் படிப்புக்கான இடங்களையும் ஒன்றாறியோவில் உருவாக்கவுள்ளோம்.

இது 10 ஆண்டுகளில் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்விக்கான மிகப்பெரிய விரிவாக்கமாகக் கருதப்படுகிறது.




மேலும் இதுபற்றிய விபரங்களை அறிந்துகொள்ள பின்வரும் இணைய பக்கத்தைப் பார்வையிடவும்:
https://news.ontario.ca/en/release/1001773/ontario-training-more-doctors-as-it-builds-a-more-resilient-health-care-system

# வன்னிப்பிரதேச மாணவர்களின் கல்விக்கு கரம் கொடுப்போம்

மார்ச் 20, 2022

கனடா வன்னிச் சங்கமானது கடந்த 25 ஆண்டுகளாக தாயகத்தில் உள்ள பெற்றோர்களை இழந்த, மாற்றுத் திறனாளியான அல்லது வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை, பல்கலைக் கழக மாணவர் களுக் கானபுலமைப்பரிசில் மற்றும் பின் தங்கிய கிராம பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் போன்ற வற்றினை வழங்கி வருகின்றமையாவரும் அறிந்ததே.

அந்த வகையில் இவ் வருடம் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு 5 பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வினாவிடைப் புத்தகங்களைப் புதிதாகப் பதிப்புச் செய்து இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகப் புத்தகங்களை அச்சிட்டு வழங்க போதியளவு நிதி வசதியின்மை எங்களிடம் உள்ளது. எனவே எங்கள் தமிழ் மாணவர்களின் அக்கறை கொண்ட கொடையாளர்களாகிய உங்கள் உதவியினை நாடி நிற்கின்றோம். வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழ்கின்ற வருவாய் குன்றிய மாணவர்களது கல்வி முன்னேற்றங்கருதி உங்களிடமிருந்து சிறு சிறு தொகையாகவேனும் நிதியுதவி தாருங்கள் என அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களால் மனமுவந்து தரப்படுகின்ற கல்வி உதவித் தொகைகள் அனைத்திற்கும் வருமானவரிக் கழிவு பற்றுச்சீட்டு (Charitable Donation Receipts) வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

"நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்"

பொ. சிவசுதன்
செயலாளர்.
கனடா வன்னிச் சங்கம்
தொடர்புகளுக்கு
416-644-1113
416-558-1917

வருமான வரி சேவை Income Tax preparation
100% FREE For Health Care Workers
50% OFF For Frontline Workers & First Time Filers
SCAN ME
File Your TAXES Remotely www.etaxcan.ca
etaxcan
ETAXCAN FINANCIAL CORP.
10 MILNER BUSINESS COURT, 3RD FLOOR
SCARBOROUGH ON M1B 3C6
Walk-In & Online Services Are Available - 7 Days 9am to 9pm
416-869-8265

# சர்வதேச நாணய நிதியம் வழங்கும் நிதியை இலங்கை அரசாங்கம் இராணுவ செலவீனங்களிற்கு பயன்படுத்தலாம்!

## ஹரி ஆனந்த சங்கரி சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதம்

மார்ச் 21, 2022

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள நிதி உதவியை அரசாங்கம் இராணுவ செலவீனங்களிற்காக பயன்படுத்தலாம் என கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,
கனடாவின் Scarborough Rough Parks on ontario தொகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் இலங்கையில் மோசமடையும் பொருளாதார நிலைமையை நான் ஆழ்ந்த கரிசனையுடன் அவதானித்து வருகின்றேன். அதிலிருந்து விடுபடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளதாக அறிகின்றேன்.




இலங்கையின் கட்டுக்கடங்காத இராணுவ செலவீனங்களிற்காக சர்வதேச நாணயநிதியம் அந்த நாட்டை பொறுப்பாளியாக்கவேணடும் இலங்கை அந்த செலவீனத்தை குறைக்கவேண்டும் என நிபந்தனை விதிக்க வேண்டும் - இலங்கை சமாதானம் பொறுப்புக்கூறல் - நல்லிணக்கம் ஆகியவற்றை முன்னெடுப்பதை உறுதி செய்யவேண்டும் என்பதையும் வலியுறுத்துவதற்காக இந்த கடிதத்தை எழுதுகின்றேன்.

அந்நிய செலாவணி கையிருப்பு குறைவடைந்து வருவதாலும், வெளிநாட்டு கடன்களை மீள செலுத்தமுடியாத நிலையேற்பட்டுள்ளதாலும். 1948 இல் சுதந்திரமடைந்த பின்னர் இலங்கை தனது மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களிற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர் - சமூகத்தின் பலவீனமான நிலையில் உள்ள மக்கள் கைவிடப்படுகின்றனர் சமூகம் உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலும் அரசாங்கம் கடந்த வருடத்தை விட பாதுகாப்பு செலவீனத்தை 14 வீதம் அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் மொத்த செலவீனத்தில் இது 15 வீதமாக காணப்படும், சர்வதே நாணய நிதியம் நிதிவழங்கும் சாத்தியக்கூறுகள் உள்ளதால் இலங்கையில் மில்லியன் கணக்காண மக்கள் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தருணத்தில் இந்த நிதி வழமை போல இராணுவத்தினருக்கு ஆதரவளிப்பதற்கு பயன்படுத்தலாம்.

இலங்கை நீண்டகாலமாகவே களங்கப்படுத்தப்பட்ட மனித உரிமை வரலாற்றை கொண்டுள்ளதுஇராணுவ செலவீனங்கள் தற்போதைய அதிதேசியவாத அரசாங்கத்தின் ஆபத்தான கருத்துக்களை அதிகரிப்பதுடன் தமிழர் தாயகப் பகுதிகளில் இனப்படுகொலைக்கான நிதியையும் அதிகரிக்கின்றது.

இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தின் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பிரதமர் மகிந்த ராஜபக்ச நிதியமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோர் பாரதூரமான சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளனர் அவர்கள் அதற்கான நீதியிலிருந்து தப்பியுள்ளனர்.

தங்களுடைய தவறான நிர்வாகம் மற்றும் பரம்பரை ஆட்சி குறித்த அதீத மோகம் காரணமாக இலங்கை மண்டியிடும் நிலையை ராஜபக்சாக்கள் ஏற்படுத்தியுள்ளமை குறித்து சர்வதேச நாணயநிதியம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இலங்கையை தற்போதைய நிலையிலிருந்து விடுவிப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் முயற்சிகள் வெளிப்படைத்தன்மை பொறுப்புக்கூறல் சட்டத்தின் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்துதல் அரசியல் தீர்வு மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய பாதை ஆகியவற்றை உறுதி செய்யவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரினதும் ஐநாவின் ஏனைய நிபுணர்களினதும் பல அறிக்கைகள் இராணுவம் தண்டணையிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தமிழர்களிற்கு எதிராக பாரிய அநீதிகளில் ஈடுபட்டுள்ளதை உறுதி செய்துள்ளது.

சர்வதேச மனித உரிமை மனிதாபிமான சட்டங்களை பாரதூரமாக மீறியதாக குற்றம்சாட்டப்பட்ட இராணுவ அதிகாரகள் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.

இராணுவம் சிவில் நிர்வாகத்தின் பணிகளை கையகப்படுத்தியுள்ளதுடன் நில ஆக்கிரமிப்பிலும் ஈடுபடுகின்றது.

இராணுவ செலவீனங்களை குறைப்பது என்பது 2022 பெப்ரவரி 25 ம்திகதி ஐநா மனித உரிமை ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயம்.

இராணுவத்தினர் பொதுமக்களை துன்புறுத்துவது மோசமாக நடத்துவது சித்திரவதை செய்வது போன்ற போன்றவற்றை தொடர்வதை சுட்டிக்காட்டிய ஐநா மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட் இராணுவமயமாக்கல் இனதேசியவாதம் நோக்கிய நகர்வுகள் தமிழர்களும் ஏனைய குழுக்களும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் நிலையை உருவாக்குகின்றன என தெரிவித்துள்ளார்.




இராணுவ செலவீனங்களை கட்டுப்படுத்துவது பொதுமக்களின் வாழ்க்கை மீது படையினரின் செல்வாக்கை கட்டுப்படுத்துவது தொடர்பான பரிந்துரையுடன் தொடர்புபட்டது.

இலங்கை மீது விடுக்கப்பட்ட ஒரேயொரு எச்சரிக்கையாக இது மாத்திரம் காணப்படக்கூடது மாறாக இது ஆரம்ப புள்ளியாக அமையவேண்டும்இபொதுமக்களின் நலனிற்காக உணவு கல்வி சுகாதாரம் அத்தியாவசியப்பொருட்கள் போன்றவற்றிற்கான செலவீனங்களை தொடர்வது அவசியம்.

இலங்கை தற்போது எந்த வித பாதுகாப்பு அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளாத நிலையில் பாதுகாப்பு மற்றும் இராணுவத்தினருக்கான தேவையற்ற செலவீனங்களிற்காக அந்த நாட்டை பொறுப்பாளியாக்கவேண்டும்.

இந்த முக்கியமான தருணத்தில்- இலங்கையில் காணப்படும் நிதிசார்ந்தஸ்திரமின்மையை இராணுவத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக பயன்படுத்தப்படாது என்பதை உறுதி செய்யவேண்டிய பொறுப்பு சர்வதேச நாணயநிதியத்திற்குள்ளது - இலங்கை அவ்வாறு செயற்பட்டால்- இலங்கை அரசாங்கத்தின் தொடரும் கொடுமைகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொண்டுள்ளது என்ற கருதப்படும் நிலைமை உருவாகும்.

சர்வதேச நாணய நிதியம் மிக முக்கிய பங்களிப்பை வழங்கும் விதிமுறைகள் அடிப்படையிலான உலக ஒழுங்கு என்பது இலங்கையில் உள்ள தமிழர்கள் முஸ்லீம்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்கு அனுமதிக்க கூடாது.

சர்வதேச நாணயநிதியம் தனது வாக்குறுதிகளை காப்பாற்றும் -இலங்கைக்கான மேலதிக உதவிகள் சர்வதேச மனித உரிமை நியமங்களின் அடிப்படையில் அமைவதை உறுதி செய்யும் என கருதுகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.






# தமிழக செய்திகள்



## எனக்காக போராடிய மற்றொரு தாய் செங்கொடி

### -மலர் வணக்கம் செலுத்திய பேரறிவாளன்-

மார்ச் 16. 2021



எனக்காக போராடிய மற்றொரு தாய் செங்கொடி” என செங்கொடியின் நினைவு இல்லத்தில் பேரறிவாளன் மலர் வளையம் வைத்து வணக்கம் செலுத்தினார்.

கடந்த 2011ம் ஆண்டு பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை ரத்து செய்யக்கோரி காஞ்சிபுரம் மக்கள் மன்றத்தைச் சேர்ந்த செங்கொடி



என்கின்ற இளம்பெண் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இந்நிலையில் இன்று ஏறத்தாழ 32 ஆண்டுகள் கழித்து பேரறிவாளன் ஜாமீனில் சிறைவாசத்தில் இருந்து வெளிவந்து உள்ளார். இதையடுத்து காஞ்சிபுரம்



வருகை தந்த பேரறிவாளன் மக்கள் மன்றத்திற்கு நேரடியாகச் சென்று செங்கொடி நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வணக்கம் செலுத்தினார்.

“எனக்காக போராடிய மற்றொரு தாய் செங்கொடி” என பேரறிவாளன் செங்கொடி நினைவிடத்தில் கூறி உள்ளார். மேலும் ஆகஸ்ட் மாசம் செங்கொடியின் நினைவு தினம் வருவதையொட்டி நிச்சயம் நினைவுதினத்தில் தான் பங்கேற்று கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை இனப்படுகொலையை திமுக அரசு தடுக்க மறந்தது ஏன்?

### -பிரேமலதா விஜயகாந் -

மார்ச் 15, 2022

உக்ரைனில் உள்ள தமிழர்களை பாதுகாப்போம் எனக் கூறும் திமுக அரசு, இலங்கையில் இனப் படுகொலை நடந்தபோது காப்பாற்ற மறந்தது ஏன் என பிரேமலதா விஜயகாந்த் கேள்வியெழுப்பினார்.

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அருகே தேமுதிக கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட தெற்கு ஒன்றிய செயலாளர் சேஷாத்ரி இல்ல நிகழ்ச்சியில் பிரேமலதா விஜயகாந்த் கலந்துகொண்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் பேசும்போது...

ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தலில் நான்கில் பாரதிய ஜனதா கட்சியும், ஒன்றில் ஆம் ஆத்மியும் வென்றிருக்கிறார்கள்.



வாழ்த்துகள். அது இங்கு பிரதிபலிக்குமா என்பதற்கு, இப்போது பதிலளிக்க முடியாது. இன்னும் நாட்கள் அதிகம் உள்ளதால் அதில் நிறைய மாற்றங்கள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன.” என்றார்.

திமுக ஆட்சி குறித்து எழுப்பிய கேள்விக்கு...நேற்று தமிழக முதல்வர் உக்ரைனில் உள்ள தமிழர்களை பாதுகாப்புடன் அழைத்து வருவோம் என தெரிவித்தார்கள். வாழ்த்துகள். தமிழர்கள் எங்கு இருந்தாலும் பாதுகாப்போம் எனக் கூறும் திமுக அரசும், காங்கிரசும் ஆண்ட நேரத்தில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையை தடுக்க மறந்தது ஏன் எனக் கேள்வி எழுப்பினார்.

## சாப்பாடு இல்லை... குழந்தைக்கு பால் கூட இல்லை... தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வரும் ,ஈழ மக்கள்

மார்ச் 22, 2022

இலங்கையில் நிலவும் பஞ்சம் காரணமாக அந்நாட்டை சேர்ந்த சிலர் தனுஷ்கோடி பகுதிக்கு படகு மூலம் அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளனர்.

வரலாற்றில் இல்லாத அளவிற்கு இலங்கையில் மிக மோசமான பொருளாதார சரிவு ஏற்பட்டுள்ளது. டாலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 264.4 என்ற அளவிற்கு சரிந்துள்ளது. அந்நாட்டு வரலாற்றில் கடந்த 75 வருடங்களில் இல்லாத நிலைக்கு பொருளாதாரம் நலிவடைந்துள்ளது.

இலங்கையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 207.00 ரூபாயாக உள்ளது. சில இடங்களில் இது 250 ரூபாயை தாண்டி விற்கிறது. ஒரு லிட்டர் டீசல் விலை 159.00 ரூபாயாக உள்ளது இலங்கை பொருளாதார நிலை இதனால் ஒரே வாரத்தில் இரண்டு முறை சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை உதவி கேட்டு கையேந்தும் நிலைக்கு சென்றுவிட்டது. அதேபோல் இலங்கையில் கடுமையான மின்சார தடையும் ஏற்பட்டுள்ளது. எரிவாயு, எரிபொருள் வரை அனைத்து பொருட்களுக்கும் விலை அங்கே ஏறிவிட்டது. இலங்கையில் ஒரு கிலோ சம்பா அரிசி விலை 210 ரூபாய் ஆகும்.

இ

அகதிகள் தமிழ்நாடு

இந்த நிலையில்தான் இலங்கையில் நிலவும் பஞ்சம் காரணமாக அந்நாட்டை சேர்ந்த சிலர் தனுஷ் கோடி பகுதிக்கு படகு மூலம் அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளனர். இந்தியா இலங்கை இடையே 13 மணல் திட்டு உள்ள பகுதியில் இன்று கடலோர காவல்படையினர் ரோந்து பணிகளை செய்து வந்தனர். அப்போது தனுஷ் கோடி மூன்றாம் மணல் திட்டு பகுதியில் 1 ஆண், 2 பெண்கள், ஒரு கை குழந்தை, 2 சிறுவர்கள் உட்பட 6 பேர் அங்கு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களை உடனே கடலோர காவல்படையினர் மீட்டு க்யூ பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

ஈழ அகதிகள்

இவர்களிடம் க்யூ பிரிவு போலீசாரிடம் விசாரணை நடத்திய நிலையில் பஞ்சம் காரணமாக இவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. போலீசார் விசாரணையில் அவர்கள் அளித்த வாக்குமூலத்தில், இலங்கையில் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கவில்லை. உணவு கிடைக்கவில்லை, குழந்தைகளுக்கு பால் கொடுக்க கூட முடியவில்லை. விலைவாசி அதிகமாகிவிட்டது. வேலையும் கிடைக்கவில்லை.

தமிழ்நாடு உதவி

தமிழ்நாட்டிற்கு வந்தால் தப்பித்துக்கொள்ளலாம். இங்கே ஏதாவது வேலை செய்து பிழைக்கலாம் என்று நம்பி வந்தோம் என்று அவர்கள் விசாரணையில் கூறியுள்ளனர். ஆனால் இவர்கள் இலங்கையில் இருக்கும் தமிழர்களா அல்லது சிங்களர்களா என்ற விவரம் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை. இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு வந்த இவர்களுக்கு முதலில் உணவு கொடுக்கப்பட்டது.

தனுஷ் கோடி

எல்லோருக்கும் உணவு கொடுக்கப்பட்டது. கை குழந்தைக்கு பால் தரப்பட்டது. இலங்கையில் நிலவும் பொருளாதார தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் இருக்கும் மேலும் பலர் தமிழ்நாட்டிற்கு தப்பித்து வர வாய்ப்பு உள்ளதாக க்யூ பிரிவு போலீசாருக்கு தகவல்கள் வந்துள்ளன. யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளில் இருந்து பலர் இங்கே வரலாம் என்றும் போலீசாருக்கு தகவல் வந்துள்ளது. இதனால் இங்கு ரோந்து பணிகளை கடலோர காவல்படையும், உளவுத்துறையும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.



# நம்பி வரும் மக்களை கைது செய்வது கொடுமை... திபெத்தியர்களுக்கு உள்ள சலுகை தமிழர்க்கு இல்லையா?

## நாம் தமிழர் கட்சி – சீமான்

மார்ச் 22, 2022

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தாளாது, தமிழகத்திற்கு வரும் ஈழச்சொந்தங்களை கைது செய்வது கடும் கண்டனத்திற்குரியது என சீமான் கண்ண்டித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் பின்வருமாறு:-

இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவினால் அத்தியாவசியப்பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச் செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகிற செய்திகள் கவலையளிக்கின்றன.

The arrest of Eelam nationals coming to Tamil Nadu due to the economic crisis in Sri Lanka is highly reprehensible- seeman.

சிங்கள இனவெறிப்பிடித்து, தமிழர்களை அழித்தொழிக்க, உலகெங்கும் கடன்களை வாங்கிக்குவித்து, நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம்செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறிச்செயல்பாடுகளே இத்தகைய நிலைக்குக் காரணமென்றாலும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்துப் பாதிப்புக்குள்ளாகி நிற்பது பெரும் மனவேதனையைத் தருகிறது.

இவ்வளவு ஆண்டுகளாக, சிங்கள ஆட்சியாளர்களின் இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு, கொடும் துயரத்திற்கு ஆளாகி நின்ற தமிழ்ச்சொந்தங்கள், இப்போது பொருளாதார நெருக்கடியினாலும், வறுமையின் கோரப்பிடியினாலும் வாடி வதங்கி, வாழ்க்கையை நடத்த முடியாத துயர்மிகு சூழலில், நாளும் அல்லல்பட்டு வருவது பெரும் மனவலியைத் தருகிறது.

The arrest of Eelam nationals coming to Tamil Nadu due to the economic crisis in Sri Lanka is highly reprehensible- seeman.



இத்தகைய கையறு நிலையில், தாய்த்தமிழகத்தில் தஞ்சம் கேட்டு, கடல்வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடி வரும் ஈழச்சொந்தங்களை வழக்குகள் போட்டு கைது செய்வது மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அனைத்தையும் இழந்து வரும் நம்மக்களை ஆரத்தழுவி அரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும், வசதிகளையும் போல, நம் சொந்தங்களுக்கும் செய்துகொடுத்து, அவர்களைக் காக்க முன்வர வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

# ஒற்றையாட்சி அரசியல் யாப்பை கொண்டுவருவதனை தடுத்து தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி அரசியல் யாப்பினை கொண்டுவருவதனை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும்.

**–தமிழ்தேசிய மக்கள் முன்னணி இந்தியாவிற்கு கடிதம்–**

மார்ச் 28 2022

***இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு ஈழத் தமிழ்த் தேசம் உறுதியாக செயற்பட்டு வரும் நிலையில் ஈழத் தமிழ்த் தேசமக்களின் நலன்களை பேணும் வகையில் இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகித்து ஒற்றையாட்சி அரசியல் யாப்பை கொண்டுவருதனை தடுத்து தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி அரசியல் யாப்பினை கொண்டுவருவதனை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும்என தமிழ்தேசிய மக்கள் முன்னணி இந்தியா விடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.***

இந்திய வெளிவிவகாரச் செயலர் ஊடாக இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கும் கடிதம் கிட்டுப்பூங்கா பிரகடனமும் இணைத்து இந்திய வெளிவிவாகார அமைச்சருக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் கடிதம் ஒன்று இன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஊடாக அக்கடிதம் அனுப்பப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

28-03-2022
உயர்திரு. சுப்பிரமணியம் ஜெய்சங்கர்
கௌரவ வெளிவிவகார அமைச்சர்,
இந்தியா
ஊடாக,
கௌரவ துணைத்தூதுவர்,
இந்திய துணைத் தூதரகம்,
யாழ்ப்பாணம்.
அவர்களுக்கு,

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாக 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13 ஆம் திருத்தமானது, நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து அது தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வு அல்ல என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் ஆரம்பத்திலிருந்தே அதனை நிராகரித்து வந்துள்ளனர்.

சிறீலங்காவின் பாராளுமன்றத்தில் 13ஆம் திருத்தச் சட்ட வரைபு சமர்ப்க்கப்பட்டிருந்த பொழுது, தமிழர் அரசியல் அரங்கில் இயங்கிக் கொண்டிருந்த தரப்புக்கள், அந்த வரைபை சிறீலங்காவின் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்படுவதை இந்தியா தடுக்க வேண்டும் என்று கோரி இந்திய பிரதமருக்கு எழுத்து மூலமாக தெரிவித்திருந்ததும் வரலாற்று நிகழ்வாகும்.

13ஆம் திருத்தமானது சட்ட மூலமாக நிறைவேற்றப்படுவதனை தடுத்து நிறுத்துமாறு கோரப்பட்டதனுடைய நோக்கமே, 13 ஆம் திருத்தமானது, தமிழ் மக்களின் தீர்வு என்னும் விடயத்தில் ஆரம்பப் புள்ளியாகக் கூட கருதப்பட முடியாது என்பதனாலேயாகும்.

எனினும் தமிழ்த் தரப்பின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில், குறித்த 13ஆம் திருத்தச் சட்டமும் மாகாணசபைகள் சட்டமூலமும் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றபோது, தமிழர் அரசியல் அரங்கில் இயங்கிக் கொண்டிருந்த ஒரு அமைப்பு மட்டும் 1988ல் அந்தத் தேர்தலில் போட்டியிட்டு வடகிழக்கு மாகாண சபையிலிருந்த நிர்வாகத்தைக் கைப்பற்றியிருந்தது.

இருந்த போதிலும் இதனூடாக எதனையுமே சாதிக்க முடியாது என்ற உண்மையை அனுபவ ரீதியாக உணர்ந்த போது, மாகாண சபையை பொறுப்பேற்றிருந்த அந்தத் தரப்புக்கூட, தாம் வகித்துவந்த மாகாண சபை அங்கத்துவத்தினை இராஜினாமா செய்து 13 ஆம் திருத்தத்தினை முற்று முழுதாக நிராகரித்திருந்தனர்.

இந்த நடவடிக்கையானது, தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில், 13 ஐ முன்னிறுத்தி நகர முடியாது என்பதை நிரூபிப்பதாகவும், 13 ஆம் திருத்தமானது தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஆரம்பப்புள்ளியாக கூட கருதமுடியாது என்ற யாதார்த்தத்தை மீண்டும் நிலைநாட்டுவதாகவும் அமைந்துள்ளது.

34 வருடங்களுக்கு மேலாக இந்த 13ஆம் திருத்தமும் மகாகாண சபைகளும், இலங்கை அரசியலமைப்பில் இருந்தும் கூட, தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் ஒற்றையாட்சியை முற்று முழுதாக நிராகரித்தே தமது ஏகோபித்த ஆணையை வழங்கிவருகின்றனர். தமிழ்த் தேசம் அங்ககீகரிக்கப்படுகின்ற - தமிழ்த் தேசம் தன்னுடைய சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக் கூடிய - இணைந்த வடக்கு கிழக்கு தாயகம் பாதுகாக்கப்படுகின்ற சமஸ்டித் தீர்வையே கோரி வருகின்றார்கள்.

13ஆம் திருத்தமும் மகாகாண சபைகளும் கடந்த 34 வருடங்களாக நடைமுறையில் இருக்கக் கூடியதாகவே, தமிழ் மக்களின் ஆணைகளைப் பெற்றவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் 13 ஆம் திருத்தம் ஒரு பேச்சுப் பொருளாகக் கூட பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்தவகையில், கணக்கிலெடுக்கப்படாத - நிராகரிக்கப்பட்ட ஒரு விடயமாகவே தமிழ்த் தேசிய அரங்கில் 13ஆம் திருத்தம் இருந்து வந்துள்ளது. தொடர்ந்தும் அவ்வாறே இருக்கிறது. ஈழத் தமிழ்த் தேச மக்களின் நிலைப்பாட்டிலே, 13ஆம் திருத்தமும் மாகாண சபைகளும், தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்குரிய தீர்வு அல்ல என்பதுடன், அது தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட அமையாது என்ற உண்மையை தொடர்ந்தும் நிரூபிக்கின்ற வகையிலேயே, கடந்த 2022 ஜனவரி 30ம் திகதி யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவிலும், 2022 மார்ச் மாதம் 13ஆம் திகதி வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டு திடலிலும், மக்கள் எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றிருந்தன.

அதில், தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் அணி திரண்டு, 13ஆம் திருத்தம் தீர்வுக்கான தொடக்கப்புள்ளியுமல்ல, இறுதித் தீர்வுமல்ல என்பதனை ஆணித்தரமாக வெளிப்படுத்தியும், ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்கும் வேலைத் திட்டங்களுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், அதேவேளை - தமிழ்த் தேசம் அங்ககீகரிக்கப்படுகின்ற - இணைந்த வடக்கு கிழக்கு தாயகத்தில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்ற சமஸ்டித் தீர்வை வலியுறுத்தியுள்ளதுடன், அத்தகைய தீர்வை அடைந்துகொள்ள இந்திய அரசும் எனைய நட்பு நாடுகளும் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமெனவும் மேற்படி பேரணிகள் ஊடாக வலியுறுத்தியுள்ளார்கள். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரகடனம் ஒன்றை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ் மக்களது உரிமைக்காக போராடி வந்த காலப்பகுதியில், அவர்கள் நாட்டைப் பிரிக்காத, ஓர் சமஸ்டித் தீர்வுக்குத் தயாராக இருக்கவில்லை என்றும், தனிநாட்டிற்காக மட்டுமே பிடிவாதமாக செயற்படுகின்றார்கள் என்றும் அப்பட்டமான பொய்யைக் கூறியே, ஓர் இனவழிப்புப் போருக்கு இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்று இனவழிப்பின் மூலமாக உரிமைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்திருந்தார்கள். போர் முடிந்த பின்னர், ஒற்றையாட்சியை நிராகரித்து, சிறீலங்காவின் சட்டத்தின் பிரகாரம் நாட்டைப்பிரிக்காமல் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட ஓர் சமஸ்டித்தீர்வையே வலியுறுத்தி, தமிழ்மக்கள் அனைத்துத் தேர்தல்களிலும் தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். இலங்கைக்கு நான்காவது புதிய அரசியல் யாப்பு ஒன்றினை கொண்டுவருவதற்கான தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள, சிறீலங்கா அரசு, அந்த மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து புதிய அரசியல் அமைப்பை சமஸ்டி அரசியல் யாப்பாக கொண்டுவராமல், மாறாக ஒற்றையாட்சியாக கொண்டு வருவதற்கே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில் இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு ஈழதமிழ்த் தேசம் உறுதியாக செயற் பட்டு வரும் நிலையில், ஈழத் தமிழ்த் தேசமக்களின் நலன்களை பேணும் வகையில், இலங்கை அரசு மீது அழுத்தங்களை பிரயோகித்து, ஒற்றையாட்சி அரசியல் யாப்பை கொண்டுவருதனை தடுத்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி அரசியல் யாப்பினை கொண்டு வருவதனை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும்.

அந்த வகையில், "கிட்டுப்பூங்கா" பிரகடனமானது தமிழ் மக்களின் அசைக்க முடியாத அரசியல் வேணவாவை மீண்டும் வெளிப்படுத்தும் ஆவணம் என்னும் வகையிலும், இந்த விடயங்களை இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் இந்த சமயத்திலே, நாம் அவரை நேரில் சந்தித்து வெளிப்படுத்த காத்திருந்த நிலையில் எமக்கு அத்தகைய சந்தர்ப்பம் கிடைத்திருக்காத நிலையில், தமிழ் மக்களின் உண்மையான அரசியல் அபிலாசைகளை இக்டிகதம் ஊடாக கௌரவ வெளிவிவகார அமைச்சர் ஊடாக இந்திய அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகின்றோம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
செல்வராசா கஜேந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர்
பொதுச் செயலாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# உலக செய்திகள்

# இன - மத உணர்வை துாண்டி ஆட்சி செய்தால் இலங்கை மாதிரி நிலைமை தான் ஏற்படும்!

**பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன்**

மார்ச் 16, 2022

கொழும்பு: இலங்கையில் நிலவும் மாபெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு இன-மத உணர்வுகளை தூண்டும் அந்நாட்டு அரசின் கொள்கையும் ஒரு காரணம் என்று பொருளாதார நிபுணர் ஆனந்த் சீனிவாசன் தெரிவித்துள்ளார். இந்த பொருளாதார சரிவின் இன்னொரு கோணத்தை அவர் விவரித்து இருக்கிறார்.

இலங்கையில் தற்போது வரலாற்றில் இல்லாத அளவிற்கு மிக கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது.. இந்த பொருளாதார நெருக்கடி பற்றி எளிதாக சொல்ல வேண்டும் என்றால் பின்வருமாறு இரண்டு வரிகளில் சொல்லிவிடலாம்... டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 75.87.. தற்போது போர் காரணமாக பொருளாதார தடையை எதிர்கொண்டு இருக்கும் ரஷ்யாவின் ருபேல் மதிப்பு 104.. ஆனால் எந்த போரையும், உள்நாட்டு மோதலையும் எதிர்கொள்ளாத இலங்கை ரூபாயின் மதிப்பு 264.44!

மிக மோசமான நிலையில் இலங்கை.. உணவுக்கு அல்லாடும் மக்கள்.. ஐஎம்எஃப்பிடம் கையேந்தும் அவல நிலையில் அரசு மிக மோசமான நிலையில் இலங்கை.. உணவுக்கு அல்லாடும் மக்கள்.. ஐஎம்எஃப்பிடம் கையேந்தும் அவல நிலையில் அரசு.

ஆம் 260 ஐ கடந்து மிக மோசமான வீழ்ச்சியை இலங்கை பண மதிப்பு சந்தித்துள்ளது! அந்த அளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் கடுமையாக வீழ்ந்துள்ளது. 1970ல் இலங்கையில் நிலவிய பஞ்சத்தை விட மிக மோசமான பஞ்சமாக இது பார்க்கப்படுகிறது.

### இலங்கை பொருளாதாரம்

இலங்கை பொருளாதாரம் கொரோனாவிற்கு பின்பாகத்தான் வீழ்ச்சி அடைகிறது என்றும் கூட சொல் முடியாது. ஏனென்றால் கடந்த 4 வருடமாகவே.. அதாவது கொரோனாவிற்கு முன்பே அந்த நாட்டின் பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக வீழ்ச்சியை நோக்கித்தான் சென்று கொண்டு இருந்தது. முக்கியமாக சீனாவிடம் வாங்கிய கடன், சீனாவின் பல்வேறு ரோட் அண்ட் பெல்ட் திட்டத்திற்காக வாங்கப்பட்ட நிதி உதவிகள், அதற்கான வட்டி எல்லாமே இலங்கையின் பொருளாதாரத்தை முடக்கி போட்டது. அதன்பின் வந்த கொரோனா காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்திற்கு சென்றது.

### மோசமான பொருளாதாரம்

முக்கியமாக கொரோனா சமயத்தில் இலங்கையின் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைந்தது. உலக நாடுகள் பல பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்ட நிலையில், சுற்றுலாத்துறையை கணிசமாக நம்பி இருக்கும் இலங்கை படுமோசமான வீழ்ச்சியை சந்தித்தது. அதிலும் டாலருக்கு நிகரான இலங்கையின் ரூபாயின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண்டே சென்றது. கடந்த வருடம் 190 ஐ தாண்டிய இலங்கை ரூபாய் மதிப்பு இப்போது 26 ரூபாயை தாண்டி சென்று கொண்டு இருக்கிறது.

அந்நாட்டு மத்திய வங்கி இதை சரிப்படுத்த பல்வேறு திட்டங்களை அறிவித்தும் எதுவும் அந்த நாட்டுக்கு உதவிகரமாக அமையவில்லை. அந்நாட்டு வரலாற்றில் கடந்த 75 வருடங்களில் இல்லாத நிலைக்கு பொருளாதாரம் நலிவடைந்துள்ளது. இதனால் ஒரே வாரத்தில் இரண்டு முறை சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை உதவி கேட்டு கையேந்தும் நிலைக்கு சென்றுவிட்டது. ரஷ்ய போர் காரணமாக இன்னொரு பக்கம் இலங்கையில் பெட்ரோல், டீசல் விலை உச்சத்தை தொட்டுள்ளது.

### பெட்ரோல் டீசல்

இலங்கையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 207.00 ரூபாயாக உள்ளது. சில இடங்களில் இது 250 ரூபாயை தாண்டி விற்கிறது. ஒரு லிட்டர் டீசல் விலை 159.00 ரூபாயாக உள்ளது. 10 கிராம் தங்கத்தின் விலை 154,566 ரூபாயாக உள்ளது. இந்தியாவில் இன்று இதன் விலை 53,020 ரூபாய் ஆகும். எரிவாயு, எரிபொருள் வரை அனைத்து பொருட்களுக்கும் விலை அங்கே ஏறிவிட்டது. இதனால் அங்கு நிலக்கரி தட்டுப்பாடும், அதை விலையும் உயர்ந்து கடுமையான மின் தடை பிரச்சனையும் ஏற்பட்டுள்ளது.

### இலங்கை விலைப்பட்டியல்

இலங்கையின் விலைபட்டியலை பார்த்தால்.. மிடில் கிளாஸ் மக்களுக்கு அல்ல.. பணக்கார மக்களுக்கே தலையை சுற்றும். ஆம்.. இலங்கையில் ஒரு கிலோ சம்பா அரிசி விலை 210 ரூபாய் ஆகும். அதேபோல் 1 கிலோ துவரம் பருப்பு விலை 380 ரூபாய்க்கு ஆகும். கோலி ஒரு கிலோ ஆயிரம் ரூபாய். முட்டை ஒன்று 40 ரூபாய். பெரிய வெங்காயம் ஒரு கிலோ 250 ரூபாய், சின்ன வெங்காயம் ஒரு கிலோ 450 ரூபாய். தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் 900 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது.

### மக்கள் போராட்டம்

இந்த விலைவாசி உயர்வு காரணமாகவும், வேலைவாய்ப்பு இன்மையாலும் தலைநகர் கொழும்பில் மக்கள் கடுமையான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இலங்கையின் அதிபர் கோத்தபய மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சே ஆகியோரை எதிர்த்தும் அவர்களின் குடும்பங்களை எதிர்த்து போராட்டத்தை நடத்தி வருகின்றன, பிரதான எதிர்க்கட்சியான எஸ்ஜேபி எனப்படும் Samagi Jana Balawegaya அங்கு தொடங்கிய போராட்டம் அங்கு பெரிய மக்கள் புரட்சியாக வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

### பிரதமர் அலுவலகம்

முக்கியமாக பிரதமர் அலுவலகம் முன் மக்கள் ஆயிரக் கணக்கில் கூடி அங்கு போராட்டம் செய்து வருகின்றனர். அதிபர், பிரதமர் இருவரும் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை வைத்து போராட்டங்களை செய்து வருகின்றனர். பல லட்சம் பேர் அங்கு கடந்த 4 நாட்களுக்கும் மேலாக போராட்டம் செய்து வருகின்றன. முக்கியமாக வயதானவர்கள் பலர் போராட்டம் செய்து வருகின்றன. ஒரு குச்சியில் இரண்டு பக்கமும் கருகிய பிரட்டை வைத்து போராட்டம் செய்வது இங்கே போராட்ட அடையாள




மாகவே மாறியுள்ளது.

இந்த நிலையில்தான் பொருளாதார நிபுணரும், எழுத்தாளருமான ஆனந்த் ஸ்ரீனிவாசன் இலங்கையின் பொருளாதார பிரச்சனையின் இன்னொரு கோணத்தை அணுகி இருக்கிறார். அதாவது பொருளாதார சரிவு என்பதையும் தாண்டி, அந்த நாட்டு அரசின் கொள்கை குறித்தும் அவர் விமர்சனம் செய்துள்ளார். பொருளாதாரம் மீது கவனம் செலுத்தாமல் மத - இனவாதம் மீது கவனம் செலுத்தியதே இந்த சரிவிற்கு முக்கிய காரணம் என்று அவர் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

### ட்விட்

இது தொடர்பாக அவர் செய்துள்ள ட்விட்டில், வெகுஜனத்தின் வாழ்வாதர - பொருளாதார மேம்பாடுகளை விட்டு, இன-மத உணர்வு தூண்டுதலை மட்டுமே பிரதானமென ஒரு அரசு இயங்கினால் இந்நிலையை தவிர்க்கவே முடியாது என்பதற்கு, இலங்கையின் தற்போதைய சூழல் ஓர் எச்சரிக்கை, என்று குறிப்பிட்டு இருக்கிறார். இலங்கையில் உள்நாட்டு போர் நிலவிய போதும், அதற்கு பின்பாகவும் பெரும்பாலும் இனவாதம்தான் அதிக கவனம் பெற்றது. மக்கள் பிரச்சனைகளை பிரச்சாரத்தில் தலைவர்கள் பேசவே இல்லை.

### ராஜபக்சே குடும்பம்

அதிலும் மீண்டும் ராஜபக்சே குடும்பம் ஆட்சிக்கு வர இனவாத ரீதியான பிரச்சாரங்கள் காரணமாக இருந்தது. மக்களும் பொருளாதார திட்டங்களை பற்றி யோசிக்காமல் அங்கு இன வாதத்திற்கு வாக்களித்ததன் விளைவு, அவர்கள் ரொட்டிக்கும், தக்காளிக்கும் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைத்தான் ஆனந்த் ஸ்ரீனிவாசன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

# ஜப்பானில் பாரிய பூகம்பம் - சுனாமி எச்சரிக்கை - இரண்டு மில்லியன் வீடுகளிற்கு மின்சாரம் துண்டிப்பு -16.03.2022










# உக்ரைன் மீது ரஷ்யா அதிநவீன ஹைப்பர்சோனிக் ஏவுகணைத்தாக்குதல்

மார்ச் 19, 2022

உக்ரைனின் மேற்குபகுதியில் உள்ள ஆயுதக்கிடங்கொன்றை அழிப்பதற்காக ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை பயன்படுத்தியதாக ரஸ்யா அறிவித்துள்ளது.

ரஷ்ய இலக்குகளை மிகவும் துல்லியமாக தாக்கக்கூடிய ஆயுதங்களை பயன்படுத்துவது குறித்து இதுவரை எந்த தகவல்களையும் வெளியிடா நிலையிலேயே முதல் தடவையாக ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.



உக்ரைன் மீதான தாக்குதலில் முதல்தடவை கின்ஜால் ஹைப்பர்சோனிக் ஏவுகணையை பயன்படுத்தியதாக ரஸ்ய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஹைப்பர்சோனிக் ஏரோபலிஸ்டிக் ஏவுகணைகளுடன் கூடிய கின்சல் ஏவுகணை அமைப்பு இவானோ பிரான்கிவ்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள உள்ள டெலியாட் கிராமத்தில் ஏவுகணைகள் வெடிமருந்ததுகள் சேமித்து வைக்கப்பட்டிருந்த களஞ்சியத்தை அழித்துள்ளது என ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# தென் சீனாவில் 133 பேருடன் சீன விமானமொன்று விழுந்து நொருங்கியுள்ளது

மார்ச் 21, 2022

133 பேருடன் பயணம் செய்துகொண்டிருந்த விமானம் சீனாவின் மலைப்பகுதியான குவான்ஜியில் விழுந்து நொருங்கியுள்ளது.

விமானம் விழுந்த இடத்தில் தீமூண்டுள்ளதை அவதானிக்க முடிவதாக தகவல்கள் வெளியாகின்றன





# சர்வதேச நிதிஉதவியை கோரும் இலங்கை அரசாங்கம் தொடரும் மனித உரிமை துஸ்பிரயோகம் காரணமாக அழுத்தங்களிற்குள்ளாகியுள்ள நிலையில் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்க முயல்கின்றது

**சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மீனாட்சி கங்குலி**
**தென்னாசியாவிற்கான இயக்குநர்**

மார்ச் 26, 2022

சர்வதேச சமூகத்தினை ஏமாற்றும் நோக்கத்துடன் இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தில் மேம்போக்கான மாற்றங்களை மேற்கொண்டுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தனது மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தை முடிவிற்கு கொண்டுவரவேண்டும் என சர்வதேச அளவில் அதிகரிக்கும் அழுத்தங்களில் இருந்து தப்புவதற்காக மேம்போக்கான மாற்றங்களுடன் திருத்தச் சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது.

ஐக்கியநாடுகளின் மனித உரிமை நிபுணர்களும், ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்கனவே இந்த திருத்தங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மிகவும் ஆபத்தான ஏற்பாடுகளிற்கு தீர்வை காண்பதற்கு போதுமானவையில்லை என தெரிவித்துள்ளன.

தனது திருத்தச்சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் குழுநிலை விவாதத்தை தவிர்த்துக்கொண்டது.

குழுநிலை விவாதத்தை முன்னெடுத்திருந்தால் மனித உரிமை குழுக்களின் உள்ளீடுகளை உள்வாங்கியிருக்கலாம்,இது இலங்கை தனது சட்டமூலத்தை சர்வதேச தராதரத்திற்கு ஏற்றதாக மாற்றுவதற்கான சிறந்த வாய்ப்பாக இது காணப்பட்டது.

நான்கு தசாப்தங்களிற்கு மேலாக இலங்கை அதிகாரிகள் தன்னிச்சையாக தடுத்து வைத்தல் மற்றும் சித்திரவதையை நீடிப்பதற்காகவும் - சிறுபான்மை சமூகத்தினரையும் சிவில் சமூகத்தினரையும் இலக்குவைப்பதற்காகவும் பயன்படுத்தியுள்ளனர்.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கம் எவரையும் ஒரு வருட காலத்திற்கு குற்றச்சாட்டுகளை சுமத்தாமல் - எந்த ஆதாரங்களும் இல்லாமல் - பிணைக்கான சாத்தியக் கூறுகள் இல்லாமல் - தடுத்துவைப்பதற்கு தொடர்ந்தும் அனுமதிக்கின்றது.

புதிய திருத்தங்கள் சித்திரவதையிலிருந்து எந்த பாதுகாப்பையும் வழங்கவில்லை, மாறாக பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலான தண்டனைகள் காரணமாக சித்திரவதைகளை ஊக்குவிக்கின்றது.

பொருளாதாரத்தை தவறான விதத்தில் கையாண்டமைக்காக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச நிர்வாகம் பாரிய ஆர்ப்பாட்டங்களை எதிர்கொள்கின்றது.

பொருளாதாரம் தவறான விதத்தில் கையாளப்பட்டமை அத்தியாவசிய பொருட்களிற்கு பாரிய தட்டுப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளதுடன் பணவீக்க அதிகரிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச நிதிஉதவியை கோரும் இலங்கை அரசாங்கம் தொடரும் மனித உரிமை துஸ்பிரயோகம் காரணமாக அழுத்தங்களிற்குள்ளாகியுள்ள நிலையில் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்க முயல்கின்றது.

ஆனாலும் மனித உரிமை துஸ்பிரயோகங்கள் தொடர்கின்றன - பயங்கரவா தடைச்சட்ட திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அன்று பிரபலமான மனித உரிமை சட்டத்தரணி பொலிஸின் பயங்கரவாத விசாரணை பிரிவிற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டார், சட்டபூர்வமான செயற்பாடுகளை இலக்குவைப்பதற்கு அரசாங்கம் பயங்கரவாதத்தை பயன்படுத்தும் இன்னுமொரு சம்பவம் இதுவாகும்.

மேலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்ற எச்சரிக்கையை தொடர்ந்து பொலிஸார் பின்னர் அந்த அழைப்பாணையை கைவிட்டனர்.




2009இல் முடிவடைந்த யுத்தத்தின்போதும் அதற்கு முன்னரும் இராணுவத்தினரின் பிடியிலிருந்தவேளை பலவந்த மாக காணாமல்போகச்செய்யப்பட்டவர்களின் உறவினர் களின் ஆர்ப்பாட்டங்களை பொலிஸார் கடந்தவாரம் ஒடுக் கினார்கள்.

இலங்கைக்கான சமீபத்தைய விஜயத்தின்போது அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களிற்கான உதவி இராஜாங்க செயலாளர் விக்டோரியா நுயுலண்ட் கண்காணிப்புகளை - பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைத்தலை - துன்புறுத்தலை முடிவிற்கு கொண்டுவரவேண்டும் என வலியுறுத்தினார்.

இலங்கை உணவு எரிபொருள் பற்றாக்குறைகளை எதிர்கொள்வதால் அதற்கு சர்வதேச உதவி அவசரமாக தேவைப்படுகின்றது, ஆனால் அரசாங்கம் சர்வதேசத்தில் உள்ள தனது சகாக்களும் நண்பர்களும் நேர்மையான மனித உரிமை சீர்திருத்தங்களை, துஸ்பிரயோகங்களை முடிவிற்கு கொண்டுவருவதற்கான நீதியை நிலைநாட்டுவதற்கான உண்மையான நடவடிக்கைகளையும் எதிர்பார்க்கின்றார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

---

Allstate. You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும் தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316

---




**BOROS CANADIAN PAPER CONVERTING INC.**




**Alan Maniam**
Director

**647 299 2450**

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

# சலுகைகளுக்காக... எவரிடமும் நாம் கை நீட்ட மாட்டோம்.

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



எனது அன்புக்குரிய மக்களே!

இந்த தற்காலிக போர்நிறுத்த நடவடிக்கையின் பயனாக எமது பிரச்சனைக்கு ஒரு இறுதியான அரசியற் தீர்வு ஏற்படும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. இனவெறி கொண்ட சிங்கள - பௌத்த தலைமைக்கு அப்படி திடீரென மனமாற்றம் ஏற்படுமென நாம் எதிர்பார்க்கவில்லை. தமிழருக்கு நீதி வழங்க வேண்டும் என்ற தார்மீக சிந்தனைக்குப் பதிலாக, தமிழர்களை மீண்டும் ஏமாற்றி ஆயுதப் புரட்சிப் போராளிகளை அடிபணியச் செய்ய வேண்டும் என்பதே அரசின் அந்தரங்கத் திட்டமாகும். 35 வருட அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்து போன கசப்பான அரசியல் வரலாற்றுப் பாடங்களில் நாம் நிறையக்கற்றுத் தெளிந்திருக்கிறோம். ஆகவே பேச்சுக்கள் என்ற இந்த இராஜதந்திரப் பொறிக்கிடங்கில் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பதை நான் உறுதியாக திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறோம். தாங்க மூடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களை பறிகொடுத்திருக்கிறோம், எமது வீடுகள், சொத்துக்கள், செல்வங்களை இழந்திருக்கிறோம். பெருந்தொகையான இளம் போராளிகளை களத்தில் பலிகொடுத்திருக்கிறோம். சகிக் முடியாத அளவிற்கு நாம் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர், இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப் பின்னர், இத்தனை வீரச்சாவுகளுக்குப் பின்னர் நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கை நீட்டப்போவதில்லை.

தர்மமும், உண்மையும் இறுதியில் வெற்றியளித்து, தமிழ்த் தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றோ ஒரு நாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம்மிடம் ஆத்ம பலமும், ஆயுத பலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன்.

வெளிச்சம் 05.1995




TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to
$5000
REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# ஆனந்தபுரம் ஒரு வீரவரலாறு

போர் அநேகமாக இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. ஏறக்குறைய எல்லா நம்பிக்கைகளும் பொய்த்துப் போகின்றன என்று தெரிந்து கொண்டிருந்தது அப்போது. ஏனென்றால், புவியியல் ரீதியாக சிறிய ஒடுங்கிய பிரதேசத்தில் சுற்றிவளைக்கப்பட்ட நிலைக்கு மக்களும் புலிகளும் தள்ளப்பட்டு விட்டனர். சர்வதேச ஆதரவுத்தளத்தையும் பெறக்கூடிய நிலையில், போரைத் தணிக்கக் கூடிய நிலையில் நிலைமைகளும் இல்லை. எனவே போர் தன்னுடைய இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. அதாவது அது ஏறக்குறைய முடிவுக் கட்டத்துக்கு வந்து விட்டது என்று நிலைமைகளைக் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தோர் தீர்மானித்தனர்.

ஆனாலும் பலர் இன்னும் ஏதாவது செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது என்றே நம்பினார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்கும் காரணங்களிருந்தன.

கரும்புலிகள் அணி எந்தப் பெரிய நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படவில்லை. கடற்புலிகளும் கூட மிகப் பிரமாண்டமான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அதைவிட தொடர்ந்து மோதல்கள் நடந்து கொண்டேயிருந்தன. விடுதலைப் புலிகளின் நம்பிக்கைக்குரிய தளபதிகள் இன்னும் போரை வழிநடத்திக் கொண்டேயிருந்தார்கள்.

ஆகையால் எப்படியும் இறுதிக் கட்டத்திலாவது ஏதாவது அதிரடியான போர் நடவடிக்கைகள் நடைபெறக் கூடும் என்று அவர்கள் நம்பினார்கள். இல்லையென்றால், இவ்வளவு இயக்க உறுப்பினர்களும் இறுதியில் என்ன செய்வது? அதைவிட தலைவர் பிரபாகரன் ஏதாவது செய்யாமல் விடமாட்டார் என்ற எண்ணம் அவர்களுக்கிருந்தது. ஆனாலும் அவர் ஏன் இன்னும் தாமதித்துக் கொண்டிருக்கிறார் என்று அவர்களுக்குப் புரியவில்லை. அதற்கு அவர்களால் விடைகாணவும் முடியவில்லை.

எனவே இறுதிக் கட்டப் போர் எப்படியும் நம்பிக்கைக்குரியதாக, மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கைக்கு அவர்களிடம் போதிய விளக்கங்களிருக்கவில்லை. ஆனாலும் அந்த நம்பிக்கையிலும் அவர்கள் கொஞ்சம் தளர்ந்தேயிருந்தார்கள். அதுவொரு கலவையான மனநிலைதான். பொதுவாகச் சொன்னால், நம்பிக்கைக்கும் நம்பிக்கையின்மைக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த நாட்களில் பலரும் என்ன செய்வது, எங்கே செல்வது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால், தொடர்ந்து போரை நடத்தக் கூடிய நிலையில் அப்போது போராளிகளில் பலரின் மனநிலை இருக்கவில்லை. பலரும் தங்கள் குடும்பங்களைத் தேடுவதிலும் அவர்களைக் காப்பாற்றுவதிலும்தான் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதைவிட போரைத் தாங்கக் கூடிய சனங்களும் இல்லை. அவர்களுக்கு சாப்பாடில்லை. அதைவிடத் தங்குமிடமில்லை. காயப்படுகிறவர்களுக்கு மருத்துவமனைகளில்லை.

இதற்கிடையில் வெடிபொருட்கள் தீர்ந்து விட்டதாக மெல்லிய சேதி கசிந்தது. இனிச் சண்டை ஓய்ந்து விடலாம். அதுக்குப் பிறகு ஏதாவது ஒரு வழி - அது நன்மையைத் தருமோ தீமையைத் தருமோ என்பது வேறு விசயம் - கிடைத்து விடும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

இனி வன்னியில் இருந்தால் மரணம் அல்லது கைது என்ற நிலையைத்தவிர வேறு மார்க்கமில்லை என்று திடமாக முடிவு கட்டினார்கள். இதனால் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை விட்டு படைத்தரப்பிடம் ஓடுவோரின் தொகை அதிகரித்தது. இந்த நிலை வரவரக் கூடியது. இந்த மனநிலை வளர்ந்து போராளி குடும்பங்கள், மாவீரர் குடும்பங்கள் வரையில் பரவியது.

இந்த நிலையைத் தடுத்தாற்தான் அடுத்த கட்டமாக எதையாவது செய்யலாம் என்ற நிலை தவிர்க்க முடியாதபடி உருவாகியது. அதே வேளை தாக்குப்பிடிப்பதன் மூலம் தான் சர்வதேச ரீதியான மாற்று அபிப்பிராயத்தை உருவாக்கலாம் என்ற நிலையும் புலிகளுக்கு ஏற்பட்டது. அத்துடன், என்னதான் நடந்தாலும் படைத்தரப்புக்குப் பேரழிவை ஏற்படுத்தி, அதன் உளநிலையைச் சிதைப்பதன் மூலம் அதைப் பலமிழக்கச் செய்து பின்வாங்கச் செய்யலாம் என்று புலிகளின் மூத்த தளபதிகள் கருதினார்கள்.

இது இறுதிக்கட்டம். வாழ்வா சாவா என்ற நிலை. தோற்கமுடியாது. அப்படித் தோற்பதாக இருந்தாலும் மரணத்துக்குப் பின்னர் அது நிகழட்டும். அந்த மரணம் தோல்விளைத் தருவதற்குப் பதிலாக வெற்றியைத் தருவதாக மாறிவிடும் என்று அவர்கள் நிறுவினர். இதை யடுத்து பலரிடம் ஒரு தெம்பு ஏற்பட்டது.

எனவே படையினரை எப்படியாவது தடுக்க வேண்டும். அப்படித் தடுப்பதற்கான உபாயம் என்ன என்ற கேள்வி எழுந்தபோதுதான் ஆனந்தபுரம் சமர் தொடங்கியது. அது இறுதிச் சமர். அதுதான் இப்போது தாய்ச்சமர். அதுவே இப்போது விடுதலைக்கான திறப்புச் சமர். அதுதான் புலிகளின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கும் சமர் என்ற நிலையில் அதில் அத்தனை சிறப்புப் பயிற்சியும் போர் அனுபவமும் உள்ளவர்கள் களமிறங்கினார்கள்.

அந்தச் சமருக்கு முன்னர் அங்கிருந்து தான் வெளியேறமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு தலைவர் பிரபாகரன் அங்கே நின்றார். அப்போது இராணுவம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கேப்பாபிலவு, தேவிபுரம் ஆகிய இடங்களில் நிலை கொண்டிருந்தது. அதாவது முக்கால வட்ட வடிவில் இராணுவம் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்திருந்தது. மிஞ்சிய




## ஆனந்தபுரப் போர்

**இந்தியா – சிறீலங்கா சிங்கள கூட்டுப்படையினர் மேற்கொண்ட இரசாயன குண்டுத் தாக்குதலால் மூத்த போராளிகள் உட்பட பல நூறு போராளிகள் வீரச்சாவு.**

ஏன் அமையக் கூடாது? என்று அவர்கள் கருதினார்கள். எனவே இதற்கான ஒரு தர்க்க நிலைப்பட்ட நியாயத்தையும் அவர்கள் சொன்னார்கள். அது போராளிகளை சிறிது உற்சாகப் படுத்தியது.

தொடர்ந்து வெற்றியைச் சுவைத்தபடியே படையினர் முன்னேறி வருகின்றனர். அதனால் தாம் இலகுவில் வெற்றி பெற்று விடுவோம், புலிகள் இனிமேல் பெரிய தாக்குதல் எதனையும் நடத்தக்கூடிய நிலையில் இல்லை. அவர்கள் பலவீனப்பட்டுவிட்டார்கள் என்று நம்பியிருக்கும்போது அதிரடியாக பத்தாயிரம் வரையான படையினர் பலியாகக் கூடிய தாக்குதலைத் தொடுத்தால் போரின் நிலையே பகுதி, புதுக்குடியிருப்பின் ஆனந்தபுரம், இரணைப்பாலை என்ற சிறு பகுதியும் மாத்தளன் முள்ளிவாய்க்காலுக்கிடைப்பட்ட ஒடுங்கிய கடற்கரைப் பிரதேசமுந்தான்.

ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தையும் இந்தப் பிரதேசத்தையும் இழந்தால் வேறு மார்க்கமே இல்லை, அது அழிவாகத்தான் இருக்கும் என்று தலைவர் பிரபாகரன் நம்பினார். அதுதான் உண்மையும். எனவேதான் அவர் அப்படியொரு முடிவை எடுத்தார்.

தலைவர் பிரபாகரனுடன் அப்போது அங்கே புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பொட்டு அம்மான், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை ஆகியோரும் இருந்தனர். எனவே அவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு தாங்கள் களத்தில் இறங்குவதாக மூத்த தளபதிகள் முடிவெடுத்தார்கள்.

ஆனந்தபுரம் சமரில் ஏறக்குறைய மூவாயிரம் வரையான போராளிகள் ஈடுபடுத்தப்பட்டனர். முக்கியமான படைத்தளபதிகள் எல்லோரும் கூடிக் களத்திலிறங்கினர். கேணல் பானு, கேணல் விதுஷா, கேணல் தீபன், கேணல் கடாபி, கேணல் மணிவண்ணன், கேணல் நாகேஸ், கேணல் சேரலாதன் இப்படிப் பலர். (இவர்களில் பலர் பின்னர் பிரிகேடியர் என்ற இராணுவ நிலைக்கு உயர்த்தப்பட்டனர்) இவர்களைத் தவிர, அடுத்த நிலையிலுள்ள முக்கிய தளபதிகள் பலரும் களத்தில் நேரடியாக இறங்கியிருந்தனர்.

குடாரப்புத் தரை இறக்கம், அதைத் தொடர்ந்து பெட்டி வடிவில் இத்தாவிலில் வியூகம் அமைத்து கேணல் பால்ராஜ், கேணல் விதுஷா ஆகியோர் தமது அணிகளை வைத்துச் சமரிட்டதைப் போல ஆனந்தபுரம் சமரை இந்தத் தளபதிகள் வடிவமைத்திருந்தனர். எனவே இந்தத் திட்டத்தின்படி இந்தச் சமரை ஒரு மாதத்துக்கும் மேலாக அந்தப் பகுதியில் நீடிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒரு மாதத்திலும் படையினரை அந்தப் பகுதிக்கு - தமது வியூகத்தினுள் - கவர்ந்திழுத்து அவர்களுக்குப் பேரழிவுகளை ஏற்படுத்துவதே திட்டம். ஆகவே அதற்கேற்ற வகையில் வியூகங்கள், தாக்குதல் முறைமைகள், தாக்குதல் அணிகள், அதற்கான ஆயுதப் பிரயோகம் மற்றும் வழங்கல் என சகலதும் ஒழுங்கு படுத்தப்பட்டன.

திட்டத்தின்படி போர் தொடங்கியது. கடுமையான போர். பேரழிவுகளோடு அது தொடர்ந்து கொண்டிருந்தது. உடனடியாக சரியான தகவல்களைப் பெற முடியவில்லை. ஆனால் உள்ளே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அறிவதற்கு எல்லோருக்குமே பெரும் ஆவல். வதந்திகள், ஊகங்கள் தாறுமாறாகப் பறந்து கொண்டிருந்தன. வந்து விழும் எறிகணைகளை விடவும் அந்த வதந்திக் கணைகள் அதிக சக்தி வாய்ந்தவையாக இருந்தன.

ஆயிரக்கணக்கான படையினர் கொல்லப்பட்டிருப்பதாக ஒரு தகவல். விடுதலைப்புலிகள் இப்போது புதுக்குடியிருப்பைக் கைப்பற்றி, அதற்கு அப்பால் கேப்பாபிலவை நோக்கியும் தேவிபுரத்தை நோக்கியும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று இன்னொரு தகவல். இப்படிப் பலதகவல்கள் வந்து கொண்டேயிருந்தன. ஆனால் எதையும் உறுதிப்படுத்த முடியவில்லை. அப்படி போர்க்களத்தில் சிறிது வெற்றி பெற்றாலும் அதனுடன் போர் நின்று விடப்போவதில்லை என்பதையும் சிலர் மதிப்பிட்டிருந்தனர். ஏனெனில் அதற்கான அக புற நிலைமைகள் மாறிவிட்டன.

என்றாலும் போர் தொடர்ந்து கொண்டிருப்பதால் வெளியே நின்றவர்கள் சற்று மகிழ்ந்தார்கள். இந்தப் போர் நிச்சயம் புதிய மாற்றங்களைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கை ஒரு பக்கத்தில் உண்டென்றால், இது வெற்றிபெற வேண்டும் என்ற பிரார்த்தனை இன்னொரு பக்கத்தில். வாழ்வா சாவா என்ற நிலை அல்லவா?

உள்ளே நின்ற தளபதிகள் சாதாரணமானவர்கள் அல்ல. கேணல் தீபன் பால்ராஜ்ுடன் கூடவே நின்று வளர்ந்தவர். பால்ராஜுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் பேரபிமானம் பெற்ற தளபதியாக அவர்தான் இருந்தார். அவருடைய தலைமையில் போரடுவதற்குப் பல போராளிகள் தயாராகவே இருந்தனர். மிக நீண்டகாலம் முகமாலை முன்னரங்கை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் தீபன். ஆனையிறவை வெற்றிகொண்ட சமரில் இயக்கச்சி முனையை வென்று அந்தச் சமரின் வெற்றிக்கு உதவியர் அவர். இன்னும் பல சமர்க்

களங்கள் தீபனின் ஆற்றலுக்கு அடையாளமாக உண்டு. ஆகவே தீபன் சமர்க்களத்தில் நிற்கிறார் என்பது போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் சற்று நம்பிக்கையை அதிகரிக்கச் செய்தது.

இதைப்போல தளபதி பானுவும் களத்தில் இறங்கியிருக்கிறார் என்பது இன்னொரு முக்கியமான விசயமாகும். பானு நீண்டகால அனுபவமுடைய தளபதி. யாழ்ப்பாணம் முதல் மட்டக்களப்பு வரையில் பொறுப்பு மிக்க தளபதியாக இருந்தவர். யாழ்ப்பாணக் கோட்டையைப் புலிகள் கைப்பற்றியபோது பானுதான் அங்கே அப்போது கொடியேற்றியிருந்தார். அதைப்போல ஆனையிறவுப் படைத்தளத்தையும் புலிகள் வென்ற பிறகு பானுதான் கொடியேற்றியிருந்தார். இப்போது அதே பானுவும் களத்தில் நின்றார். பானு பீரங்கிப் படையணிக்கும் பொறுப்பாக இருந்தவர். அதைவிட வன்னியின் இறுதிச் சமரில் மன்னாரிலிருந்து அவர்தான் ஒருங்கிணைப்புத் தளபதியாகவும் கட்டளைத் தளபதியாகவும் இருந்தவர்.

அடுத்தது கேணல் மணிவண்ணன். இவர் கேணல் ராஜூவுக்குப்பின்னர் புலிகளின் பீரங்கிப் படைத்தளபதியாக பொறுப்பேற்றவர். இந்தச் சமரில் அவர் நேரடியாகக் களமிறங்கியிருந்தார். அவருடன் அவருடைய படையணியின் இரண்டாம் மூன்றாம் நிலையிலிருந்த ஏனைய தளபதிகளும் சமரில் குதித்திருந்தனர்.

அடுத்தது கேணல் விதுஷா. கேணல் விதுஷா பால்ராஜூடன் குடாரப்புத் தரையிறக்கத்தில் இறங்கி, முகமாலைச் சமரில் தாக்குப் பிடித்து நின்று வெற்றிகண்டவர். அதைவிட மாலதி படையணியின் தளபதியாகவே நீண்டகாலம் இருந்து அந்தப் படையணி பங்குபற்றிய பல சண்டைகளில் வெற்றியீட்டியவர். துணிச்சல் மிக்கவர். எதற்கும் விட்டுக் கொடாதவர். கடும் பிடியாளர் என்று பலராலும் விமர்சிக்கப் படுபவர் விதுஷா. பெண்போராளிகளின் ஆதர்சம் அவர். அவரும் தன்னுடைய மூத்த பெண் போராளிகளுடன் இணைந்து நின்று போரிட்டார்.

இதைப்போலவே கேணல் துர்க்கா, கேணல் கடாபி என்கிற ஆதவன், மட்டக்களப்புத் தளபதியாக இருந்த கேணல் நாகேஸ், நிதர்சனம் நிறுவனத்தின் பொறுப்பாளராக இருந்த கேணல் சேரலாதன் எனப் பலர் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தனர். கேணல் ஆதவன் முன்னர் தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலராகவும் பின்னர், மெய்ப்பாதுகாவலர் அணிக்குப் பொறுப்பான தளபதியாககவும் பிறகு படையப் பயிற்சிக் கல்லூரிகளுக்குப் பொறுப்பாளராகவும் இருந்தவர். இதைவிட தலைவர் பிரபாகரனின் மகனான சார்ள்ஸ் அன்ரனியின் படையணியைச் சேர்ந்த - கணனிப் பிரிவைச் சேர்ந்த தளபதிகள் போராளிகள் என்போரும் போரில் ஈடுபட்டனர்.

இரவு பகல் என்றில்லாத தாக்குதல். நிலை கொண்ட படையினர் மீதும் தாக்குதல். முன்னேறி வரும் படையினர் மீதும் தாக்குதல். இப்படி படையைச் சிதைக்கும் உச்சகட்டப் போர் இரண்டு நாட்களைக் கடந்தது. புலிகளின் வானொலி சில செய்திகளைச் சொன்ன போதும் எதையும் சரியாக உறுதிப்படுத்தவோ உத்தரவாதப் படுத்தவோ முடியவில்லை. சனங்கள் கொஞ்சம் நம்பிக்கை நிலைக்கு வந்தனர். போராளிகளிற் பலரிடமும் உற்சாகம் ஏற்பட்டது. ஆனால் எல்லோரிடமும் ஒரு அவநம்பிக்கையும் இழையோடிக் கொண்டேயிருந்தது. அதைப் பலரும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

இதேவேளை படையினரிடம் செல்வோரின் தொகை திடீரெனக் குறைந்து விட்டது. போர் நடந்து கொண்டிருக்கும்போது படையினரிடம் சென்றால் உயிராபத்துகள் நிகழக்கூடிய அபாயம் உண்டென்ற அபிப்பிராயம் சனங்களிடம் இருந்தது. அதனால் அவர்கள் நிலைமைகளின் போக்கை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரண்டு நாட்கள் தீவிரமாக நடந்த போர் மூன்றாவது நாள் மெல்ல தணிவுக்கு வந்தது. ஆனாலும் அதன் கொந்தளிப்புக் குறையவில்லை. அப்போது ஒரு செய்தி மெல்லக் கசிந்தது. ஆனால் அந்தக் கசிவுத் தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பெரும் பரபரப்பையும் உண்டாக்கியது.

ஆனந்தபுரம் பகுதியை படையினர் சுற்றிவளைத்துத் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டனர். படையினரின் முற்றுகைக்குள் ஏறக்குறைய எண்ணூறுக்கும் அதிகமான போராளிகள் சிக்கிவிட்டனர் என்றும் முதலில் வந்த தகவல்கள் கூறின. ஆனால் அங்கே உண்மையான நிலைமை என்ன என்று அறிய முடியவில்லை. தளபதிகளில் பலரும் காயப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளனர் என்று அடுத்து வந்தது தகவல். ஆனால் அதிலும் யார் யாருக்கு என்ன பிரச்சினை, யார் எப்படி இருக்கிறார்கள் என்று எதுவும் சரியாகத் தெரியவில்லை.

உண்மையில் அங்கே என்ன நடந்தது என்றால்,

புலிகள் ஆனந்தபுரத்தில் பெரியதொரு படைத்தளத்தை நிர்மாணித்திருந்தனர். அவர்களைப் பொறுத்தவரையில் அதை படையினருக்கான ஒரு பொறியாகவே உருவாக்கியிருந்தனர். அங்கே மையமாக நின்று போரிடும் போது - சூட்டு வலுவை ஓரிடத்தில் குவித்துக் கொண்டு போரிடும் போது அதற்கெதிராக படையினர் நிச்சயம் போரிட்டே ஆகவேண்டும். அப்போது அதற்கெதிராக தாம் தொடர்ச்சியாக செறிவும் வலுவும் கூடிய தாக்குதலை நடத்துவது என்றும் அவர்கள் திட்டமிட்டனர்.

புலிகளின் எதிர்ப்பு அதிகரிக்கும் போது மேலதிக படையினர் அங்கே கொண்டு வரப்படுவர். அப்படி வருகின்ற படையினர் மீதும் பல வகையான அதிர்ச்சிகரமான தாக்குதல்களைத் தொடுப்பது. அதில் பல படையினரைக் கொல்வது அல்லது அந்தப் படையணிகளைச் சிதைப்பது என்பது இந்தத் திட்டத்தின் இன்னொரு விரிவு. அதற்குத் தக்கமாதிரியே வியுகமும் தந்திரோபாயமும் நிலைகளும் அமைக்கப்பட்டன.



இப்படிக் கவர்ந்திழுத்துக் கொல்லப்படுதன் மூலம் படையினரைக் கலங்கவைத்தல் களைப்பும் திகைப்பும் அடைய வைத்தல் என்ற தந்திரோபாயத்தை படையினர் வேறு விதமாக முறியடித்தனர். அவர்கள் புலிகளின் பின் வழியான காயப்படுகிறவர்களையும் இறப்பவர்களையும் கொண்டு செல்லும் வழி மற்றும் உணவு, மேலதிக படையணிகளை வழங்குவது, ஆயுதங்களை எடுத்துச் செல்வது ஆகியவற்றுக்கான வழங்கல் வழியை மூடினர்.

இது எப்படித் தெரியுமா?

புலிகளின் எதிர்ப்பு அதிகரித்திருக்கின்றதாலும் அது மிக மூர்க்கமாக இருக்கின்ற படியினாலும் அந்தத் தாக்குதலை தமக்கெதிரான முறையில் புலிகள் வடிவமைத்திருக்கின்றனர் என்று அவர்கள் கருதினர். இதனால் அந்தப் பொறியில் சிக்கி விடாமல் அவர்கள் தமது பலமான தரப்பான கண்காணிப்பு அணியை அதாவது ஆழ ஊடுருவிக் கண்காணித்துத் தாக்கும் அணியைப் பயன்படுத்தி புலிகளின் விநியோக வழியைக் கண்டு பிடித்தனர்.

பின்னர் இந்த வழியை மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதன்படி அவர்கள் இரவோடிரவாக முட்கம்பிச் சுருள்களைப் பாவித்து மூன்று அடுக்கிலான தடுப்பு வேலியைப் போட்டனர். இப்போது புலிகள் தப்பிச் செல்வதற்கு வழியுமில்லாமல், அங்கே தொடர்ந்திருப்பதற்கான விநியோக வழியுமில்லாமல் சிக்கிக் கொண்டனர்.

இதைச் சற்றும் புலிகள் எதிர்பார்க்கவேயில்லை. அதேவேளை படையினர் உள்ளே சதுர வடிவில் நின்ற ஆயிரக்கணக்கான புலிகளை நோக்கி - அவர்கள் நின்ற அந்தச் சிறிய நான்கு சதுர கிலோ மீற்றர் பகுதியின் மீது - படையினர் மிகவும் உக்கிரமான தாக்குதலைத் தொடுத்தனர். இந்தத் தாக்குதலுக்காக அவர்கள் செலவிட்ட வெடிபொருட்கள் கிட்டத்தட்ட வேறு இடங்களில் செலவிட்ட வெடிபொருட்களை விடவும் பத்து மடங்குக்கும் அதிகமாகும்.

பொறி இப்போது அதன் நோக்க நிலையை - அர்த்த நிலையை மாற்றிக் கொண்டு விட்டது. அதாவது அது பொறியாகத்தான் இருந்தது. ஆனால், அதை உருவாக்கிய புலிகளுக்குப் பதிலாக படையினருக்கு வாய்ப்பாகவே அமைந்து விட்டது. துரதிருஷ்ர வசமாக அது புலிகளுக்கான பொறியாகி விட்டது.

இரவில்தான் விநியோக நடவடிக்கைகள் நடப்பது வழக்கம். பகலில் எதுவும் செய்ய முடியாது. கண்காணிப்பு விமானங்கள் அதற்கு இடமளிக்காது. ஆளில்லா வேவு விமானம் வானத்தை விட்டு நீங்குவதே இல்லை. ஒரு விமானம் இறங்குவதற்கு முன்னர் இன்னொரு விமானம் வானத்தில் நிற்கும்.

புலிகளின் வியூகத்துக்குக் கிழக்கே களப்பும் வெளியும். ஆகையால் காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் மற்றும் மருந்து, ஆயுதம், உணவு எல்லாவற்றையும் இரவில்தான் அந்த வழியால் கொண்டு செல்ல முடியும். மாலையானதும் அந்த வழியால் சென்ற போராளிகள் முட்கம்பி தடுப்புகளைக் கண்டு அதிர்ந்தனர். அப்போதுதான் அவர்களுக்கு நிலைமை விளங்கியது. கட்டளைப் பீடத்துக்கு அவர்கள் தகவல் தந்தனர். நிலைமை பாதகமாகியுள்ளது என்பதை கட்டளைப் பீடம் உணர்ந்தது.

இப்போது உள்ளே நிற்கின்ற போராளிகளை மீட்கவேண்டிய நிலை. அதற்காக மேலதிக படையணிகள் வரவழைக்கப்பட்டன. இதே வேளை உள்ளே கடுமையான தாக்குதல் நடந்து கொண்டிருந்தது. தலையை வெளியே தூக்க முடியாதபடியான தாக்குதல். எதிர்பார்த்ததை விடவும் இழப்புகள் அதிகம். நெருக்கடிகள் அதிகம். ஆனாலும் அவர்கள் சளைத்து விடவில்லை. இது இறுதிப் போர். வாழ்வா சாவா என்ற போர். இதை விட முடியாது. விட்டால் வேறு வழி கிடையாது. ஆகவே எதிர்த்து நின்று தான் ஆகவேண்டும். போரிட்டுத்தான் ஆகவேண்டும்.

அந்த நெருக்கடி நிலையிலும் போரின் தீவிரம் குறையவில்லை.

ஆனாலும் படையினரின் தடையை உடைப்பதற்குப் புலிகளால் முடியவில்லை. இதற்குள் அந்தப் பகுதியில் புலிகளின் முக்கிய தளபதிகள் தான் நிற்கிறார்கள் என்ற தகவலை படையினரின் ஒட்டுக் கேட்கும் பிரிவினர் கண்டு பிடித்து விட்டனர். அதற்குள் யார் யாரெல்லாம் நிற்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது. அதனால், அது தங்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பென்றே அவர்கள் கருதிக் கொண்டனர். அந்த வாய்ப்பை அவர்கள் இழக்க விரும்பவில்லை.

அதனால் முற்றுகை இறுக்கப்பட்டது. சுற்றிவர முற்றுகையை இறுக்கிக் கொண்டு, உள்ளே பேரழிவுத் தாக்குதலை படையினர் மேற்கொண்டனர். சக்கை, சரமாரி என்றெல்லாம் சொல்லக்கூடியமாதிரி, எறிகணைகளை அவர்கள் புலிகள் மையமிட்டு நின்ற பகுதிக்குள் கொட்டினர். அந்தப் பகுதியை அப்படியே அழிப்பதுதான் அவர்களுடைய இலக்கு.

புலிகளின் மீட்புப் படையணிகளோ, உதவிப் படையணிகளோ அங்கே செல்வதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை என்றாகி விட்டது. அதேவேளை உள் நிலைமைகள் சீர்செய்ய முடியாத கட்டத்துக்கு, நின்று தாக்குப்பிடிக்க முடியாத கட்டத்துக்குச் சென்று விட்டன. உள்ளே நிற்பவர்கள் தங்கள் ஆற்றலைப் பயன்படுத்திக் கொண்டு முற்றுகையை உடைத்து வெளியே வருவதைத் தவிர வேறு வழியில்லை என்ற கட்டம். அத்துடன் முக்கிய தளபதிகள் பலர் கொல்லப்பட்டு விட்டனர் என்ற தகவல்களும் வெளிவரத் தொடங்கியது.

இது வெளியே இருந்த மக்களையும் போராளிகளையும் கலங்கவைத்தது. ஒரு பக்கம் பெருந்துக்கம். அடுத்த பக்கம் இந்த இழப்புகளின் வலி. பல களங்களை வெற்றிகரமாக வழிநடத்தியவர்கள், எத்தனையோ தாக்குதல்களில் இருந்து தப்பியவர்கள், மரணத்துடன் வெற்றிகரமாக இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நின்று விளையாடியவர்கள், தமிழ்ப் படையணிகள் என்ற புலிகளின் போராளிகள் அணிகளைக் கட்டிப் போரில் பல பரிமாணங்களை உருவாக்கியவர்கள் எல்லாம் மிகச் சாதரணமாகவே அங்கே, அந்த ஆனந்தபுரம் சமரில் கொல்லப்பட்டு விட்டனர்.

கேணல் தீபன், கேணல் கடாபி, கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, கேணல் மணிவண்ணன், கேணல், நாகேஸ்... என்று ஒவ்வொருவரும் துக்கத்துடன் இந்த இழப்புகளையிட்டுப் பல கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

கேணல் பானு உட்பட சிலர் கடுமையான போராட்டத்தின் பின்னர் காயங்களுடன் வெளியேறினர். அவர்கள் அங்கிருந்து தப்பி வந்ததை யாராலுமே நம்பிக்கொள்ள முடியவில்லை. அந்த அளவுக்கு முற்றுகையின் இறுக்கமும் தாக்குதலின் தீவிரமும் இருந்தது.

சனங்களிடம் இப்போது இருந்த கொஞ்ச நம்பிக்கையும் அப்படியே சரிந்தது. போராளிகள் சோர்ந்து விட்டனர். பல போராளிகள் மனங் கலங்கிப் போனார்கள். இப்படி இத்தனை தளபதிகளும் ஒன்றாகவே கொல்லப்படுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை.

ஆனந்தபுரம் சமரைப் புலிகள் அப்படித் திட்டமிட்டிருந்ததற்கு இன்னொரு காரணம் இந்தச் சமர்ப்புள்ளியில் படையினரை ஒரு மாதகாலம் வரையில் நிறுத்திக் கொண்டால், அதற்குள் சர்வதேச நிலைமைகளை தமக்கேற்றமாதிரி மாற்றிக் கொள்ளலாம் என்பதுடன், அந்த ஒரு மாத கால அவகாசத்தைப் பயன்படுத்தி அடுத்த பெருந்தாக்குதலுக்கான தயாரிப்புகளைச் செய்து கொள்ளலாம் என்பதாக இருந்தது.

ஆனால், அந்த எதிர்பார்ப்பு பெருந்தோல்வியில் முடிந்ததை அடுத்து, எல்லாத் திட்டங்களும் அப்படியே குலைந்து போயின. புலிகளின் இறுதி முயற்சியும் பெருந்தோல்வியில் முடிந்ததையடுத்து படைத்தரப்பு முழு உஷாரடைந்தது. அது இறுதிப் போரை இன்னும் உக்கிரமாக்கியது.

உண்மையில் அந்தச் சமர்தான் புலிகளின் இறுதிச் சமர். அதற்குப் பின்னர் நடந்தவை எதுவும் பதிவுக்குரிய பெறுமானத்தைக் கொண்டவையாக இல்லை. அதாவது புலிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இறுதி நடவடிக்கை அதுதான்.

அந்தச் சமரில் கொல்லப்பட்டதைப்போல வேறு எந்தச் சமரிலும் புலிகளின் பெரும் எண்ணிக்கையான மூத்த தளபதிகள் கொல்லப்படவேயில்லை. அது எல்லோரையும் உலுக்கியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஏப்ரல் 2009 மாத்தளன் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் பெருந்துக்கத்துடனும் பேரவலங்களோடும் கழிந்து கொண்டிருந்தது. சனங்கள் படையினரிடம் தப்பிச் செல்வதற்காக இன்னும் கடுமையாகப் போராடத் தொடங்கினர். அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழிகள் இருக்கவில்லை.

ஆனந்தபுரம் சமரில் மூத்த தளபதிகள் பலரையும் களமுனைத்தளபதிகள் பலரையும் நூற்றுக்கணக்கான போராளிகளையும் இழந்த அந்தச்சமர் தமிழ் மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

தமிழீழ விடுதலைப் போரினை வழிநடத்திய தலைவனையும் போராளிகளையும் உலுப்பி விட்ட, அந்த இழப்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவ சமநிலையை எதிரிக்கு சாதகமாக்கி விடுதலைக்காக விரைந்த பயணத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

ஆனாலும் தர்மத்தின் அடிப்படையில் பயணித்த தமிழீழ விடுதலைப் போராட்டம் மீண்டும் எழுச்சியோடு புதிய பரிணாமத்தில் புதுவீச்சோடு பயணிக்க தோள்கொடுப்போம் என உறுதியெடுப்போம்.

நன்றி: ஈழப்பறவைகள் இணையம்

# விடுதலைப்புலிகள் இருந்தவரை அமெரிக்க கப்பலோ சீன நீர்மூழ்கியோ இந்து சமுத்திரக் கடலில் முகம் காட்டியதில்லை அத்துமீறிய எந்த நாட்டு கப்பலாக இருந்தாலும் அவை அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டன. இந்திய ஒன்றியத்திற்கு புலிப்படை ஒரு பெரும் பாதுகாப்பாக இருந்தது ஆனால் இன்று? –தமிழ்ப்பேரசு கட்சியின் வ. கௌதமன்

மார்ச் 25, 2022



விடுதலைப்புலிகள் இருந்தவரை அமெரிக்க கப்பலோ சீன நீர்மூழ்கியோ இந்துமாக் கடலில் முகம் காட்டியதில்லை. அத்துமீறிய எந்த நாட்டு கப்பலாக இருந்தாலும் அவை அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டன. இந்திய ஒன்றியத்திற்கு புலிப்படை ஒரு பெரும் பாதுகாப்பாக இருந்தது என தமிழ்ப்பேரசு கட்சியின் வ.கௌதமன் வேண்டுகோள் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

1971 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் யுத்தம் நடந்த போது அமெரிக்காவும் சீனாவும் பாகிஸ்தானுக்கு போட்டி போட்டுக் கொண்டு ஆயுதம் மற்றும் இராணுவ உதவிகள் செய்து கொண்டிருந்த நிலையில், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அதிரடியாக இராணுவத்தை அனுப்பி கிழக்கு பாகிஸ்தானைப் பிரித்து சுதந்திரம் பெற்ற வங்க தேசம் என அறிவித்தார். அதைபோன்று இந்தியாவிற்குப் பேராபத்தாக விளங்கி இலங்கையை முற்றும் முழுதாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சீனாவிற்கும் சேர்த்து பாடம் புகட்ட தமிழர் தாயகமான தமிழீழத்தை பிரித்து தனி நாடாக பிரகடனப்படுத்த வேண்டுமென்று பிரதமர் மோடி அவர்களுக்குத் தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பாக உரிமையோடு வேண்டுகோள் வைக்கிறேன்.

‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’ என்பது போல் உலகம் பார்க்க மனிதகுலம் பதை பதைக்க ஒரு திட்டமிட்ட இனப்படுகொலையைச் செய்த ராஜபக்சே, கோத்தபய கூட்டம் இன்று இலங்கையில் அதற்கான அறுவடையை செய்து கொண்டிருக்கிறது. சிங்கள அதிகார வர்க்கம் 30 ஆண்டுகளுக்கு மேலான கொடூர யுத்தத்தை நடத்திய போது இலங்கையில் இன்று நிகழும் பசி பஞ்சத்தைவிட பல நூறு மடங்கு அதிகமான துன்பத்தையும் ரணங்களையும் தமிழர்கள் அனுபவித்தார்கள். முள்ளிவாய்க்காலில் ஒருவேளைக் கஞ்சிக்காக கையேந்தி நின்ற நூற்றுக்கணக்கான எங்கள் பிஞ்சுக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், வயதானவர்கள் மீது ஈவு இரக்கமற்று இரசாயன கொத்து குண்டுகளை வீசி கொன்றதன் பலன் இன்று ஒரு துண்டு ரொட்டிகாக சிங்கள மக்கள் ராஜபக்சேவை எதிர்த்து கலவரம் செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மக்களை வேறு வேறாக பார்க்கவில்லை. பசியோடு அலையும் எங்கள் பிள்ளைகளையும் சிங்கள பிள்ளைகளையும் ஒன்றாகவே பார்க்கிறோம். அதற்காக சித்தம் கலங்குகிறோம். இந்நிலை மாற வேண்டும். இந்த வறுமையைப் பயன்படுத்தி உலகத்தை ஆளத் துடிக்கும் சீன மிருகம் சிங்கள அதிகார வர்க்கத்திற்கு பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தது. வட்டிகூட கட்ட முடியாமல் இன்று மொத்த இலங்கையையும் முழுங்கிக் கொண்டிருக்கிறது. இது இந்திய ஒன்றியத்திற்குப் பேராபத்து. சாலை, துறைமுகம், விமான நிலையம், இராணுவத்தளம், சிறப்பு பொருளாதார மண்டலம் என எங்கும் சீன மயம். இந்துமாக் கடலில், கச்சத்தீவில் சீன கப்பல் இந்திய ஒன்றியத்தை வேவு பார்த்துவிட்டு செல்கிறது. திருகோணமலையில் நின்றபடி ஒரு சீன ராணுவன் இங்கிருந்து தமிழ்நாட்டிற்கு எத்தனை கிலோமீட்டர் என்று கேட்டறிந்த காட்சி வலைதளம் முழுக்க வட்டமிட்டு வந்தது. இருந்தும் இலங்கையைக் கண்டிப்பதற்குப் பதிலாக பல்லாயிரக்கணக்கான கோடிகளை மூட்டை மூட்டையாக கட்டி இந்திய ஒன்றியம் இலங்கைக்குத் தருவது வியப்பாகவே இருக்கிறது. விடுதலைப்புலிகள் இருந்தவரை அமெரிக்க கப்பலோ சீன நீர்மூழ்கியோ இந்துமாக் கடலில் முகம் காட்டியதில்லை. அத்துமீறிய எந்த நாட்டு கப்பலாக இருந்தாலும் அவை அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டன. இந்திய ஒன்றியத்திற்கு புலிப்படை ஒரு பெரும் பாதுகாப்பாக இருந்தது. ஆனால் இன்று?

தமிழர்களைக் கொடூரமாக கொன்ற ஒரு சிங்கள இராணுவ வீரன் பிரபாகரன் இருந்திருந்தால் இந்நேரம் சிங்களவர்களுக்கும் சேர்த்து உணவளித்திருப்பார் என்று பேசிய காணொளி உலகத்தின் மனசாட்சியை உலுக்கி கொண்டிருக்கிறது.

ஐநாவின் செக்யூரிட்டி கவுன்சிலில் சீனா இருப்பதால்தான் செய்த இனப்படுகொலையிலிருந்து சீனா தன்னைக் காப்பாற்றும் என்றும் தனக்கு ஏற்பட்ட பொருளாதார பிரச்சினையைச் சீனா சரி செய்யுமென்றும் நம்பி இலங்கை இன்று முற்றுமுழுதாக தன்னை சீனாவிடம் இழந்து ஒரு டைட்டானிக் கப்பலை போன்று மூழ்கிக் கொண்டிருக்கிறது. இந்நேரத்திலாவது இந்திய ஒன்றியம் விழித்துக்கொள்ள வேண்டும். இந்திரா காந்தியால் சுதந்திர நாடாக பிரகடனப் படுத்தப்பட்ட வங்கதேசம் இப்போது சீனாவின் கையில். இந்தியாவின் பிரதான எதிரியான பாகிஸ்தானும் சீனாவோடு இறுக கைப்பற்றி நிற்கிறது. இந்தியாவிற்கு வாலையும் சீனாவிற்குத் தலையையும் கொடுத்து படுத்துக்கிடக்கும் இலங்கையும் இன்று சீனாவின் பிடியில். இந்தியாவைச் சுற்றிலும் சீனா இரும்பு வளையம் அமைத்திருக்கும் நிலையில் பிரதமர் மோடி அவர்கள் இந்திய ஒன்றியத்தின் தவறான வெளியுறவுக் கொள்கையை இனியாவது தகர்த்தெறிந்து அதிரடியாக இராணுவத்தை அனுப்பி சிங்கள மக்களைக் காப்பாற்றுவதோடு இந்திய ஒன்றியத்திற்கு எப்பொழுதும் நன்றி உள்ளத்தோடும் பாதுகாப்போடும் இருக்கின்ற, இருக்கப் போகின்ற தமிழர்களுக்கான தனித் தமிழ் ஈழத்தைப் பிரித்தெடுத்து சுதந்திர நாடாக பிரகடனப் படுத்த வேண்டுமென்றும், அது மட்டுமே எதிர்கால இந்தியாவிற்கு நன்மை பயக்கும் ஒரே செயல் என்பதையும் தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பாக மீண்டுமொருமுறை உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.










# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

## திருகோணமலை இன அழிப்பு 12.04.2006

திருகோணமலை மாவட்டம் 1980களிலிருந்து தமிழருக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடரும் கொதிப்பான ஒரு இடமாக இருந்து வந்திருக்கின்றது. இவ்வன்முறைகள் ஊடாக இம்மாவட்டதிதில் செறிவாக வாழ்ந்து வந்த தமிழர் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விரட்டப்பட்டனர். சிறீலங்கா அரசால் வெளியிடப்பட்ட தீவின் மக்கள் பரவல் சார்ந்த புள்ளிவிபரங்கள் இதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

இதே போல் 2006 ஏப்பிரல் 12ஆம் நாள் மாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தமிழர்களுக்கு எதிராக சிங்களக் காடையர்களின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதன்போது 10 தமிழ்மக்கள் உட்பட 15பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 50பேர் படுகாயமடைந்தனர். மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்படுத்தப பட்டதுடன் பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் எரித்து அழிக்கப்பட்டன.

1983, 1987ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் திருகோணமலை நகரில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற மிகமோசமான வன்முறையாக இது கருதப்படுகின்றது. 2006 ஏபபிரல் 12ஆம் நாள் மாலை 4 மணியளவில் திருகோணமலை நகரிலுள்ள மரக்கறிச் சந்தைப் பகுதியிலுள்ள தேங்காய்க் கடைக்கு முன்பாக குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் ஐந்து சிங்களவரும் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு முன்னரே மூன்று லொறிகளில் சிங்களக்காடையர்கள் திருகோணமலை நகரக்குள் கொண்டு வரப்பட்டதை தமிழர்கள் கண்டனர். இச்சிங்கள காடையர்கள் தமிழருக்குச் சொந்தமான கடைகளை கொள்ளையடித்தபின் இக்கடைகளுக்கு தீயூட்டினர். இதனால் திருகோணமலை நகரிலிருந்து பெரிய புகைமூட்டம் எழுவதைக் காணக்கூடியதாக இருந்தது. விரைவில் தமிழர் மேலான தாக்குதல்கள் ஆரம்பித்தது.

இத்தாக்குதல்களுக்கு துவக்குகளும் கத்திகளும் உபயோகப்படுத்தப்பட்டன. ஏப்பிரல் மாதப் புதுவருடக் கொண்டாட்டத்திற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நகருக்கு சென்றிருந்த பல தமிழர் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

வன்முறைகள் நடைபெறுவதை அங்கு நிலை கொண்டிருந்த பல இலங்கை இராணுவத தினர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற் ற விபரம் (பெயர் வயது)





01. சுதுபண்டா, 39
02. அந்தோனிராஜ் கீதநடனி, 33
03. சந்திரா மத்துவஸ், 50
04. கசுன் சமந்தா, 23
05. கந்தசாமி திரவியன், 56
06. அசங்கா மிலான், 21
07. சுசந்தா, 20
08. ரில்வான், 36
09. செல்வராஜா, 44
10. மயூரா பெதிகே சிவமணி, 30
11. பரூக், 55
12. ராச்மி டிலராங்கி, 08

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# தேசிய பாதுகாப்பு என நீங்கள் கருதுவது சிங்கள இனத்தின் பாதுகாப்பை மட்டுமா?

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி!

மார்ச் 22, 2022

தேசிய பாதுகாப்பு என நீங்கள் கருதுவது, சிங்கள இனத்தின் பாதுகாப்பை மட்டுமா? இங்கு நாடு என நீங்கள் கருதுவது ஒரு இனத்தை மட்டும் தான் குறிக்கிறதா? அல்லது இந்த நாட்டின் அனைத்து குடிமக்களையும் குறிக்கிற்தா? என பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,
அனைத்து இன குடிமக்களையும் உள்ளீர்த்து அவர்களுக்குமான பாதுகாப்பு என கருதினால், அது ஒரு போதும் பெரும்பான்மைவாத (Majoritarian) கருத்தியலில் இருந்து உருவாக முடியாது.

♦ உதாரணத்துக்கு இந்த அவையில் பெரும்பான்மையானவர்கள் ஒன்றை கேட்கிறார்கள் எ என்பதற்காக அது முழு நாட்டுக்கும் உரித்தானது என கருதவே முடியாது. துரதிர்ஷ்டவசமாக இங்கு இருக்கின்ற எதிர்க்கட்சியினரும் அதே எண்ணப்பாங்கிலேயே கருத்துரைத்திருக்கிறார்கள்.

♦ இங்கு இந்த நாடு என கூறும் போது, இங்கு பல்லின அடையாளங்களை வெளிப்படுத்துபவர்கள் இருக்கிறார்கள் என் பதை ஏற்பதில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். எம்மை பொறுத்தவரை இந்த நாடு ஆகக்குறைந்தது இரு தேசங்களை கொண்ட பல்தேச நாடாகும்.

எனவே, ஒரு நாட்டின் கருத்து என வரும்போது, ஒவ்வொரு இனத்தினரினதும் எண்ணங்களும் எதிர்ப்பர்ப்புகளும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இந்த நாட்டில் அரசுக்கு எதிராக போராட்டம் நடந்தது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அந்த போராட்டம் ஏன் நடந்தது என பாருங்கள். இந்த அரசு, தொடர்ச்சியாக இரு இனக்குழுமத்தை மட்டும் கருத்தில் கொண்டு மற்றைய சமூகத்தை ஏற்றிக்கொள்ள மறுத்து ஒதுக்கு ஒடுக்கியதாலேயே இங்கு போராட்டம் உருவானது.

♦ இந்த நாட்டை நாம் எப்படி உருவாக்கி பார்க்க விரும்புகிறோம் என்பதை வடக்கு கிழக்கின் மக்கள், ஜனநாயக ஆணையாக தொடர்ச்சியாகவும் மிக தெளிவாகவும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

அவை ஆயுதத்துக்கோ பிரிவினைக்கோ ஆன கோரிக்கைகளாக இருக்கவில்லை. மாறாக, பிரிவினைக்கும் ஆயுதத்துக்கும் எதிரான ஆணைகளாகவே முன்பு இருந்திருந்தது.

இந்த அவைக்கு வந்திருந்த தமிழ் பிரதிநிதிகள், வன்முறையையும் பிரிவினையையும் நிராகரித்தே குரல் கொடுத்திருந்தார்கள். அவர்கள் கேட்டதெல்லாம், “எமது விருப்புகளையும் செவிமடுங்கள், எம்மையும் இந்த நாட்டின் சம பிரஜைகளாக மதித்து எம்மையும் உள்வாங்குங்கள்” என்பதே ஆகும். ஆனால் அங்குதான் நீங்கள் தவறிழைத்தீர்கள்.

அன்று மட்டும் அல்ல, இன்று வரைக்கும் அதே தவறையே தொடர்ந்தும் இழைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். இந்த நாடு பல தேசங்கள் உடைய நாடென்றும் இங்கு எமக்கு சமஷ்டி முறையான ஆட்சியே தேவை எனவும் மிக தெளிவானதும் மிக உறுதியானதுமான ஜனநாயக ஆணையை மீளவும் மீளவும் எமது மக்கள் அளித்து வருகின்ற போதும் அதை மீளவும் மீளவும் நீங்கள் கருத்திலெடுக்காது நிராகக்ரிக்கின்ற போது, எமது பிரதிநிதிகள் இங்குவந்து அந்த ஆணையை பற்றி பேசிவது



முட்டுச்சுவரில் தலையை மோதுவதாகவே இருக்கின்ற போது எம்மை ஒதுக்கி நடப்பதையே தொடர்ந்தும் உங்கள் செல்நெறியாக கொண்டிருக்கின்ற போது எமது மக்கள் வேறு என்ன செய்ய முடியும்?

எமது தாய்நிலத்தில் இருக்கும் மக்கள் தொடர்ச்சியாக உரிமை மறுக்கப்ப்டுகின்ற போது, அவர்களது தாய்நிலம் அவர்களிடம் இருந்து பறிக்கப்ப்டுகின்ற போது, அவர்களது சமய வழிபாட்டிடங்கள் அபகரிக்கப்படுகின்ற போது, காலம் காலமாக உழுது பயிரிட்ட நிலத்தில் இருந்து போரினால் வெளியேறி இப்போது மீள வரும்போது, அவை காட்டு நிலமென்வும் அதில் பயிரிடமுடியாதெனவும் மறுதலித்து, அதே நேரம் வேறு பிரதேசத்தில் இருந்து வருகின்ற ஏனைய இனத்தவருக்கு நிலத்தில் வளர்ந்திருக்கும் மரங்களை வெட்டி உழுது பயிரிட அனுமதிக்கும் போது அந்த மக்கள் வேறு என்னதான் செய்ய முடியும்?

ஆனால் இது தான் இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்றார்!


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation

நகரங்களில் எமது சேவை மார்க்கம், மற்றும் மிசிசாகா





Christeen Seevaratnam
Licensed Funeral
Pre-Planner
416-258-6759

Vilosanan Sivatharman
Licensed Funeral
Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?
Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost a today's prices
• Convenient time payment
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham ON L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community

# என் கண்களே சாட்சி

# வாழ்ந்து காட்டுகிறேன்

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)



வீடும் வளவும் இருக்கும் நிலையைப் பார்க்க வந்திருந்த சுந்தரம்பிள்ளை உள்ளே செல்லப் பாதை இல்லாததால் வெளியில் நின்று அவதானிக்கிறார். அதுதான் அவருடைய வீடு என்பதற்குச் சான்றாக. முற்றத்தின் இருமருங்கும் அவர் நாட்டி வைத்த செவ்விளனீர்த் தென்னம்பிள்ளைகள் தலைக்கு மேல் வளர்ந்து இன்று செவ்விளனீர்க் குலைகளுடனும் செத்தல் தேங்காய்களுடனும் நிற்கின்றன. தெருப் பக்கம் வேலி இல்லை. படலையும் இல்லை, பசுஞ்செடி கொடிகளும் முட்புதரும் வளர்ந்து வேலி அமைத்திருந்தன. முன் எவருமே பார்த்திராத புதுவகைத் தாவரங்கள் தளைத்துச் செழித்து வீட்டின் உடைவுகளை ஆக்கிரமித்திருந்தன. சமையலறைப் பக்கம் புகைபோக்கி மாத்திரம் சில கருவட்டக் கோறைகளுடன் நிமிர்ந்து நின்றது.

அந்த ஊரில் செல்வாக்குடன் வாழ்ந்திருந்த சுந்தரம்பிள்ளையின் வீடு, இடம்பெயர்வு என்றொரு பிரளயம் ஏற்பட்டவேளை பகல் இரவாய் நடந்து கடல் கடந்து வன்னி மண்ணில் ஒரு சிற்றூரில் குடிசை அத்தைத்துத் தங்கவேண்டியதாயிற்று. வன்னிநாடு எங்கும் கொட்டில், குடிசை தகரவீடுகள் புதிதாய்த் தோன்றியிருந்தன. அவற்றில் இடம் பெயர்ந்து வந்த மக்கள் குடியிருந்தனர். அமைதியான சூழல், அந்த அமைதி நீண்ட நாள் நிலைக்கவில்லை. நான்காண்டுகளின் முடிவில் மற்றொரு இடம்பெயர்வு நேர்ந்தது. கொட்டில் குடிசைகளைக் கைவிட்டு, பெட்டி, கட்டில்களைப் பின்னால் விட்டு, கையில் ஏந்தத் தக்க பை நிறைந்த பொருள்களுடன் அந்நிய மண்ணில் அடைக்கலம் புகவேண்டி கட்டாயம் ஏற்பட்டது. அகதி எனப் பெயரிட்டுப் பல்லாயிரம் மக்கள் பாடசாலை அறைகளிலும் தகரக் கொட்டில்களிலும் தங்க வைக்கப்பட்டனர். தொட்டிக்கும் சோற்றுக்கும் கையேந்தி நின்றனர். காலைக்கடன் கழிக்க வரிசையில் நடந்தனர்.

சுந்தரம்பிள்ளை குடும்பம் வெளியே செல்ல, ஆறு மாத கால முகாம் வாழ்க்கைக்குப் பிறகு, அனுமதி கிடைத்தது. அவருக்கு வயது அறுபத்துநாலு மனைவிக்கு வயது ஐம்பத்தேழு என்ற காரணத்தால், உண்மையில் அந்த முகாமிலிருந்து அறுபது வயதுக்கு மேற்பட்ட எல்லாரையும் சொந்த ஊருக்குச் செல்ல அனுமதித்தனர்.

சொந்த ஊரில் சுந்தரம்பிள்ளைக்கு வீடு இருக்கிறதா, என்ன! எங்கே போய் குடியிருப்பார்? முகாமில் நன்கு பழக்கமானவர் முருகையா, அவர் நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவருடன் சில நாள் தங்குவதற்கு ஒப்புதல் பெற்றுக் கொண்டார்.

வீடு பார்த்து வருவதாகச் சொல்லிக்கொண்டு புறப்பட்டு வந்தவர் இங்கே வீதியில் நிற்கிறார். அவர் வன்னியில் இருந்தபோது அவருக்குக் கிடைத்த ஒரு தகவல் ஞாபகம் வருகிறது.

எறிகணை விழுந்து வெடித்து உங்கள் வீடு நொருங்கிக் கிடைக்கிறது. நல்ல நிலையில் உள்ள பன்னல், நிலை, கதவு, கூரை ஓடுகள் எல்லாம் இங்கே பின் தங்கியிருந்த சில துணிச்சல் மிக்கவரின் தேவைக்காய் திருட்டுப் போகின்றன. ஒரு நண்பர் அனுப்பிய செய்தி அது.

அந்த அழிவை, இழப்பை இன்று நேரில் பார்க்கிறார். பற்றைக்குள் கால் பதித்து மெல்ல முன்னேறி ஒரு கல்லில் ஏறி நின்று நோட்டமிடுகிறார். கற்பாளங்களிடையே பிறந்து படர்ந்து செழித்திருக்கும் பசுங்கொடிகளில் வண்ண மின்குமிழ்கள் போல் மலர்ந்திருக்கும் பூக்கள். அவைமேல் அமர்வதும் பறப்பதுமாய் வண்டுகளும் வண்ணத்துப் பூச்சிகளும். தனித்தனிக் கூட்டமாய் சிட்டுக் குருவிகளும் புதுனிக்குஞ்சுகளும், புழு, பூச்சி பொறுக்கும் தனியொரு செண்பகப் பறவை.

எண்பத்தெட்டில் அவருடைய வீட்டில் அமைதிப்படைகளின் முகாம் இருந்தது. அப்போது அவர்களுக்கு வேலி அமைப்பு விரோதமாய்ப் பட்டதால் வெட்டி எறிந்தார்கள். அசோகா, போகன்வில்லா போன்ற கூடல் மரங்களையும் வெட்டி விழுத்தினார்கள். அவை அடியோடு பட்டுப்போக வில்லை. நாளடையில் வேர்களிலிருந்து தளைத்துப் பிற தாவரங்களுடன் பிணைக்கப்பட்டிருந்தன. பார்வைக்கு அது ஒரு பசுமைக் குன்று.

சுந்தரம்பிள்ளையின் மனதில் ஓடிவந்து புகுந்தது மற்றொரு சம்பவம். ஒரு விடியிலில் அமைதிப் படையினரால் அவர் கைது செய்யப்பட்டார். கிளர்சசியாளருக்குப் புகலிடம் கொடுத்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு படைத்துறை ஜீப்பில் அவர் ஏற்றிச் செல்லப்படுகையில் ஊர் மக்கள் கூடி நின்று வேடிக்கை பாாத்தனர். படைத் தலைமையகத்தில் அவரை மூன்று நாட்கள் தடுத்து வைத்து விசாரித்த பின்னர் விடுதலை செய்தனர். மூனறு கட்டை தூரத்தைக் கால் நடையாகவே கடந்து வீடு வந்து சோந்த போது அயலவரின் ஆச்சரியப் பார்வையை எதிர் கொண்டவர். இதே போல் பல நினைவுகள் வந்து அவர் நெஞ்சில் நின்று பொயின.

“கிரிச் கீச் கீச்” என் குஞ்சுக் குரல்கள் அவரை நிமிர்ந்து பார்க்க வைத்தது. புகை போக்கி வரையும் அதன் வளைகள் ஊடாகவும் ஓடித் துரத்தி விளையாடும் அணில்கள், “வீடு எது எதற்கெல்லாம் புகலிடமாச்சு” என்றெண்ணியவராய் அப்பாலும் மிகக் கவனமாய் சில அடிகள் எடுத்து வைத்தார்.

கிணற்றை எட்டிப் பார்த்தார்.

தண்ணீர் தெரியாமல் இலைச் சருகுப் படலம். கட்டு இடுக்குகளில் ஆல், ஆரசு, இத்தி தொங்கிக்கொணடிருந்தன. துலா நிலத்தில் கிடந்தது. துலா தாங்கும் தூண்கள் சரி பாதியாய் வெடித்துச் சரிந்திருந்தன. பாரதத்துப் படைவீரர் இறங்கி நின்று நீராடிக் கலக்கிய கிணறு அது. அவர்கள் வீட்டை விட்டு வெளியேறியதும் முதல் வேலையாக நீர் இறைக்கும் இயந்திரம் வாடகைக்கு எடுத்து அசுத்த நீர் அடியோடு வெளியேற்றிவிட்டு சாம்பிராணி தூபமிட்டதும் அவர் நெஞ்சைத் தொட்டுவிட்டுப் போனது.

அன்று சின்னதாய் நின்ற தேக்குமரக் கண்டுகள் வானுயர வளர்ந்து வெண் கொத்துப் பூக்களுடன் காற்றில் அசைகின்றன. அடடே ஒரு மரத்தில் மாத்திரம் ஒரு கறை. ஒரு பழுது, எறிகணையின் சிதறல்களே தாக்கியதால் போலும் ஏற்பட்ட ஒரு அடி நீளம் ஒரு கோறை. அது மரத்தின் பெறுமதியைக் குறைக்கும் என்றெண்ணி வருந்தினார் சுந்தரம்பிள்ளை.

மேலும் சில அடிகள் முன்வைத்து நின்று பின் எல்லைவரை கண்களைப் படரவிட்டார். சில பனைகளின் வட்டுக்கள் வெட்டுண்டு நிலத்தில் கிடந்தன தென்னைகள் முறிந்து மண்ணில் புதையுண்டு கிடந்தன. “நட்டாயிரம் வருசம் பட்டாயிரம் வருசம் பயன் தரும் கற்பகதரு”. “தளரா வளர்தெங்கு தானுண்ட நீரை தலையாலே தான் தரும்” பெருமை. அவற்றின் அகால முடிவு கண்டு கவலைப் பட்டார்.

அதிசயமாய் ஒரு பெண்பனை! பனம் பழங்களுடன் பக்குவமாய் நிற்கிறது. அதிலிருந்து கடந்த ஆண்டுகளில் விழுந்த பழங்கள் முளைவிட்டு வேரூன்றி வடலிக் கூட்டமாய் நிற்கின்றன. அத்தனையும் வளர்ந்து பனையாகிப் பயன் தரும் காலம் எமக்குப் பொற்காலம். அவர் மனதில் தன் பிள்ளைகளின் எதிர்காலம் வளம் பெறும் கனவு.

எங்களுக்கு அகவை நூறு என்றாற் போல் சில செத்தல் தேங்காய்களுடனும் சரசரக்கும் ஓலைகளுடனும் வானுயர்ந்து நிற்கும் சோடை மரம் மூன்று. அவற்றை நிமிர்ந்து பார்த்து “நல்ல வரை மரம்” என எண்ணினார். பின் எல்லை வேலியே கண்ணில் படவில்லை. காவோலைகளும் தென்னோலைகளும் விழுந்து குவிந்து கிடக்க அவற்றை மூடி காட்டுச்செடிகள் படர்ந்திருக்க, கள்ளியும் எருக்கலையும் பூமத்தையும் குப்பைப் படுக்கையைப் புட்டுக்கொண்டு மேலெழுந்து நின்றன. “உள்ளே நச்சுப் பூரானும் நட்டுவக்காலியும் நல்ல பாம்பும் குடியிருக்கும் என்றெண்ணிய சுந்தரம்பிள்ளை அப்பால் கால் வைக்க அஞ்சித் திரும்பிச் செல்ல நினைத்தார். அந்நேரம் “என்ன காணி பாக்க வந்தனீங்களா?” என ஒரு பெண் குரல் பின்னால் கேட்டது. திரும்பிப் பார்த்து சுந்தரம்பிள்ளை “ஓ... அன்னலட்சுமியா?”

“ஓம் மாமா... நீங்கள் எல்லாரும் சுகமாய் இருக்கிறீங்களா?”

அவரைக் கூட்டிக்கொண்டு தன் வீட்டுக்குப் போன அன்னலட்சுமி கதிரை எடுத்து வைத்து. “இருங்கோ மாமா” என்றவாறு உள்ளே போனாள். சுந்தரம்பிள்ளை அந்த வீட்டை தன் கண்களால் அளந்தார். எழுந்து வீட்டைச் சுற்றி வந்தார். வந்து கதிரையில் அமர்ந்தார். அன்னலட்சுமி தேனீர் கோப்பையுடன் வந்து “குடியுங்கோ மாமா” என்று நீட்டினார். அவர் அதனை வாங்கி மேசையில் வைத்துவிட்டு கேட்டார். “இந்த வீட்டை எங்களுடைய பழைய வீடு இருந்த இடத்தில் தானே கட்டியிருக்கிறீங்கள்?

“அது சண்டைக் காலத்தில் உடைஞ்சிட்டுது... அதை துப்புரவாக்கிட்டுத்தான் இந்த வீட்டை கட்டினோம்...”

“உடைச்சு தெண்டால் அத்திபாரமும் அழிஞ்சதா?...”

“இல்லை ஒரு பக்கம் உடைஞ்சு சரிஞ்சு கிடந்தது. பழைய காலத்து கட்டிடம் தானே... முழுவதையும் இடிச்சு...”

“பரம்பரை வீடு, ஞாபகத்துக்கு ஒரு அறையோ இல்லை... ஒரு திண்ணையாதல் அழிக்காமல் விட்டிருக்கலாம்?’

எதிர்பாராத கேள்வி.

அதிர்ச்சியுற்ற அன்னலட்சுமி பேச்சற்று நின்றாள். அவர் முகத்தில் கடுமையை அவதானித்தாள். அவரைச் சாந்தப்படுத்த பொருத்தமான ஒரு பதிலைத் தேடியது அவள் நெஞ்சம். அவர் தொடர்ந்தார் “அது நூற்றாண்டு கண்ட வீடு. அதன் அமைப்பு ஒரு கோவில் போல. பல சந்ததி வாழ்ந்திருந்த வீடு. செல்வமும் செல்வாக்கும் நிலவிய வீடு. நீயும் நானும் அங்கேதான் பறிந்தோம். அந்த முற்றத்து மணலில் விளையாடினோம்...”

“தேத்தண்ணி ஆறிப்போகுது குடியுங்கோ” என்றாள். அன்னலட்சுமி, கனிவான குரலில். தொடர்ந்து “மாமி சுகமாய் இரக்கிறாவா?... ஒரு நாள் கூட்டி வாருங்கோவன்... வீடு

# என் கண்களே சாட்சி
# வாழ்ந்து காட்டுகிறேன்

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)

காணிபற்றை வெட்டலில்லையா மாமா? இப்ப இருக்கிற வீடு வாடகை வீடா இல்லது?... அவள் தடத்தை மாற்ற முயன்றாள்.

சுந்தரம்பிள்ளை தனது செல்வாக்கை அவளுக்கு ஞாபகப்படுத்துவதில் ஆர்வம் கொண்டார்.

"நீ நான் சொல்லுறதை காதில் போடாமல் ஏதேதோ வெல்லாம் கதைக்கிறாய்... நாங்கள் மானம் மரியாதையோட சொத்துப்பத்தோட வாழ்ந்த பரம்பரை... உன் அம்மாவுக்கு வீடும் சேர்த்து கொடுத்த பத்துப் பரப்பும் எனக்கு எழுதிய பெறுங்காணி பத்துப் பரப்பும் மாத்திரமல்ல... இந்தத் தெருவும் பின்னால் ஒழுங்கையும் எல்லையாக அறுபது பரப்பு நிலம் தாத்தாவுக்கு சொந்தமாய் இருந்தது. அவர் போன பிறகு அவற்ற பிள்ளையள் இருவரும் சரி பங்காக பிரித்தெடுத்துக் கொண்டார்கள்... இது மட்டுமல்ல நெணியன் புலத்தில் எங்கள் பாகமாக நாற்பத்தைந்து பரப்பு வயல் நிலம், எட்டுப்பரப்பு தோட்டக்காணி, வேலிலூரில் எங்களுக்கு எழுபத்திரண்டு பரப்பு தென்னை, பனை... இளநீரும் முட்க்காய் தேங்காயும் பிடுங்கி கூட்டாளிகளோட குடித்து குளிர் நிலத்தில் படுத்து எழுந்து அந்த சுகமான காலம்... ஓ... அப்படியொரு அநுபவம் இனி யாருக்குக் கிட்டும்... சுகமும் சொத்தும் ஒருவருக்கு மட்டும் சொந்தமல்ல என்றதை சொல்லவோ... அப்பு இருந்தாற்போல், சின்னஞ் சிறிசுகள் எங்களை, விட்டு மறைந்துபோனார்... அம்மா எங்களை வளர்த்தெடுக்க படாதபாடெல்லாம் பட்டா... அறுபது பரப்பு நிலம் விற்று சின்னக் காவுக்கு கலியாணம் ஒப்பேற்றினா... அதே போல மீதிக்காணியும் எங்களை உருவாக்க விற்றதாக அம்மா சொன்னவ... எண்டாலும் பாலன் பஞ்சம் பத்து வருசம் என்றது போல் நாங்கள் வளர்ந்து வாலிபரானதும் வறுமை நீங்கி வசதியாய் வாழும் நாள் வந்தது.. நாங்கள் ஒண்டு கெஞ்சி வாழ்ந்தபரம்பரை அல்ல என்றதை நீ விளங்கிக்கொள்..."

"நீங்கள் சொல்லுறதெல்லாம் சரி மாமா... அம்மாவும் சில நேரம் சொல்லுவா... கூடையில் நெல் இருக்கும. குரக்கனும், தினையும் இருக்கும், பனாட்டும், புழுக்கொடியலும் பற்றி காலைல பனங்காய் சுட்டு தின்பதும் பட்டறையில் பாய் விரிச்சு பனங்களி உற்றி பரவி காயவிட்டு பனாட்டு எடுக்கிறதென்டும்... எல்லாம் சொல்லுவா... குடியுங்கோ தேத்தண்ணி குளிர்ந்து போச்சு" அன்னலட்சுமி அழாக்குறையாக அமைதியாக நின்றாள்.

சுந்தரம்பிள்ளையின் மனம் மகிழ்ச்சியுற்றது. "இவளுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு என்றெண்ணியவராய் தேனீர்க் கோப்பையை கையிலெடுத்தார். ஒரே மூச்சில் உறிஞ்சினார். கோப்பையைக் கீழே வைத்துவிட்டுச் சொன்னார். பழையதையெல்லாம் பற்றிப் பேசி வெறுப்பை வளர்க்க வேணுமா என நீ நினைக்கலாம். ஆனால் அது அல்ல நோக்கம்... எங்களை ஆரெண்டு அறியாதவர்கள் தங்கட கெட்ட நரித்தனத்தை காட்டிட்டு போறாங்களே... அதைத் தடுக்கிறது தான் நோக்கம்... ஒரு வேளை நாங்கள் திரும்பிவர மாட்டோம் எண்டு நினைச்சிருப்பான் உன் மகன்... தன் எண்ணப்படி உடைத்துக்கட்டி முடிச்சிட்டான்... என்ன அப்படித்தானே?"

அன்னலட்சுமி பதில் ஏதும் பேசாமல் மெல்லத் திரும்பி உள்ளே சென்றாள். அங்கேயே இருந்து கொண்டாள். நீண்ட நேரம் தனித்து விடப்பட்ட சுந்தரம்பிள்ளை எழுந்து நின்று "அன்னம்" என்று கூப்பிட்டார் அவள் வெளியே வந்து எட்டத்தில் நின்றாள்.

"கவலைப்படாதே இரு... இனி அந்தக் கதை இல்லை... பற்றை வெட்டி வளவு துப்புரவாக்கிற வேலை இருக்கு... வேலையாட்கள் ஐந்து ஆறுபேரை ஒழுங்கு பண்ணு... நீ கெட்டிக்காரி நாங்கள் இடம் பெயர்ந்து போன நேரம் நீயும் புறப்பட்டாய்... போகும் பாதையில் திரும்பித் திரும்பிப் பார்த்தோம் நீ வரவில்லை... உன்னைப்போல துணிச்சலுடன் பின் தங்கிவிட்டவர்கள் எங்கள் வீட்டைப் பிடுங்கினார்கள் எண்டு கேள்விப்பட்டேன். எரிகிற வீட்டில் பிடிங்கிறது பாவமில்லை எண்ட நினைச்சிருப்பான்கள்... போகட்டும் நீ இங்கே இருக்கும் தொழிலாளர்களை அறிந்திருப்பாய்"...

"சரி மாமா.. விசாரிச்சுப் பார்க்கிறேன்.. இப்ப வேலையாட்களைப் பிடிக்கிறது கஷ்டம்... எங்கே பாத்தாலும் கட்டடம் வேலை நடக்குது.

உடைஞ்ச வீடுகள் திருத்துகிறார்கள்... புதிதாகவும் கட்டுகிறார்கள். விலாசத்தை தந்திட்டுப் போங்கோ அறிவிக்கிறேன்..."

"இந்தா இது என்ட கைபேசி நம்பர்... நான் வரட்டுமா?" சுந்தரம்பிள்ளை தெருவில் ஏறி பேருந்து தரிப்பிடம் பார்த்து நடந்தார்.

மூன்றாம் நாள் தகவல் வந்தது. கூலியாட்கள் ஐந்து பேர் வருவார்கள். நாளை மறுநாள் புதன்கிழமை வேலை துவங்கலாம்...



உங்களுக்கு வரைவசதியா?"

"நல்லது... வரச்சொல்.. நான் புதன்கிழமை காலை எட்டு மணிக்கே வந்திடுவேன்.."

பெருமரங்களின் கிளைகள். அவற்றைச் சுற்றிப் படர்ந்திருந்த பசுங்கொடிகள், வடலிகளில் காய்நது தொங்கிய ஓலைகள், சருகுக் குப்பை, தென்னோலை, காவோலை, கங்கு மட்டை எல்லாம் வெட்டி மலைபோல் குவிக்கப்பட்டன. நெருப்பு வைக்கப்பட்டது. அது சுவாலைவிட்டு எரிந்தது.

சாம்பரானதும் ஒரு கூலியாள் நீளக் கம்பு பிடித்து அந்த இடத்தை கூட்டி ஒதுக்கினான். நிலம் வெளித்தது, சுந்தரம்பிள்ளை சுட்டிக் காட்டியவாறு தறிக்கப்பட்ட மரங்கள் துண்டாடப்பட்டு அங்கே அடுக்கப் பட்டன. கூடலாய் படர்ந்து பயங்கர தோற்றமளித்த வளவு இப்போது புதுப்பொலிவு காணத்துவங்கியது கண்டு அகமகிழ்ந்தார் சுந்தரம்பிள்ளை.

மாலை நான்கு மணி. மரம் தடி ஏற்றிக் கொண்டு போக ஒரு லொறி ஏற்பாடு செய்ய வேணுமே என எண்ணியவராய் அன்னலட்சுமியுடன் கதைக்க அந்த வீட்டுக்குப் போனார்.

"விறகு ஏற்றிக்கொண்டு போக ஒரு வாகனம் தேவையல்லவா? லொறி அல்லது ரக்ரர் வைத்திருக்கிறவர் யாரையும் தெரியுமா உனக்கு?" என்ற கேட்டார்.

"ஒ... ஒரு லொறி வைத்திருக்கிறவரைத் தெரியும்" என்று அவள் குறிப்பிட்டுச் சொன்ன வீட்டுக்குப் போய் லொறி உரிமையாளரான ஓட்டுனருடன் பேசி சம்மதம் பெற்று வாகனத்தின் இலக்கத்தையும் பெற்றுக்கொண்டு திரும்பினார்.

அடுத்தநாள் காலை நேரத்தோடு வந்திருந்து வேலை யாட்கள் வந்து கூடியதும், தொடர்ந்து செய்ய வேண்டியவற்றை விபரமாய் சொல்லிவிட்டு, விறகு ஏற்றிச் செல்வதற்குரிய அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு பிரதேச செயலகத்துக்குப் போனார். அங்கே அதற்குரிய விண்ணப்பப்படிவம் எடுத்து நரப்பி வரி என்ற வகையில் ரூபா நாற்பது செலுத்தி பற்றுச் சிட்டையை விண்ணப்பத்துடன் இணைத்து பிரதம பணியாளரிடம் கையளித்தார். அவர் அதனைப் பரிசீலித்து விட்டு அதற்குப்



பொறுப்பான உத்தியோகத்தரிடம் அனுப்பினார். அவர் அனுமதிப் பத்திரம் எழுதி பிரதம பணியாளரின் கையொப்பம் பெற்று கொடுத்தார். அதை மேலும் கீழும் பாாத்த சுந்தரம்பிள்ளை இங்கே பொலீஸ் கையொப்பமும் எடுக்வேணுமா?" எனக் கேட்டார். தேவையில்லை என்றார் உத்தியோகத்தர். "நன்றி" சொல்லிக்கொண்டு வெளியே வந்து ஒரு பக்கம் ஒதுங்கி நின்ற அதனை வரிக்கு வரி படித்துப் பாாத்தார்.

சிங்கள எழுத்துக்களில் அச்சிடப்பட்ட படிவம் அதில் ஆங்கிலத்தில் விபரம் எழுதப் பட்டிருந்தது. ஒரு வரியில் Firewood எனவும் இருந்தது.

ஆறு நாள்கள் நடந்த காடு வெட்டும் வேலை ஏழாம் நாள் லொறியில் மிக அடுக்காக விறகு ஏற்றுவதுடன் முடிவுக்கு வந்தது.

முருகன் சாலையில் போய்க்கொண்டிருந்த விறகு லொறி கண்டி வீதியில் மிதந்து இரண்டு மைல் தூரம் ஓடிய நிலையில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் கை காட்டி லொறியை நிறுத்தப் பணித்தார். லொறி நின்றது ஓட்டுனரின் இடது பக்கம் அமர்ந்திருந்த சுந்தரம்பிள்ளை கையில் வைத்திருந்த அனுமதிப் பத்திரத்தை நீட்டினார். அதைப் பற்றிப் பார்த்த பொலிஸ் "இந்தா இங்கே பொலிஸ் இன்ஸ்பெக்கடர் கையொப்பம் இல்லை. இறங்கு எடு லொறி இந்தப் பக்கம்" என்றார்.

"அய்யா இது சிங்களப் படிவம் தானே? இங்கே பொலிஸ் கையொப்பத்துக்கு இடம் இருக்கா பாருங்க?" என்றார். பார்த்தார். அவர் முகத்தில் ஏமாற்றம். என்ன பதில்? இயலாமை. நிமிர்ந்து பாராமலே பத்திரத்தைப் பிள்ளையிடம் கொடுத்தார். "போ...போ..." என்றார். லொறி புறப்பட்டது. ஓட்டுனரின் முகத்தில் புன்சிரிப்பு. சுந்தரம்பிள்ளை சொன்னார். தம்பீ நான் இந்த ஊர் விட்டப் போய் இருபது வருச மாச்சு... நான் பட்ட பாடுகள், இழந்த சொத்துக்கள் பல கோடி பெறும். இனியும் வாய் தறிக்காமல் ஊமையாய் இருந்தால் எங்களை ஏச்சுப் பிழைகறவன் தலைக்கு மேல் ஏறிடுவான்... இனி என்னுடைய வீட்டை திருத்திக் கட்டி குடியிருக்க திட்டமிட்டிருகிறன்.. பழைய மாதிரி வாழத்தான் இருக்கிறன்.

"மயிர் நீப்பின் வாழா கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்" — திருக்குள் –


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


ar
21
ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE
C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai
Century 21. INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)


NAM THAYAKAM
நம் தாயகம்
நம் தாயகம்
வாங்குவீர்... வாழ்வு தருவீர்!
பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும் போரில் அவயங்களை இழந்தோருக்கான தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்
முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும் தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள், உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைப் கொள்வனவு செய்து தாயக மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி
முள்ளிவாய்க்காலில் இருந்து...
"உணர்வினில் தாய் மண் வாசமும் உணர்வோடு தாய் மண் நேசமுமாய்"
Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)

# கோட்டாபய கூட்டமைப்பைப் பேச அழைக்கிறார்?

மார்ச் 24, 2022

கடந்த புதன்கிழமை கோட்டாபய கூட்டமைப்பைச் சந்திக்க நேரம் ஒதுங்கியிருந்தார். எனினும் அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது. அது 25ஆம் இடம்பெறலாம் என்று தெரிகிறது. இச்சந்திப்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான டெலோ கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருந்தது. அதற்கு டெலோ ஒரு விளக்கக் கடிதத்தை ஏற்கனவே அனுப்பியிருந்தது.

பதவியேற்றதிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக கோத்தாபய கூட்டமைப்போடு பேசப்போவதாக இடைக்கிடை கூறி வருகிறார். ஆனால் இன்று வரையிலும் பேச்சுவார்த்தைகள் நடக்கவில்லை. இம்முறை பேச்சுவார்த்தை கடைசிவேளை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. முன்னைய அழைப்புக்களைப் போலன்றி இம்முறை பேச்சுவார்த்தை மெய்யாகவே நடக்குமாக இருந்தால், ஜனாதிபதி அவ்வாறு பேச முன்வருவற்கு சுட்டிப்பாக பின்வரும் காரணங்கள் இருக்க முடியும்

இலங்கைத் தீவு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா குறிப்பிட்ட தொகையை கடனாக வழங்கியிருக்கிறது. அதற்கு பிரதியுபகாரமாக திருகோணமலையில் சம்பூரில் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டம் ஒன்றை நிறுவுவதற்கு இந்திய நிறுவனத்மொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது போலவே மன்னாரிலும் பூநகரியிலும் இருவேறு மின்சக்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதாவது இந்தியா கடனைக் கொடுத்து கொழும்பின் மீது தனது பிடியை இறுக்கி வருகிறது. இதன் விளைவாக இந்திய அரசாங்கத்தை திருப்திப்படுத்த வேண்டிய ஒரு நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கலாம். குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசாங்கம் என்ன கேட்கிறது? 13வது திருத்தத்தை அடிப்படியாக வைத்து ஒரு தீர்வை வழங்குமாறு கேட்கிறது. உடனடிக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்றும் கேட்கிறது. எனவே இதுவிடயங்கள் தொடர்பாக தமிழ்த் தரப்புடன் ஒரு சமரசத்துக்கு வருவது போன்ற ஒரு தோற்றத்தை காட்டவேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு.

மேலும், இம்மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்குபற்றுறுவதற்காக இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் கொழும்புக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. இந்திய பிரதமர் மோடியும் கொழும்புக்கு வரக்கூடும் என்ற ஊகங்கள் அதிகமாக உள்ளன. அவர் இந்தியாவில் இருந்து நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்றும் பலாலி விமான நிலையத்தில் இறங்குவார் என்று ஊகங்கள் உண்டு. ஆனால் இந்தியா தனது பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சரின் இலங்கை விஜயத்தை இன்றுவரையிலும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கவில்லை.

இலங்கைத்தீவின் வடபகுதியோடு இந்தியாவை இணைக்கும் நான்கு அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா ஏற்கனவே முன்மொழிந்தது. பலாலி விமான நிலையம், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கு இடையிலான படகுப் போக்குவரத்து, மூன்றாவது யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள கலாச்சார மண்டபம். நாலாவது மன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்கு ஒரு பயணிகள் படகுச் சேவை.

இதில் பலாலி விமான நிலையம் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் அவருடைய பதவிக்காலம் முடியும் கடைசிநேரத்தில் அவசர அவசரமாகத் திறக்கப்பட்டது. அடுத்த தேர்தலில் ராஜபக்சக்கள் வெல்லக்கூடும் என்ற எதிர்பார்ப்பின் பின்னணியில் இந்தியாவின் தூண்டுதலால் ரணில் அவ்வாறு அவசர அவசரமாக பலாலி விமான நிலையத்தை திறந்தார் என்று அப்பொழுது கருதப்பட்டது. அது ஒரு சிறிய விமான நிலையம். உள்ளூர் போக்கு வரத்துக்குரிய வசதிகளைத்தான் கொண்டிருக்கிறது. 70 பயணிகள் பயணம் செய்யக்கூடிய சிறிய விமானங்கள்தான் அதில் வந்து இறங்கலாம். எனவே விமான நிலையத்தை அடுத்தகட்டத்துக்கு விஸ்தரித்து பன்னாட்டு விமானச் சேவைகளை தொடங்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்த்தது. அதற்கு வேண்டிய நிதியையும் இந்தியா வழங்கக் காத்திருக்கிறது. ஆனால் பெருந்தொற்று நோயைக் காரணம் காட்டி கோத்தாபய அரசாங்கம் விமான நிலையத்தை திறப்பதை தொடர்ந்து ஒத்திவைத்து வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி அந்த விமான நிலையம் மறுபடியும் இயங்கத் தொடங்கும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இப்படி பல தடவை அறிவிக்கப்பட்டுவிட்டது. இலங்கை அரசாங்கம் அந்த விமான நிலையத்தை விஸ்தரிக்கும் திறப்பதற்கும் பின்னடிக்கின்றது. ஏனெனில் பலாலி விமான நிலையம் அமைந்திருப்பது இலங்கைத்தீவின் வட பகுதி இராணுவ தலைமையகத்தில் ஆகும். வடபகுதி படைத்துறை கட்டமைப்பின் இதயமான பகுதியில் ஒரு விமான வழியைத் திறப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவுகளைப் பொறுத்தவரை இராணுவமய நீக்கம்தான். ஏனெனில் ஒரு படைக்கட்டமைப்பின் கேந்திரமான இடத்தில் சிவில் போக்குவரத்தை அனுமதிப்பது என்பது அவ்வாறான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். எனவே இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் தன் படைத்துறை நோக்கு நிலையிலிருந்தே பார்க்கும். அதனால்தான் விமான நிலை யத்தை விஸ்த்தரிப்பதற்கும் திறப்பதற்கும் பின்னடிக்கிறது.



அடுத்தது காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கு இடையி லான பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவை. அதற்குத் தேவையான பெரிய கப்பல்கள் இப்பிராந்தியத்தில் இல்லை என்றும் அவை பிராந்தியத்துக்கு வெளியிலிருந்து வாடகைக்கு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான படகுச் சேவை ஒன்றை தொடங்குவதற்கான வர்த்தக உடன்படிக்கை ஒன்று இலங்கை மற்றும் இந்திய கொம்பெனிகள் இரண்டுக் கிடையே கடந்த ஆண்டு மார்ச் மாதம் எழுதப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை மிகவும் பாராட்டி பாரதிய ஜனதாவின் தமிழ்நாடு முக்கியஸ்தரான வானதி சீனிவாசன் தனது ருவிட்டரில் ஒரு குறிப்பை போட்டிருந்தார். அவர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப் பினரும் கூட. அக்கப்பல் சேவையை எதிர்பார்த்து காரைக்கால் துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கப்பல் சேவையை தொடங்குமாறு தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மட்டும் கேட்கவில்லை. அரசாங்கத்தோடு நிற்கும் வியாழேந்திரன் போன்றவர்களும் கேட்கின்றார்கள். கடந்த ஆண்டு வியாழேந்திரன் பாண்டிச்சேரிக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார். அங்கே வைத்து அவர் ஊடகவியலாளர்களிடம் அவ்வாறு தெரிவித்தார். இதனிடையே இதே கடற்பாதையில் மற்றோரு சொகுசுப் படகுச் சேவை தொடங்கப் படவிருப்பதாக அண்மையில் ஒரு செய்தி வெளி வந்தது.

ஆனால் இலங்கை அரசாங்கம் இக்கடல் வாசலைத் திறக்க பின்னடிக்கிறது. பலாலி விமான நிலையத்துக்கு சொன்ன அதே காரணம் இதற்கும் பொருந்தும். ஏனெனில் காங்கேசன்துறை என்பது வடபகுதி இராணுவ படைக் கட்டமைப்பின் கேந்திர மான இடத்தில் காணப்படும் ஒரு துறைமுகம் ஆகும். அதை சிவில் போக்குவரத்துக்கு திறந்துவிட்டால் அதுவும் நீண்ட கால நோக்கில் அப்பகுதியை இராணுவ மயநீக்கம் செய்துவிடும். எனவே இலங்கை அரசாங்கம் அதற்கு பின்னடிக்கின்றது. அதாவது தனது வடபுகுதிக்கான படைத்துறைக்கு கேந்திர ஸ்தானத்தில் இந்தியாவை நோக்கி ஒரு வான் வாசலையும் கடல் வாசலையும் திறந்து விஸ்தரிக்க இலங்கை உடன்படுமா? கடந்த கிழமை புதுடில்லிக்குப் போன பசில் ராஜபக்ச பிரதமர் மோடியைச் சந்தித்திருக்கிறார். அச்சந்திப்பில் இவ்விடயங்கள் உரையாடப்பட்டிருக்குமா? இந்திய பிரதமர் இலங்கைக்கு வருவதாக இருந்தால் மேற்கண்ட திட்டங்களை அவற்றின் அடுத்த கட்டத்திற்கு நகர்த்துமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்பாரா? அதற்கு இலங்கை அரசாங்கம் சாதகமான சமிக்கைகளை காட்டாது என்ற ஒரு எதிர்பார்ப்பிருந்தால், மோடி இலங்கைக்கு வருவாரா?

மோடியின் வருகை ஜெய்சங்கரின் வருகை போன்றன இன்று வரையிலும் ஊகங்கள்தான். ஆனால் நெருக்கடி காலத்தில் இந்தியா இலங்கைக்கு கடன் கொடுக்கிறது. அதற்கு பிரதியுபகாரமாக இலங்கை இந்தியாவைத் திருப்திப்படுத்தும் உடன்படிக்கைகளுக்குத் தயாராகிவிட்டது. தமிழ்த் தரப்போடு பேச்சுக்குத் தயார் என்று காட்டுவதும் அந்த நோக்கிலானதே.

இரண்டாவதாக ஜநாவில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஒரு தகவல் திரட்டும் பொறிமுறை உருவாக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா தீர்மானத்தின்படி இப்பொறிமுறை உருவாக்கப்படவிருக்கிறது. இப்பொறிமுறை இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளை திரட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இலங்கை அரசாங்கத்திற்கு சார்பான சீனாவும் பாகிஸ்தான் போன்ற நாடுகளும் மேற்படி பொறிமுறையை பலவீனப்படுத்தும் விடயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருப்பதாக கருதப்படுகிறது. அப்பொறிமுறையின் செயற்படு காலம் முன்பு ஒரு வருடம் என்று அறிவிக்கப்பட்டது. இப்பொழுது ஆறு மாதங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதன் அங்கத்தவர் எண்ணிக்கை முன்பு 12 என்று கூறப்பட்டது. இப்பொழுது எட்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.இவ்வாறு பொறிமுறையைத் தரம் குறைப்பதில் இலங்கையும் அதன் நண்பர்களும் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.

அதோடு உள்நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. மேலும் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒரு தொகுதி கைதிகளை விடுதலை செய்திருக்கிறது. நிலைமாறுகால நீதியின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளுக்கு புதிதாக நிதியை ஒதுக்கி அவை வினைத்திறனோடு செயற்படுவதாக ஒரு தோற்றத்தையும் கட்டியெழுப்பி வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஒரு லட்ஷம் ரூபாய் நட்டாடு அறிவித்திருக்கிறது. இவற்றின்மூலம் ஜநாவைச் சமாளிக்கலாம் என்று அரசாங்கம் நம்புகின்றது.

இந்த அடிப்படையில்தான் கூட்டமைப்பை சந்திக்க முற்பட்டுவதையும் விளங்கிக்கொள்ள வேண்டும். அதன்மூலம் நல்லிணக்கத்துக்கு தயார் என்று ஒரு செய்தியை அவர் ஐநாவுக்கும் வழங்கலாம், இந்தியாவுக்கும் வழங்கலாம். எனவே இப்போதிருக்கும் நெருக்கடிகளின் பின்னணியில், இந்தியாவையும் ஐநாவையும் சமாளிக்கும் நோக்கத்தோடு கோத்தாபய, கூட்டமைப்பை சந்திக்கப் போவதாக அறிவித்திருக் கிறார். வெளியரங்கில் நெருக்கடிகளைக் குறைப்பதே அவருடைய இந்த அழைப்பின் நோக்கம். ஆனால் நாட்டுக்கு வெளியே அவர் நெருக்கடிகளைத் தணிக்க முயற்சித்துக் கொண்டிருக்க, நாட்டுக் குள்ளேயோ நெருக்கடிகள் அதிகரிக்கின்றன. அப்படியொரு நெருக்கடி காரணமாகத்தான் கூட்டமைப்புடனான புதன் கிழமை சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.



நன்றி: நிலாந்தன்

# தாயகத்தை காதல் செய்.

அட பைத்தியக்காரக் கவிஞனே!
தாயகத்தை எப்படியடா காதலிக்க முடியும்?
பெண்ணை ஆணும்
ஆணைப் பெண்ணுமே ஆராதிக்க முடியும்.
மண்ணுக்கு மாலையிட முடியுமா?
கட்டித்தழுவி முத்தமிட முடியுமா?
தாயகத்தைக் காதலிக்கச் சொல்லும் கவிஞனே!
உனக்குப் புத்தியென்ன பேதலித்து விட்டதா?
உண்மைதான்.
அன்னைபூமி மீது எனக்கு அளவற்ற காதல்.
எப்படியென்று எடுத்துச்சொல்ல முடியாது
அது கற்பனை கடந்தது.
என் தாய்மடி எத்தனை அழகு?
காலை சேலைகட்டி வந்த
புச்சூட்ப் புன்னகைக்கும் போது
காணக் கோடி வழிகள் வேண்டும்.
மாலைவந்து மயக்கும் எழிலில்
என்மனம் வசமிழந்து போகும்.
இங்கு வேர்பிடித்த ஒவ்வொரு புல்லையும்
நான் விரும்புகின்றேன்.
விரிந்து கிடக்கும் பரந்த வயல்வெளிகளையும்
வந்து கரைதழுவி
தாயவள் சேலை நனைத்து விளையாடும்
கடலையும் நான் காதலிக்கின்றேன்.
வாசமற்றதாயினும்
பூவரசம் பூக்களை நான்
பெரிதும் விரும்புகின்றேன்.
பனைகளே எனது கற்பனைச் சுனைகள்.
தென் தமிழீழத்தின் திசையை வணங்குவேன்.
மட்டக்களப்பின் மடியில் தவழ்வேன்.
அங்கு
முழுநிலாக் காலத்தில்
களத்து மேட்டில் கேட்கும் பாட்டும்.
கும்மியும், குரவையும்
அம்மானையும், வசந்தன் பாட்டும்
எனக்கு இறக்கை கட்டிப் பறக்க வைக்கும்.
முறுக்கேறிய இராவணன் பூமி
திருக்கோணமலை.
அது அழகின் சிகரம்.
நிலத்தின் முனையென நிமிர்ந்த
கோணேசர் மலைக்கு
பின்னரே வெய்யில்
'வாணிஸ்' பூசும்.
தம்பலகாமத்து நெல் வயல்களில்
வெட்டியடுக்கிய சூட்டின் வாசம்
மூக்கு நுனியை முத்தமிடும் போதே
நாக்கில் நீரூறும்.
பச்சையரிசிச் சோறு படுருசி.
பன்குளத்துத் தயிருக்கு எது நிகர்?
வன்னி மண்ணுக்கு என்ன குறை?
கொம்புத் தேனும்,
பாலைப்பழக் காலத்துப் பன்றிக் கொழுப்பும்,
நந்திக்கடலின் நண்டும்
உண்டு மகிழ்ந்தவனுக்கே உண்மை தெரியும்.
"வங்கம் மலிகின்றகடல் மாதோட்டம்"

எங்களது என்ற
தேவாரப் பாட்டைச் காதோரம் ஏற்று,
பாலாவியின் கரையில் பாடு;
காற்றில் கலந்து உலகமெங்கும் உலா வரட்டும்.
தாயகத்தைக் காதல் செய் என்றேன்.
நிலத்தைக் காதலிப்பது எப்படியென்று
நீ; என்னைக் கேட்கிறாய்.
தமிழனே!
தாய் மடியில் நீ புரண்டெழவில்லை.
அன்னை மண்ணை அன்பு செய்யவில்லை.
தாயகத்தைக் காதலிக்கவில்லை.
அதனாற்தானே...
ஆறுகோடி தமிழர்கள் இருந்தும்
உன்க்கொரு 'தனிவீடு' கிட்டவில்லை,
அகதியாகி
எத்தனை தெருக்களில்
அலைகின்றாய்.
இரவற் திண்ணையிற்தானனே
இன்றும் படுக்கின்றாய்.
பகைவனின் பாதணிகளுக்குக் கூட
பூசை செய்கின்றாய்.
குடங்கிக் குடங்கிக் கூனாகிப்போனாய்.
அட தமிழனே!
தாய் நிலத்தைக் காதல் செய்து பார்
உன் மேனியிலிருந்து பன்னீர் விசுறும்.
நரைத்த மயிர்கூடக் கறுக:கும்.
ஆயிரம் கோடிச் சூரியப் பிரகாசம்
உன் கண்ணிலிருந்து வீசும்.
நீ எடுத்து வைக்கும்
ஒவ்வொரு காலடிக்குள்ளேயும்
நிலம் கசிந்து நீரூறும்.
கீரிமலைக் கேணியை
யாரிடமோ கொடுத்துவிட்டு
தாயகத்தைக் காதலிப்பது எப்படியென்று
என்னிடம் கேட்கின்றாய்.
தாயகம் பேசாது.
ஓரக்கண்ணால் வெட்டி உருவேற்றாது.

கடிதம் எழுதாது.
கட்டியணைத்து முத்தமிடாது.
இந்த நான்கும் இல்லையென்றால்
காதலிக்க முடியாதா?
எந்தப் பேயன் சொன்னவன்?
தாயகம் என்தாய்,
தாயகம் என் சக்தி,
தாயகம் என் மூச்சு.
வேறொருவன் வீட்டில் விருந்தாளியாக
பட:டுவேட்டியுடன் இருப்பதிலும் பார்க்க
சொந்த வீட்டில்
கோவணத்துடன் இருப்பதே சுகம்.
இறந்த பின்னர் என்னை எரிக்கக்கூடாது
ஏன் தெரியுமா?
என் தாயகம்எரிகாயங்களுக்கு உள்ளாகக் கூடாது.
என்னைப் புதைப்பதையே விரும்புகின்றேன்.
புதைக்கும் போதும் புற்களின் வேரறுந்து போகாமல்
குழிவெட்டுங்கள்.
உப்புப் போட்டுப் புதையாதீர்
நிலம் உவராகிவிடும்.
மண்போட்டு மூடினால் போதும்.
மழை பெய்ததும்
வேர்கள் துளிர்த்துக்கொள்ளும்.
என் மண்ணில் நிற்கும் போது தான்
எனக்கு இறக்கை முளைக்கிறது.
உனக்கும் அப்படித்தான்
உணர்ந்துகொள்.
ஒரு பெண் உன்னையும்
நீ ஒரு பெண்ணையும்
அல்லது
ஒரு ஆண் உன்னையும்
நீ ஒரு ஆணையும்
காதலிப்பது உன் உரிமை.
ஆனால்
மண்ணைக் காதலிப்பதே உன்னதம்.
தமிழனே!
தாயகத்தைக் காதல் செய்...!



புதுவை
வைகாசி, 1995

# ஜனாதிபதியை சந்திக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசியல் கைதிகள் விடையத்தில் கூடிய அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் கோமகன்

மார்ச் 24, 2022

ஜனாதிபதியை சந்திக்கும் கூட்டமைப்பு அரசியல் கைதிகள் விடயத்தில் கூடிய அழுத்தம் கொடுக்க வேண்டும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை ஜனாதிபதியை நாளை சந்திக்கவுள்ள கூட்டமைப்பினரை சந்தித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் கோமகன், அரசியல் கைதிகள் விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி, அவர்களின் விடுதலைக்கு உதவ வேண்டுமென கோரி 16 கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை குறித்த குழுவினரிடம் இன்று கொழும்பில் வைத்து கையளித்துள்ளார்.






குறித்த மகஜரில்,

1) 10வருடங்கள் முதல் 26ஆண்டுகளாக சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை-48 இதில் ஒருவர் 67 வயதான முதிய தாயார்.

2) மிக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில், மேல் நீதிமன்றிலுள்ள 7வழக்குகளில் 22பேர் விளக்கமறியல் கைதிகளாக உள்ளனர்.

தமக்களிக்கப்பட்டுள்ள மரணதண்டனை, ஆயுள்தண்டனை, 30ஆண்டு சிறைத்தண்டனைகளை மேன்முறையீடு செய்ததன் மூலம் மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்குகளில் 65வயதைக்கடந்த 3பேர் உட்பட 14 பேர் மேல் முறையீட்டு தண்டனை கைதிகளாக உள்ளனர்.

மரணதண்டனை உறுதி செய்யப்பட்ட 70 வயது முதியவர் அடங்கலாக 2பேரும், ஆயுள் தண்டனை உறுதி செய்யப்பட்ட குடும்பஸ்தர்கள் இரண்டு பேரும், 200ஆண்டுகள் சிறைத்தண்டனை உறுதி செய்யப்பட்ட 68வயது முதியவர் ஒருவரும், 35ஆண்டுகள் சிறைத்தண்டனை உறுதி செய்யப்பட்ட ஒருவரும், 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை உறுதி செய்யப்பட்ட ஒருவரும், 05வருடங்களுக்குள் தமக்கான தண்டனையினை நிறைவு செய்து விடுதலை பெறக்கூடிய நிலையில் 06 பேரும் உள்ளனர்.

3) நீண்டகால தடுப்பு காவல், நீடிக்கும் விளக்கமறியல், தாய்மொழி அல்லாத சிங்கள மொழியில் அச்சுறுத்தி பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு ஒட்டு மொத்த சிறையிருப்பு காலத்தையும் தண்டனைக்காலமாக கருத்தில் எடுத்து வழக்கு விசாரணைகள் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும். மாறாக 'துரிதவிசாரணை' எனக்கூறி காலத்தை போக்கக்கூடாது.

4) மேல்நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றம் போன்றவற்றில் தமிழ் அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் 3 முதல் 7 மாதங்கள் என மிக நீண்ட காலத்தவணை திகதி இடப்பட்டு காலவிரயம் ஆக்கப்படுவது கவலைக்குரியது.

5) சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கொலை, கொள்ளை, போதைப் பொருள் போன்ற குற்றப்பின்னணிகளை. கொண்ட ஏனைய சிவில் கைதிகளுடன் சேர்த்து ஒரே விடுதிகளுக்கு சிறைப்படுத்தப் பட்டுள்ளனர். இதனால் பல அரசியல் கைதிகள் சட்டவிரோத செயல்களுக்குப் பழக்கப்பட்டுள்ளதுடன் போதைக்கு அடிமையானவர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

6) வயதானவர்கள், வலுக் குன்றியவர்கள், அவயவ பாதிப்புடையவர்கள் என்ற வகை வேறுபாடின்றி தசாப்தங்கள் கடந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் அனேகமானவர்கள் புற்றுநோய், நீரிழிவு, இருதய நோய், முள்ளம் தண்டு-மூட்டுவட பாதிப்பு, குடற்புண், இரைப்பை அலர்ஜி, மற்றும் கட்புலன் செவிப்புலன் பாதிப்புகளுக்கு ஆளாகி அல்லல்படுகிறார்கள்.

7) நாடெங்கிலும் உள்ள சிறைச்சாலைகளில் 20 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான அன்றாட செலவினங்கள் தற்போது இரு மடங்காக அதிகரித்துள்ள தாகவும் இதனால் உணவு, மருந்து உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் நீண்ட நெடுஞ்சிறை அனுபவித்து வருகின்ற தமிழ் அரசியல் கைதிகள் போஷாக்கான உணவு, பொருத்தமான மருத்துவங்கள் இன்றி உடல், உள ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை பயங்கரவாததடை சட்டத்தை காரணம் காட்டி பொது வாக சிறைக் கைதிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற உரிமைகள் சலுகைகளை வழங்க மறுத்து ஓர வஞ்சனை செய்து வருகிறது சிறைத்துறை.

9) சிறைச்சாலைகள் கட்டளை சட்டத்தின் பிரகாரம் தண்டனை கைதிகளின் நன்நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரைக்கப்படுகின்ற வீட்டு விடுப்பு மற்றும் சாதாரண பொதுமன்னிப்பு போன்றன தமிழ் அரசியல் கைதிகளுக்கு சவாலான தாக்கப்பட்டுள்ளது. பயங்கரவாததடை சட்டத்தை காரணம் காட்டி நாட்டுபிரஜைகளுக்கான அடிப்படை உரித்துக்களை கூட அபகரிப்பது எவ்வகையில் நியாயம்.

10) பயங்கரவாத தடை சட்டம் என்பது மனித மேம்பாட்டுக்கு மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது ஒரு வன்முறை சட்டம் என தெரிவிக்கப்பட்டு வருகிறது எனினும் இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பது பற்றி பேசப்படுவதில்லை.

11) அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மீதான தண்டனைகளை நிலைமாறுகால நீதியின் அடிப்படையில் மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். அந்த வகையில் தண்டனைக் கைதிகளுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும்.

12) தண்டிக்கப்பட்ட தமிழ் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு தயங்கப் போவதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ அவர்கள் 2020இல், ஐ.நா செயலாளர் நாயகத்திடம் நேரில் தெரிவித்திருந்தார். ஆனபோதும் இரண்டு வருடங்கள் கடந்தும் வாக்குறுதி மெய்ப்படவில்லை.

13) 10 முதல் 26 ஆண்டுகள் தொடராக சிறைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் பலர் நமது அன்புக்குரிய உறவுகள் சிலரையாவது யுத்தத்தில் பறி கொடுத்துவிட்டு வலிமிகுந்த போர் வடுக்களை சுமந்த வர்களாகவே உள்ளனர்.

14) 2009 இற்குப் பின்னரான காலப்பகுதியில் நோய்வாய்ப்பட்டு 13 தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்குள்ளேயே பரிதாபமாக செத்து மடிந்துள்ளனர்.

15) தமது நேசத்துக்குரிய உறவுகள் விடுதலை பெற்று வீடு திரும்புவார்கள் என வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்த 20க்கும் மேற்பட்ட பெற்றோர் ஏக்கத்துடன் சாவினை தழுவிய உள்ளார்கள்.

16) தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்கள் அன்றாடம் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கீடுகளுக்கு ஆளாகி வருகிறார்கள். அதுமட்டுமன்றி பிரிவுக் காலம் அகன்று செல்வதால் பல குடும்பங்கள் உறவுச் சிதைவு கண்டு யாரும் அறியாத அப்பாவி பிள்ளைகளின் எதிர்காலம் பாழாக்கப்படுகிறது.- இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

# நாங்கள் இன்று கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பது ஐ – நாவிற்குக் கேலிக் கூத்தாக இருக்கின்றது!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்டத் தலைவி தம்பிராசா செல்வராணி

மார்ச் 25, 2002




இன்றும் வீதிகளில் நின்று நாங்கள் எங்கள் உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். அதேநேரம் மட்டுவில்லில் எமது உறவுகளுக்கு நடந்த கொடுமையையும் ஐநா பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஐநா எங்களது விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுகின்றது. நாங்கள் இன்று கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பது கேலிக் கூத்தாக இருக்கின்றதோ என்று தோணுகின்றது என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க அம்பாறை மாவட்டத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

யாழ் மட்டுவில்லில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு எற்படுத்தப்பட்ட கொடுமை தொடர்பில் கண்டனம் வெளியிடும் முகமாக இன்றைய தினம் மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

அண்மையில் யாழ் மட்டுவில்லில் சிறீலங்கா பொலிசார் அத்துமீறி எமது உறவுகள் மீது நடத்திய கொடுமையான அநியாயமான செயல்களைச் செய்துள்ளார்கள். எமது உறவுகள் சொல்ல முடியாத இடங்களில் எல்லாம் அடித்து, மிதித்து, தலைமுடிகளைப் பிய்த்துச் செய்த அந்தக் கொடுமையினை வடக்கு கிழக்கு எட்டு மாவட்டங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மஹிந்த ராஜபக்ச அவர்களைச் சந்தித்து அவர்களிடம் நாங்கள் ஒப்படைத்த உறவுகள் எங்கே என்று கேட்பதற்காகவே அவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். அவர்களை ஆள் நடமாட்டம் இல்லாத காட்டுக்குள் மறித்து சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் அந்த வயது முதிர்ந்த தாய்மார்களை அந்த வாகனத்திற்குள் அடைத்து சுற்றி வளைத்ததோடு மாத்திரமல்லாமல் அவர்களிடம் மிக அராஜகமான முறையில் செயற்பட்டிருந்தார்கள்.

அவ்வாறு அராஜகமான முறையில் செயற்பட்ட அந்த பொலிசார் அவ்விடத்தில் அவர்களின் தாய்மாரை, சகோதரிகளை மிதித்துத் துவைத்திருப்பார்களா? அவர்களது தாய், சகோதாரி, மனைவிகளை அவர்கள் நினைவில் கொண்டிருந்தால் வயதிலும் மூத்த தாய்மாருக்கு அவ்வாறு செய்திருக்கமாட்டார்கள். பொலிஸ் பெண்களும் தங்களது சகோதரிகளை, தாயை நினைத்திருந்தால் சக பெண்களுக்குத் தகாத இடத்தில் அடித்து சித்திரவதை செய்வதற்கு விட்டிருக்க மாட்டார்கள். இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இன்று ஐநா வில் 49வது கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே இவ்வாறான நிகழ்வுகள் நடந்துள்ளன. இதனையும் ஐநா சபை பாராமுகமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. எமது சங்கத்தின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டத் தலைவிகளுக்கு எற்பட்டுத்தப்பட்ட சித்திரவதைகளின் போதும், எமது தாய்மாருக்கு ஏற்பட்ட கொடுமைகளின் போதும் அவர்களின் கதறல் அந்தப் பொலிசாரின் காதுகளுக்குக் கேட்கவில்லையா?

எமது உறவுகள் அங்கு ஏன் சென்றார்கள். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்னாள் ஜனாதிபதியாக இருக்கும் போதே எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தமையால் அவரிடம் சென்று எங்கள் உறவுகள் எங்கே என்று கேட்பதற்காகவே சென்றிருந்தர்கள். வேறு எதற்கும் அவர்கள் அங்கே செல்லவில்லை.

அது மாத்திரமல்ல காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குழு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான செயற்குழு என்பனவற்றின் சந்திப்புடன் ஏனைய நாட்டின் பிரதிநிதிகளையும் சந்திப்பதற்காக எமது வவுனியா மாவட்டச் செயலாளர் ஜெனீவாவிற்குச் செல்ல இருந்த வேளையில் அவருக்கான வீசா மறுக்கப்பட்டது. அதேநேரம் தெற்குப் பிரதேசத்தில் இருந்து அனைத்து உறவகளுக்கும் வீசா வழங்கப்பட்டது. அவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். எமது உறவுகளின் பிரச்சனைகளை நாங்கள் ஐநா முன்றலில் சென்ற கதைப்பதற்கு எங்களுக்கு எவ்வளவு தடைகளை விதித்திருந்தார்கள்.




உக்ரோனில் நடைபெற்ற சம்பவங்களை பரிதாபமாகப் பார்க்கின்ற இந்த உலக நாடுகள். இலங்கையில் இறுதி யுதததத்தின் போது எங்களது இனமே அழிந்திருந்தது. சுமார் ஒரு லெட்சத்து நாற்பத்தேழாயிரத்திற்கும் மேற்பட்ட உறவுகள் அங்கு அழிந்திருந்தது. அப்போது ஏன் எங்கள் மீது பாராமுகமாக இருந்தன. அங்கு அழிவதும் உயிர்தான், இங்கு அழிக்கப்பட்டதும் உயிர்தான்.

இன்றும் வீதிகளில் நின்று நாங்கள் எங்கள் உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். அதேநேரம் மட்டுவில்லில் எமது உறவுகளுக்கு நடந்த கொடுமையையும் இன்று ஐநா பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஐநா எங்களது விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுகின்றது. இலங்கை அரசின் சொல் லைக் கேட்டு எங்களை முன் நின்ற பார்க்கவில்லை என்று எங்களுக்குத் தோணுகின்றது. நாற்பது ஆண்டுகாலமாக இராணுவக் கெடுபிடிக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாங்கள் இன்னும் அத்தகைய இராணுவக் கெடுபிடிக்குள்ளே தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எங்களது உயிர்களைக் கொல்லவில்லையா,? எங்களது பெண்களைக் கற்பழிக்கவில்லையா? எங்களது சிறு பாலகர்களைத் தீயில் தூக்கி எறியவில்லையா? எங்களைக் குழுக்குழுவாகக் கொல்லவில்லையா? எத்தனையே ஆயிரக்கணக்கான எங்கள் உறவகளைக் காணாமல் ஆக்கச் செய்யவில்லையா? இன்றும் நாங்கள் அவ்வாறான இராணுவக் கெடுபிடிக்குள் தான் இருக்கின்றோம். இன்னும் ஏன் இந்த உலக நாடுகள் எங்களைக் கண்நோக்கிப் பார்க்காமல் இருக்கின்றன.

இந்த ஐநாசபையில் 2018ம் ஆண்டில் இருந்து நாங்களே நேரில் சென்று எங்களது உறவுகளைக் கையளித்த விடயத்தைத் தெரிவித்திருக்கின்றோம். நாங்கள் இன்று கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பது அவர்களுக்குக் கேலிக் கூத்தாக இருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்சவிற்கும், அவரது தம்பியார் கோட்டபாய ராஜபக்சவிற்கும் தெரியும் எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றார்கள்? அவர்களுக்கு என்ன செய்தார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். நாங்களும் அதைதத்தான் கேட்கின்றோம். எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது. எங்கள் உறவுகளை எங்கே வைத்திருக்கின்றீர்கள், எங்கள் உறவுகளின் உண்மை நிலையைக் கூறுங்கள் என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். அதைக் கேட்கச் சென்ற உறவுகளுக்குத் தான் அவ்வாறான கொடுமைகள் நடந்திருக்கின்றது.

மட்டுவில்லில் எமது உறவுகளுக்கு பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட கொடுமையை ஐநா சபை விசாரணை செய்ய வேண்டும். அவர்கள் பிரதமரைச் சந்திக்கத் தான் சென்றிருந்தார்கள். அவர்கள் மீத பழிக்குற்றம் போட்டு, அவர்களைப் பேருந்துகளில் அடைத்து சித்திரவதை செய்துள்ளார்கள். இது இறுதியும் அறுதியுமாக இருக்க வேண்டும்.

நாங்கள் ஆயுதமேந்திப் போராட வரவில்லை. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக்கேட்டு நிற்கின்றோம். நான் எனது கணவனை இறுதி யுத்தத்தின் போது உயிருடன் தான் கையளித்தேன். அதேபோலத் தான் எமது தாய்மார் தங்கள் உறவுகளைக் கையளித்தார்கள்.

இன்று எமது உறவுகளுக்கு நடந்த கொடுமை யாருக்கும் நடக்கக் கூடாது. எமது மக்கள் அவ்வாறு கதறும் போது யாரும் அதனைப் பார்க்கா வண்ணம் இருந்தது எமக்கு மிக மனவேதனையாக இருந்தது. நாங்கள் போராடுவது எமது சமூகத்திற்காக. அது இந்த நாட்டில் வாழும் மூவின மக்களுக்கும் நன்மையாகவே அமையும்.

எமது உறவுகளின் உண்மை நிலை தெரியும் வரை எமது போராட்டம் தொடரும் எமது போராட்டத்தை ஐநா மாத்திரமல்லாமல் சர்வதேச நீதிமன்றத்திற்கும் எடுத்துச் செல்வோம் என்று தெரிவித்தார்.

# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

**Swami Vipuilanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302

**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483

**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427

**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095

**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721

**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049

**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685

**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494

**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# ஜெனீவா 2022




மார்ச் 13, 2022

கடந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்தில் ஒரு விடயம் உண்டு. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளைத் திரட்டும் ஒரு பொறிமுறை உருவாக்கப்படும் என்பதே அது. அவ்வாறு ஜெனிவா தீர்மானத்தில் அப்பொறிமுறையை இணைப்பதற்காக தொடக்கத்திலிருந்தே உழைத்தது பி.ரி.எப் எனப்படும் பிரித்தானியாவை மையமாகக் கொண்டியங்கும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு ஆகும். மியான்மர் மற்றும் சிரியாவில் உருவாக்கப்பட்ட பொறிமுறைகள மனதில் வைத்து பிரிஎப் உழைத்திருந்தாலும் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது அப்படிப்பட்ட ஒரு பொறிமுறை அல்ல என்ற ஒரு விமர்சனம் உண்டு.

மேலும் அது கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகள் இணைந்து ஐநாவுக்கு வரைந்த ஒரு கடிதத்தில் கேட்டிருந்தது போன்ற ஒரு பொறிமுறையும் அல்ல.

எனினும் அப்பொறிமுறையானது சான்றுகளை திரட்டுவதற்கான ஒரு கட்டமைப்பாக இயங்கும் என்று கூறப்பட்டது. கூட்டமைப்பு அதை ஒரு முக்கிய அடைவாகக் காட்டியது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்த ஐநா கூட்டத் தொடரில் தனது வாய்மூல அறிக்கையில் மனித உரிமைகள் ஆணையாளர் மேற்படி பொறிமுறையானது கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து செயற்படத் தொடங்கும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அது ஒரு பொறிமுறை என்று அழைக்கப்படமாட்டாது என்றும் சான்றுகளை திரட்டுவதற்கான செயலகம் என்றே அழைக்கப்படும் என்றும் ஒரு தகவல் வந்தது. அப்பொறிமுறைக்குள் மொத்தம் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றும், கடந்த ஆண்டு கடைசி மூன்று மாதங்களும் இந்த ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களுமாகச் சேர்த்து மொத்தம் ஒரு ஆண்டு காலகட்டத்திற்குரிய நிதி அதற்கு ஒதுக்கப்படும் என்றும் கூறப்பட்டது. அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்குவதற்கு சில நாடுகள் முன் வந்ததாகவும் தெரியவருகிறது. எனினும் சீனா பாகிஸ்தான் போன்ற இலங்கைக்கு ஆதரவான நாடுகள் அப்பொறிமுறைக்குரிய நிதியை குறிப்பிட்ட சில நாடுகளிடமிருந்து விசேஷ நிதியாக சேகரிப்பதை எதிர்த்ததாகத் தெரிகிறது. பதிலாக ஐநாவின் பொது நிதி ஒதுக்கீட்டிற்கூடாக அந்த நிதி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதாக தெரியவருகிறது.

ஐநா மன்றம் வளம் பொருந்திய நாடுகளின் நிதியில் தங்கியிருக்கிறது. போதிய நிதி ஐநாவுக்கு கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாக ஐநா மனித உரிமைகள் ஆணையத்துக்கு நிதிப்பற்றாக்குறை உண்டு. இலங்கைத் தீவின் வட பகுதியில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் இயங்கும் இரண்டு யுனிசெப் காரியாலயங்கள் அவற்றின் நடவடிக்கைகளை இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தோடு குறைந்தளவு அலுவலர்களோடு மட்டுப்படுத்துகின்றன என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இது ஐநாவுக்குள்ள நிதி நெருக்கடி காரணமாக என்ற ஒரு வாதம் உண்டு. அதேசமயம் இலங்கைத் தீவு நடுத்தர வருமானத்துக்குரிய ஒரு நாடாக வளர்ச்சியடைந்து விட்டதால் மேற்படி அலுவலகங்கள் அவற்றின் செயற்பாடுகளை குறைத்து கொள்கின்றன என்று ஒரு விளக்கமும் உண்டு.

இலங்கைத் தீவு தொடர்பான ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் இந்த ஆண்டுக்குரிய அறிக்கையில் நிதி நெருக்கடி பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையின் செயற்பாடுகள் நிதி போதாமையால் கட்டுப்படுத்தப்படுவதாக அறிக்கை கூறுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில், மேற்படி சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையை ஐநாவின் பொதுவான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொண்டு வந்ததன் மூலம் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் பொறிமுறைக்கு வழங்கப்படும் நிதியை திட்டமிட்டுக் குறைத்து விட்டதாக சுட்டிக்காட்டப்படுகிறது. தொடக்கத்தில் 12 உறுப்பினர்களைக் கொண்ட பொறிமுறைக்கு 2.8மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது கிட்டத்தட்ட ஒரு மில்லியன் டொலர்தான் ஒதுக்கப்படும் என்று தெரியவருகிறது. இதனால் அப்பொறிமுறையின் பருமனும் கனதியும் குறைக்கப்பட்டு விட்டன. இப்போது வழங்கப்படும் நிதியின்படி மொத்தம் 8 உறுப்பினர்களை கொண்ட ஒரு கட்டமைப்பாக அது இயங்கும். அதில் இதுவரை ஐந்து நிபுணர்கள் நியமிக்கப்பட்டு விடடார்கள். மேலும், இப்பொறிமுறையானது இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து வரும் செப்டம்பர் மாதம் வரையிலும் இயங்கும். அதாவது அதன் செயற்பாட்டுக் காலம் ஆறு மாதங்களாக குறைக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது. இது தொடர்பில் ஐநா வட்டாரங்களை மேற்கோள் காட்ட முடியவில்லை.

கடந்த ஆண்டு மார்ச் மாத கூட்டத்தொடரை முன்னிட்டு தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட மூன்று கட்சிகளை ஒருங்கிணைத்த பொழுது மேற்படி சான்றுகளை திரட்டும் பொறிமுறையை அதிகம் வலியுறுத்தி கூறியது விக்னேஸ்வரனின் கூட்டணியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் தான். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்த கோரிக்கையின்பால் அதிகம் அக்கறை காட்டவில்லை. கிளிநொச்சியில் நடந்த மூன்றாவது சந்திப்பின்போது அக்கோரிக்கையை கஜேந்திரகுமார் நிபந்தனையோடு ஏற்றுக் கொண்டார். குறிப்பிட்ட பொறிமுறைக்குரிய காலகட்டம் ஆறு மாதங்களாக குறைக்கப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்

இப்பொழுது அப்பொறிமுறைக்குரிய காலகட்டம் ஆறு மாதங்களாக குறுகப்பட்டிருக்கிறது. ஆனால் இது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்ட ஆறு மாதங்கள் அல்ல. மாறாக, அப்பொறிமுறையின் வீரியம் குறைக்கப்பட்டதால் குறுக்கப்பட்ட அதன் ஆயுட்காலம்தான் அது.

அதாவது அக்கூட்டுக் கடிதத்தில் கேட்கப்பட்டது போன்ற ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வில்லை. இது முதலாவது. இரண்டாவதாக, ஐநா மனித உரிமைகள் ஆணையர் கூறியதுபோல கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து அது இயங்கத் தொடங்கவில்லை. அது வரும் ஏப்ரல் மாதத்தில் இருந்துதான் இயங்க போகிறது. மூன்றாவதாக அப்பொறிமுறையானது முன்பு கூறப்பட்டது போல 12 உறுப்பினர்களைக் கொண்டதாக அமையவில்லை. இப்பொழுது அதில் மொத்தம் எட்டு உறுப்பினர்கள் இருப்பார்கள்.

# ஜெனிவா 2022

தமிழ் மக்கள் மத்தியிலும் தமிழ் ஊடகங்கள் மத்தியிலும் அப்பொறிமுறை குறித்து போதிய விளக்கங்களும் இல்லை. ஆர்வமும் இல்லை.அது தொடர்பாக தெளிவற்ற தகவல்களே கடந்த ஓராண்டு முழுவதும் உலவி வருகின்றன. கடந்த ஐநா தீர்மானத்தில் அப்பொறிமுறை அறிவிக்கப்பட்டதிலிருந்தே அது தொடர்பில் குழப்பமான ஊர்ஜிதமற்ற தகவல்கள் தான் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன.

தமிழ்த் தரப்பு கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஐநாவை ஓரணியாக அணுகவில்லை. ஒரே கட்டமைப்பின் ஊடாக அணுகவில்லை. ஒரு பொதுக்கட்டமைப்போ பொதுப் பொறி முறையோ இல்லை

பிரித்தானியாவில் உள்ள  பி.ரி.எப் போன்ற சில அமைப்புகள் ஐநாவுடன் நெருக்கமாக செயல்படுவதாகத் தெரிகிறது. அதேசமயம் ஜெனீவாவை மையமாகக்கொண்டு ஒரு தமிழ் அமைப்பும் செயற்படுகின்றது. இவைதவிர தாயகத்திலுள்ள கட்சிகளும் ஐநாவுடன் தொடர்பில் உள்ளன. இதில் சம்பந்தப்பட்ட தாயகம் மற்றும் புலம் பெயர்ந்த தரப்பில் உள்ள அமைப் புகளுக்கிடையே ஒருங்கிணைப்பு கிடையாது. ஒருவர் மற்றவரை அங்கீகரிக்கும் நிலை மையும் இல்லை. ஒருவர் மற்றவரை அனுசரித்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ்






இணைந்து செயற்படும் நிலைமையும் இல்லை. அவ்வாறு இம்மூன்று தரப்புகளையும் இணைத்து இயக்குவதற்கு பொருத்தமான தலைமைகளும் இல்லை.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்கள் ஒரே குரலில் ஒரே கட்டமைப்பாக இயங் குகிறார்கள். அவர்களிடம் ஒரு பொதுவான வேலைத்திட்டம் உண்டு. ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரல் உண்டு. முழு வளத்தையும் ஒரு மையத்தை நோக்கி அவர்கள் குவிக் கிறார்கள்.

இம்முறை ஜெனிவா கூட்டத் தொடருக்கு தமிழ் மக்கள் பக்கமிருந்து யாரும் போகவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் உயர்மட்டத்துக்கும் ஐநாவுக்கும் இடையே உரையாடல்கள் உண்டு. அது தவிர ஐநாவுக்கு கூட்டாக கடிதம் எழுதிய ஐந்து கட்சிகளின் கூட்டுக்கும் ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் சேர்ந்த சில அதிகாரிகளுக்கும் இடையே கடந்த வாரம் ஒரு சூம் சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படுகிறது. இவை தவிர தமிழ்த் தரப்பில் இருந்து யாரும் இம்முறை ஐநாவுக்கு போகவில்லை.

மேலும் ஜெனிவாவில் வழமையாக நடப்பதைப் போல பக்க நிகழ்வுகளும் இம்முறை அதிக தொகையில் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த ஆண்டு 17 பக்க நிகழ்வுகள் இடம்பெற்றதாகவும் இந்த ஆண்டு அதைவிடக் குறைவாகவே இடம்பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. நிதி உதவி வழங்குனர்களின் தொகை குறைந்தமை ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை ஒருவித சோர் வான சூழ்நிலை காணப்படுவதாக செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால் அரசுத் தரப்பிலிருந்து ஒரு பலமான தூதுக்குழு சென்றிருக்கிறது. அங்கே அவர்கள் மேற்சொன்ன பொறிமுறையை திட்டவட்டமாக நிராகரித்திருக்கிறார்கள். அப்பொறி முறை எப்படிப்பட்டது? அதன் உள்ளடக்கம் எப்படிப்பட்டது? அது எவ்வளவு காலத்துக்கு இயங்கும்? இப்பொழுது பொறிமுறையின் நிலை என்ன? போன்ற கேள்விகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் விளக்கங்கள் இல்லை. ஆனால் அப்பொறி முறையை இல்லாமல் செய்யும் முனைப்போடு அரசாங்கம் திட்டமிட்டு தனது வளங்கள் அனைத்தையும் திரட்டிச் செயல்படுகிறது. மேலும், ஜெனிவா கூட்டத் தொடருக்கு சென்ற அரசு தூதுக்குழு நாடு திரும்பிய கையோடு ஒரு அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன்படி நிலைமாறுகால நீதிக்குரிய அலுவலகங் களான காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் இழப்பீடு நீதிக்கான அலுவலகம் ஆகிய இரண்டுக்கும் 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

அதாவது அரசாங்கம் ஜெனிவாவைக் கையாள முடியும் என்ற நம்பிக்கையோடு உழைக்கிறது என்று பொருள். சான்றுகளைத் திரட்டுவதற்கான பொறிமுறையின் வீரியம் குறைக்கப்பட்டமையானது அந்த நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக எடுத் துக் கொள்ளலாமா?

நன்றி: நிலாந்தன்



# மாமனிதர் கமலாம்பிகை கந்தசாமி அவர்களுக்கான மதிப்பளித்தல் அறிக்கை

## அரசியற்துறை , தமிழீழ விடுதலைப்புலிகள

**அரசியற்துறை**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

**24.03.2022**

**தமிழீழம்.**

**"மாமனிதர்" கமலாம்பிகை கந்தசாமி அவர்களுக்கான மதிப்பளித்தல் அறிக்கை.**

சுயநல வாழ்வைத் துறந்து, பொதுநல சேவையை இலட்சியமாக வரித்து, அந்த உயர்ந்த இலட்சியத்திற்காக இறுதிவரை உறுதியோடு உழைத்த ஓர் உத்தம அன்னையை இன்று தமிழர் தேசம் இழந்து விட்டது. தமிழீழ மண்ணினதும், தமிழீழ மக்களினதும் விடிவிற்காக ஓயாது வீசிய புயல் இன்று மீளாத்துயில் கொண்டுவிட்டது. நாட்டுப்பற்றாளர் கதிரமலை கந்தசாமி அவர்களின் அன்புத் துணைவியும், மாவீரன் லெப். கேணல் வெற்றியழகன் (விக்டர்) அவர்களின் தாயாரும், தணியாத விடுதலைத் தாகம் கொண்ட அன்னையுமாகிய திருமதி கமலாம்பிகை கந்தசாமி அவர்கள் **21.03.2022** அன்று கனடாவில் தனது **81**வது அகவையில் சாவடைந்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கந்தசாமி அம்மா என்பவர் ஒரு மாவீரனின் அன்னை என்பதற்கப்பால், பல விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் தாயாக வாழ்ந்த வீரத்தமிழ் அன்னையிவர். 1972 இல் ஆரம்பித்த இவரது சமூகசேவைப் பணியைத் தொடர்ந்து, தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து, அந்த உன்னதமான இலட்சியத்திற்காக அல்லும் பகலும் உழைத்து வந்த அற்புதமான அன்னையர்களில் ஒருவராகிய இவர் இன்று எம்மோடு இல்லை.

இவர் ஓர் மருந்தாளராக பணிபுரியத் தொடங்கிய காலத்திலிருந்தே தனது கணவரான நாட்டுப்பற்றாளர் கதிரமலை கந்தசாமி அவர்களோடு இணைந்து சமூகமேம்பாடு, இனவிடுதலை போன்ற தளங்களில் அற்பணிப் போடு உழைத்த உத்தம அன்னையர்களில் குறிப்பிடத்தக்கவர் கந்தசாமி அம்மா. இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மருத்துவத் துறைப் போராளிகளோடு இணைந்து ஓர் மருந்தாளர், தொழில்சார் விரிவுரையாளர் மட்டுமல்ல வெளியே சொல்லமுடியாத மருந்துகள் வழங்கல் பணி என்பன போராளிகள், மக்களின் மூளை மடிப்புகளில் எல்லாம் பசுமையான நினைவுகளாக இன்றும் படிந்து கிடக்கின்றது.

ஆரம்பத்திலேயே தாயகத்தை விட்டு வெளியேறி வசதியான வாழ்க்கை வாழும் வாய்ப்புக்கள் தாராளமாக இருந்தும்கூட, எமது மக்களோடு மக்களாகவே வாழ்ந்து வந்த அமரர் கமலாம்பிகை கந்தசாமி அவர்கள் முள்ளிவாய்க்கால் பேரழிவின் இறுதிக்கணம் வரை எமது மக்களுடனேயே அத்தனை துன்பங்களையும் அனுபவித்து வாழ்ந்து வந்தார். இவரின் விடுதலைப் பயணம் முள்ளிவாய்க்காலோடு முற்றுப்பெறாது இறக்கும் வரை தொடர்ந்து கொண்டேயிருந்தது. புலம்பெயர்ந்து கனடா வந்த பின்பும் தனது தள்ளாத வயதிலும், இன விடுதலைக்காக பல தடவைகள் ஜெனிவா ஐக்கியநாடுகள் மனிதவுரிமை மன்றில், இனவழிப்பின் கண்கண்ட சாட்சியாகச் சாட்சியமளித்த இவரின் துணிச்சல் மிக்க செயற்பாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. தனது முதுமையைக்கூட பொருட் படுத்தாது சாவடையும் இறுதிக்கணம் வரை தன்னால் முடிந்த பணிகளைத் தமிழின விடுதலைக்காக ஆற்றி வந்த இவர் போன்ற தமிழினப் பற்றாளர்களின் இழப்பு தமிழினத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

எமது இன விடுதலைப் போராட்டத்தில் பற்றுறுதியுடன் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வந்த கமலாம்பிகை கந்தசாமி அவர்களின் வியத்தகு விடுதலைப் பணிகளை கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அன்னைக்கு வழங்கி மதிப்பளிப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பெருமையடைகின்றது. உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களைச் சாவு என்றும் அழித்து விடுவதில்லை. சரித்திர அன்னையாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர் என்றும் வாழ்வார்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தமிழ் பேசும் மக்களோடு இணைந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, "மாமனிதர்" கமலாம்பிகை கந்தசாமி அன்னை போன்று தமிழினத்தை நேசித்த பல்லாயிரம் தமிழினப் பற்றாளர்களின் இலட்சியம் நிறைவேறும் வரை தொடர்ந்து போராடுவோம் என உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

பா. தயாமோகன்

24/3/22

..............................

அரசியற்துறை

தமிழீழ விடுதலைப் புலிகள்.








# மட்டுவில் மகிந்தவும் – என்னோட அப்பாவும்

மார்ச 22, 2022

மட்டுவில் என் வாழ்வில் மறக்க முடியாத ஊர். என் நினைவு தெரிந்து 1993 முதல் 2006 வரை பெரும்பாலும் என் அப்பாவுடன் சாவகச்சேரி அச்சு வேலிக்கான சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் இனிமையான பயணங்கள் மட்டுவில் வண்ணாத்தி பாலம் ஊடாகத் தான் இருந்தது.

1993 ஆம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரை எமது வசிப்பிடம் சாவகச்சேரியாக இருந்த போது அச்சுவேலிக்கு வந்து போகும் போது மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலில் ஒரு கும்பிடு போட்டு விட்டு அப்பாவின் எம் பி 90 மோட்டார் சைக்கிள் வேகம் எடுக்கும். அந்த வயல்களின் நெற்கதிர்களின் வாசனையை அனுபவித்த படி அதிகம் சன நடமாட்டம் இல்லாத வீதியில் எங்களுடைய மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்படும் மோட்டார் சைக்கிள் களுடன் அப்பாவின் மோட்டார் சைக்கிள் பந்தயம் ஆரம் பமாகும்.

போட்டி போட்டு ஓடும் போது அந்த வேகத்திற்கும் கடற் கரை உப்புக் காற்றின் தழுவலும் பின்னால் இருக்கும் எனக்கு நித்திரையை ஏற்படுத்தும் என்பதால் அடிக்கடி இறுக்கி கட்டி பிடி என்ற அதட்டலுடன் ஓட்டம் தொடர்ந்து வண்ணாத்தி பாலம் தாண்டி வாதரவத்தை இராணுவ முகாமை அண்மிக்கும் போது முடிவடையும் போது அப்பாவே முதல் வந்தவராக இருப்பார்.

1998களின் பின் அச்சுவேலியிலிருந்து திரும்பிப் போகும் போது வண்ணாத்திப்பாலம் தாண்டிய பிறகு என் அப்பா வின் கண்டிப்புடன் கூடிய மோட்டார் சைக்கிள் ஓட்டப் பயிற்சி ஆரம்பமாகும். அங்கு இருந்து பன்றித் தலைச்சி அம்மன் கோயில் வரை நான் செலுத்துவேன். அந்த வகையில் நான் மோட்டார் சைக்கிள் ஓடப் பழகிய பகுதி அது.2000 ஆண்டு ஓயாத அலைகள் யுத்த காலத்தில் அடைக்கலம் தந்த ஊர் மட்டுவில்.

இப்படி பல இனிமையான நினைவுகளைத் தந்த ஊரில் தான் நாம் இன்று வரை அனுபவிக்கும் துன்பியல் நிகழ் வும் நடந்தது.

2006 சித்திரை 24 ஆம் திகதி காலையில் அச்சுவேலியி லிருந்து சாவகச்சேரியிலுள்ள தனது அலுவலகம் சென்ற அப்பா மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் தாண்டி இன்றைய பிரதமரும் அப்போதைய ஜனாதி பதிமாகிய மகிந்த ராஜபக்ச அவர்கள் நேற்று திறந்து வைத்த பொருளாதார மத்திய நிலையத்தை அண்டியுள்ள வீதியில் வைத்து இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டார்.

இன்று மட்டுவில் பகுதிக்கு வந்த அன்றைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமரும் ஆன மகிந்த ராஜபக்ச அவர்கள் தென்னிலங்கையில் சிங்கள மக்களுக்குக் கூறும் தனது போர் வெற்றிக் கதைகளில் சிலவற்றை இங்கும் அடித்து விட்டு சென்றுள்ளார்.

அதாவது யாழ்ப்பாணத்தின் மூன்று யுகங்களை நான் கண்டிருக்கிறேன். அன்று வடக்கு மக்கள் சாப்பிடுவதற் கும், பல் துலக்குவதற்கும் மட்டுமே வாய் திறக்கிறார்கள் என்ற கதை காணப்பட்டது. அந்த மக்களை நாம் விடு வித்தோம் என்று ஐயா இந்தக் கதை எப்படி இருக்கு தெரியுமா பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிச்ச கதை போல இருக்கு. கௌரவ பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்களே நீங்கள் கண்ட மூன்று யுகங்களில் யாழ்ப் பாணம் யார் கட்டுப்பாட்டில் அதிகம் அடக்குமுறைக்கு உட்பட்டு இருந்தது?

**Mr. NAGAMUTHU SRIPAVAN**

FATHER OF THREE GONE MISSING SINCE 24-04-2006. WHEN THE AREA WAS FULLY UNDER ARMY CONTROL.

**WHAT HAS HAPPENED?**

**WHO IS ANSWERABLE?**



2006 ஆம் ஆண்டில் பூரண அரச இராணுவ கட்டுபாட்டில் இருந்த யுத்தம் நடைபெறாத பகுதியில் இருந்த மட்டுவில் பகுதியில் வைத்து இலங்கை இராணுவத்தால் ஏன் எங்கள் அப்பா கைதுசெய்யப்பட்டு பலவந்தமாக காணம லாக்கப்பட்டார்?அவர் எங்கே கொண்டு செல்லப்பட்டார்?

உங்கள் அதி சிறந்த சுதந்திர ஆட்சியில் உங்கள் ஆட்சி கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எங்கள் அப்பாவைப் போன்று காணமலாக்கப்பட்டவர்களின் நிலை என்ன? யுத்தப் பிர தேசத்தில் காணாமல் ஆக்கப்பட்டார்வர்களுக்கு நீங்களும் உங்கள் படையினரும் பொறுப்பில்லை. அவர்கள் போரில் கொல்லப்ட்டு இருக்கலாம் என்றால் 2006 ஆம் ஆண்டு மட்டுவில் பகுதியில் வைத்து எம் அப்பா காணாமலாக் கப்பட்ட போது மட்டுவில் கடும் போர் நடைபெறும் பிர தேசமாக காணப்பட்டதா? அல்லது மட்டுவில் 2006 அரச கட்டுப்பாட்டுப் பகுதி இல்லையா?

உங்கள் அமைச்சரவையில் ஒரு லட்சம் ரூபாய் காணா மல் ஆக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுக்கப் போவதாய் அறிவித்துள்ளீர்களே நாங்கள் அதாவது காணாமல் ஆக்கப்பட்வர்களின் உறவினர்கள் உங்களிடம் ஒரு லட்சம் ரூபாய் கேட்டோமா? யாழ்ப்பாணத்தில் பல காணா மல் ஆக்கப்பட்வர்களின் சம்பவங்களுடன் தொடர்புடைய உங்களால் அமைக்கப்பட்ட பல ஆணைக்குழுகளில் பகிரங்கமாக மக்களால் குற்றம் சாட்டப்பட்ட உங்கள் அமைச்சரவை அமைச்சர் மற்றும் அவர் சார்ந்த கட்சியின் மேல் உங்கள் நீதியான சுதந்திர ஆட்சியில் ஒரு விசாரணையாவது நடத்தப்பட்டதா?

இறுதியாக உங்களிடம் இந்த நாட்டின் தமிழ் குடிமக னாகவும் காணாமல் ஆக்கப்பட்ட தந்தையைத் தேடும் மகனாகவும் கேட்பது கௌரவ பிரதமர் அவர்களே நீங்கள் ஒரு தமிழ் குடிமகனாக இருந்து என் அப்பாவைப் போல காணாமல் ஆக்கப்பட்டு நீதி கிடைக்காமல் இருந்தால் உங்கள் மகன்கள் ஒரு லட்சம் ரூபாவை வாங்கிக் கொள் வார்களா அல்லது அப்பாக்கு நீதி கிடைக்கப் போராடுவார் களா?

யுத்த வெற்றிக் கதைகளால் தமிழர்களின் மனங்களை வெல்ல ஒரு போதும் முடியாது.

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# வன்னிச் சங்கம்-கனடா.
# VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.
Head office address: 8-3500 McNicoll Av, Toronto(ONT), M1V 4C7.
vunitedcare@gmail.com info@vcarekids.org TP:416-644-1113.


# வன்னிப்பிரதேச மாணவர்களின் கல்விக்குக் கரம் கொடுப்போம்

கனடா வன்னிச்சங்கமானது கடந்த 25 ஆண்டுகளாக தாயகத்தில் உள்ள பெற்றோர்களை இழந்த, மாற்றுத்திறனாளியான அல்லது வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை , பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மற்றும் பின்தங்கிய கிராம பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் போன்றவற்றினை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் இவ் வருடம் க. பொ. த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு 5 பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வினாவிடைப் புத்தகங்களைப் புதிதாகப் பதிப்புச் செய்து இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எல்லா மாணவர்களுக்கும் இலவசமாகப் புத்தகங்களை அச்சிட்டு வழங்க போதியளவு நிதி வசதியின்மை எங்களிடம் உள்ளது. எனவே எங்கள் தமிழ் மாணவர்களின் அக்கறை கொண்ட கொடையாளர்களாகிய உங்கள் உதவியினை நாடி நிற்கின்றோம். வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிராமப்புறங்களில் வாழ்கின்ற வருவாய் குன்றிய மாணவர்களது கல்வி முன்னேற்றங்கருதி உங்களிடமிருந்து சிறு சிறு தொகையாகவேனும் நிதியுதவி தாருங்கள் என அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களால் மனமுவந்து தரப்படுகின்ற கல்வி உதவித் தொகைகள் அனைத்திற்கும் வருமானவரிக் கழிவு பற்றுச்சீட்டு (Charitable Donation Receipts) வழங்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

நிதி நன்கொடை செய்வதற்கு வங்கி இலக்கம் பெறுவதற்கு அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

வன்னிச் சங்கம்: 416-644-1113, நிதியாளர்:647-202-8286

e transfer: vunitedcare4kids@gmail.com

நிதி நன்கொடை செய்பவர்களுக்கு வரிக்கழிவுப் பற்றுச்சீட்டு வழங்குவதற்கேற்ற விபரங்கள் பெறுவதற்கு தயவு கூர்ந்து நிதியாளரைத் தொடர்பு கொள்ளவும்.

## “நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்”

**பொ. சிவசுதன் - செயலாளர்.**
**கனடா வன்னிச் சங்கம். 416-558-1917.**


GTA CHIROPRACTIC CENTRE
We are specialized in
• Motor Vehicle Accidents
• Slip & Fall
• WSIB
• Extended Health Care
• Sports Injuries
• Physiotherapy
• Chiropractic
• Orthotics Shoes
• Massage Therapy
• Acupuncture
Health is Wealth
Pathmaraj (Pat) Pathman
Tel: 416-321-0482 Cell: 416-528-5318
Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com


R.S தங்கப் பட்டறை
நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்
குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்
திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்
பழைய நகைகளை மாற்றி
இன்றைய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்
தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough


சங்கத்தமிழ்
ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!
உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?
விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்
437.345.4203


Nickon
Photo & Video
Digital Album
நிக்கொன்
போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio




பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழகம்

# ஈழத்தமிழர் வரலாறு -05

**கல்வெட்டுக்கள் கூறும் தமிழர் வரலாறு:**

கி.மு. 03ஆம் நூற்றாண்டில் இருந்து இலங்கை மக்களது வரலாற்றை தொடர்ச்சியாக அறியக்கூடிய நம்பகரமான சான்றுகள் ஓரளவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இதற்கு வரலாற்றுச் சம்பவங்களைக் கல்வெட்டில் எழுதி வைக்கும் மரபு தோன்றியமை ஒரு காரணமாகும். வரலாற்றாய்வில் இலக்கியங்களை விட கல்வெட்டுக்கள் கூறும் வரலாறு நம்பகரமானவையான கொள்ளப்படுகிறது. ஆதிகால இலக்கியங்கள் பெரும்பாலும் சம்பவங்கள் நடைபெற்றுப் பல ஆண்டுகளின் பின்னர் தொகுத்து எழுதப்பட்டவையாகும். இதில் இலக்கியங்கள் எழுதியோர் வாழ்ந்த காலச் சூழ்நிலை, அவர்களின் இன, மத உணர்வுகள் என்பன செல்வாக்குச்செலுத்த இடமுண்டு. இதற்கு இலங்கை வரலாறு தொடர்பாகத் தோன்றிய பாளி, சிங்கள இலக்கியங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சம்பவம் நடந்த காலத்தில் எழுதப்படுபவை. அதில் திரிபுகள், பக்கச் சார்புகள், கட்டுக்கதைகள் என்பன இடம் பெற வாய்ப்பில்லாது போகின்றது. மாறாக இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள உண்மைக்கு மாறான வரலாற்றை இனங்காண உதவுகின்றன. உதாரணமாக மகாவம்சம் கூறும் காலப்பகுதிக்குரிய வரலாற்றை அக்காலப் பகுதிக்குரிய கல்வெட்டுக்கள்




கூறும் வரலாற்றோடு ஒப்பிட்டால் மகாவம்ச ஆசிரியரின் இன, மத உணர்வு எந்தளவுக்கு அவர் எழுதிய நூலை ஒரு இநத்துக்குரிய வரலாறாக மாற்றியுள்ளது என்ற உண்மையை தெளிவாக இனங்காண முடிகிறது. இதனால் ஈழத்தமிழர் வரலாற்றை ஆராய முற்படும் ஒரு மகாவம்ச மனோபாவத்தில் இருந்து விலகி, நம்பகரமான பிற வரலாற்று மூலங்களையும் நுணுகி ஆராய்வது அவசியமாகும். இதன் மூலமே இந்நாட்டோடு ஒட்டிய தமிழரின் வரலாறு துலக்கம் பெறும். இதற்கு கல்வெட்டுக்கள் கூறும் வரலாறு சிந்த எடுத்துக் காட்டாகும்.

இலங்கையில் எழுதப்பட்ட காலத்தால் முந்திய கல்வெட்டுக்கள் "பிராமிக்" கல்வெட்டுக்கள் என அழைக்கப்படும். இக் கல்வெட்டுகள் கி.மு 03 முதல் கி. பி. 03 வரையான 600 ஆண்டுகால் வரலாற்றை அறிய உதவுகின்றன. இக்கல்வெட்டுக்களை பெருங்கற்காலப் பண்பாட்டின் வழி வந்த திராவிட மக்களே எழுதி வைத்தனர் என்பதை பெரும்பாலான கல்வெட்டுக்கள் பெருங்கற்கால மையங்களில் இருந்து கண்டு பிடித்ததன் மூலம் உறுதியாகிறது. இக்கல்வெட்டுக்களின் அமைப்பு தமிழ் நாட்டில் உள்ள கல்வெட்டுக்கள் என மயங்கும் அளவிற்கு ஒற்றுமை உடையதென்பது அறிஞர்கள் பலரது பொதுவான கருத்தாகும்.

இவற்றுள் பெரும்பாலான கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியிலும், சில தமிழ் மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் பெரும்பாலான பிராகிருதமொழிக் கல்வெட்டுக்களில் செறிவான தமிழ்ப் பெயர்களையும், சொற்களையும், தமிழ் மொழிக்கே சிறப்பாக உள்ள எழுத்துக்களையும் காண முடிகிறது. இவற்றை அவதானித்த தமிழ் நாட்டு அறிஞரான பேராசிரியர் ரி.வி. மகாலிங்கம் இலங்கையிற் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழ்மொழியின் சிறப்றை ஆராய முற்படுவோருக்கு நல்ல சான்றாக அமையும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஓரிரு வரி வடிவங்களில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டுகள் சிற்றரசர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், பிராமணர்கள் எனப்பலதரப்பட்ட சமூகத்தினர் பௌத்த துறவிகளுக்கு அளித்த தாங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம், அரச நிர்வாகம் என்பன பற்றிக் கூறுகின்றன. அவ்வாறு கூறும்போது கல்வெட்டை எழுதுவித்தோர் தமது சமூக அந்தஸ்து, குடும்ப உறவுபட்ட பெயர், தொழில், சமயம், என்பனவற்றையும் எழுதுவித்தனர். இதனால் இக்கல்வெட்டுக்களை ஆராய்வதன் மூலம் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்ட இலங்கையின் சமூக அசைவாக்கத்தை அறிந்து கொள்ள முடிகிறது. அதில் தமிழ்ச் சமூகத்தின் வரலாறு தனித:து ஆராயத் தக்கது.

ஆதிகாலத்தில் இந்நாட்டு மண்ணோடு ஒட்டிய தமிழர் வரலாறு அயல்நாட்டிலிருந்து ஆக்கிரமிப்பாளராக வந்து ஆட்சியைக் கைப்பற்றிய தமிழ் மன்னர்கள் என்ற கதையோடு பாளி இலக்கியங்களில் முடிவடைகிறது. இதற்கு மன்னர்களைப் பற்றிய வரலாறே இந்நாட்டு மக்களுக்குரிய வரலாறாக பாளி இலக்கியங்கள் கூறுமுற்பட்டமை ஒரு காரணமாகும். ஆனால் இம்மன்னர்களின் ஆட்சிக்குப் பின்னால் இருந்த மக்களைப் பற்றி இந்நூல்கள் கூறமுற்படவில்லை. சிங்கள மன்னர்களின் வரலாற்றைக் கூறும்பொழுது அம்மன்னர்கள் மக்களுக்கும், பௌத்த மத்திற்கும் ஆற்றிய தொண்டுகளை விரிவாகக் கூறுகின்றன. இவை பிற்காலத்தில் சிங்கள மக்களின் வரலாறாக எழுதப்பட்க் காரணமாயின. ஆனால் தமிழ் மன்னர்களின் ஆட்சி பற்றிக் கூறும் பொழுது அவர்கள் மக்களோடு கொண்டிருந்த உறவு பற்றியோ, மக்களுக்கு ஆற்றிய பணி பற்றியோ எதுவுமே கூறவில்லை. இதனால் தமிழ் மக்களின் வரலாறு பாளி இலக்கியங்களில் ஒப்பிட்டளவில் தொய்ந்த நிலையிலேயே காணப்படுகிறது. ஆனால் தமிழ் மக்களுக்கு இந்நாட்டு மண்ணோடு ஒட்டிய பாரம்பரிய வரலாறு உண்டு என்பதைக் கல்வெட்டுக்கள் ளிவாகப் புலப்படுத்துகின்றன.

**தமிழர் சமூகம்**

அதிகால இலங்கையின் சமூக அமைப்பை அறிவதற்கு இரு வகையான சான்றுகள் கிடைந்துள்ளன. பௌத்த சிங்கள வரலாற்றை முதன்மைப்படுத்தும் நோக்கில் எழுந்த பாளி, சிங்கள இலக்கியங்கள் இலங்கையின் பண்பாடு வடஇந்தியத் தொடர்பு கொண்டு வளர்ந்ததென்பதை நிறுவும் நோக்கில் வட இந்திய இலக்கியங்கள் கூறும் வால்வகை வர்ணப் பிரிவுகள் இலங்கையில் இருந்ததாக வலிந்து கூறு முப்படுகின்றன. ஆனால் பிராமிக் கால்வெட்டுகள் கி.மு. 03 ஆம் நூற்றாண்டில் இருந்து பல இனக் குழுக்கள் தொழில் அடிப்படையில் பல்வேறு பிரிவினராகப் பிரிந்து வளர்ச்சியடைந்ததை உறுதிப்படுத்துகின்றன. மகாவம்சம் விஜயனின் முடிசூட்டுவிழாவின் போது பாண்டி நாட்டிலிருந்து கைத்தொழில் கலைஞர்களும், பதின்னான்கு (குடி) சாதிகளுக்குரிய ஆயிரம் குடும்பங்களும் இலங்கையில் வந்து குடியேறியதாகக் கூறுகிறது. இக்கூற்று உண்மையென ஏற்பது கடினமாயினும் இக்கூற்றில் இருந்து மகாவம்ச ஆசிரியர் வாழ்ந்த காலத்தில் இலங்கையின் சமூக அமைப்பு தொழில் அடிப்படையில் பிரிந்து வாழ்ந்தனை உறுதிப்படுத்துவதாக எடுத்துக்கொள்ள இடமுண்டு. இத்தொழிற்பரிவுகளே பிற் காலத்தில் சாதிப்பிரிவுகளாக உருவெடுத்ததை வரலாற்றுரீதியாக அறியமுடிகிறது. தமிழ் நாட்டிற்கூட இந்தகைய ஒரு சமூகப் பிரிவு இருந்ததை பழந்தமிழ் இலக்கியங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இது இலங்கைத் தமிழ் நாட்டு சமூக அமைப்பு வட இந்திய சமூக அமைப்பில் இருந்து முற்றிலுமாக வேறுபட்டு நிற்பதைக் காட்டுகிறது.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்தால் அவற்றில் பல்வேறு இனக் குழுக்களையும், தொழில் அடிப்படையில் வேறுபட்ட சமூகப் பிரிவினரையும் அடையாளம் காணமுடிகிறது. இவர்களில் ஒரு பிரிவினரைச் சிங்கள சமூகமாக இனங்காண பாளி, சிங்கள இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் என்பன உதவுவது போல, இன்னொரு பிரிவினரைத் தமிழ்ச் சமூகமாக இனங்காண பழந்தமிழ் இலக்கியங்களும், தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளும் உதவுகின்றன. இதன்மூலம் வரலாற்றுத் தெடக்க காலத்தில் இருந்து ஈழத்து தமிழ்ச்சமூகம் பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையில் இதுவரை கிடைத்த 21 பிராமிக் கல்வெட்டுகள் பரதவ குலம் பற்றிக் கூறுகின்றன. இவற்றுள் அனுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் வணிகர்கள் ஒன்று கூடி வர்த்தக

ஆலோசனை நடத்திய கி.மு. 01 ஆம் நூற்றாண்டுக்குரிய கட்டிடத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று ஈழத்துப் பரதவர் பற்றிக் கூறுகிறது. ஏனைய பரதவகுலம் எருப்பொத்தானை, புளியங்குளம், வெடிக்கனாரிமலை, வவுனியா புத்தளம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் நாட்டின் தென்பகுதியிலும் வாழ்ந்ததை இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.

சங்ககாலத்தில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவகுலம் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், வர்த்தகம், கப்பல் ஓட்டுதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டதாக பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. இவர்களின் வர்த்தக நடவடிக்கையில் குதிரை, வாசனைத்திரவியங்கள், உப்பு, இரத்தினக்கல் என்பன முக்கிய வர்த்தகப் பொருட்களாக விளங்ககின. இலங்கையிற் கூட இவ்வாறான தொழில் நடவடிக்கையில் இப்பரதவகுலம் ஈடுபட்டதைக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. மகாவம்சம் கி,மு. 03 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த சேனன், குத்திகன் என்ற தமிழ்மன்னர்களை குதிரைவர்த்தகத்தில் ஈடுபட்டவனின் பிள்ளைகள் எனக் கூறுகிறது. சுதர்சன் வெனிவரட்ண என்ற சிங்கள அறிஞர் சங்க இலக்கியத்தில் பரதவகுலம் குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டதற்கு ஆதாரங்கள் இருப்பதால் அனுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த பரதவ குலத்தவராக இருக்கலாம் என்றார். சங்க காலத்தில் இலங்கையில் முக்கிய துறைமுகமாகவும், முத்துக்குளிக்கும் பிரதேசமாகவும் இந்திய இலக்கியங்களில் வருணிக்கப்பட்ட மாதோட்டத்தில் இன்றும் பரதவகுலம் கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதைக் காணலாம். இவர்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இலங்கையில் வாழ்ந்த பரதவகுலத்தின் வழித்தோன்றல்கள் எனக் கூறலாம்.

கல்வெட்டுகளால் அறியப்படும் இன்னொரு தமிழ்ச்சமூகம் வேளிர் எனபதாகும். இலங்கையில் இதுவரை அநுராதபுரம், புத்தளம், மன்னார், வவுனியா, பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த 22 கல்வெட்டுகளில் இப்பெயர் அடையாளம் காணப்பட்டுள்ளது. இப்பெயர் கல்வெட்டுக்களில் வேளான், வேளா, வேள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இற்றைக்கு ஒரு நூற்றாண்டு முன் பெரிய புளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் இப்பெயரை அவதானித்த பாக்கர் என்ற அறிஞர் இக்கல்வெட்டை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட தமிழுக்கேயுரிய வரிவடிவம் ஆதியில் தமிழர் இங்கு வாழ்ந்ததை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்டார். இதையொத்த பெயர்கள் சங்ககாலத்தில் புழக்கத்தில் இருந்ததை மேட்டுப்பட்டி, கழுகுமலை ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. சங்க இலக்கியத்தில் இப்பெயர் வேள், வேளிர், தென்முடிவேளிர், முதுகுடி வேளீர், வேந்தரும் வேளீர் எனப் பலவாறு விபரிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் இப்பெயர் குலத்தை, இடத்தை சிற்றரசை குறிக்கப்பயன்படுத்தப்பட்டன என்பதை சங்க இலக்கியத்தில் வரும் வேள் குடி, வேள்குலம், வேள்கிராமம், வேள்பட்டி, வேளாபுரம் போன்ற பெயர்கள் உறுதிப்படுத்துகின்றன.

அண்மையில் பூநகரியில் தமிழ்மொழியின் பயன்பாடு ஆதியில் இருந்ததை உறுதிப்படுத்தும் பிராமிக் கல்வெட்டுகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுகளில் ஒன்று வேள் என்ற சமூகம் பற்றிக் கூறுகிறது. நாம் வேளா என வாசித்ததை தமிழ் நாட்டு சாசனலியலாளரான ஐயாவதம் மகாதேவன் வேளான் என்று வாசித்துள்ளார். இவர் இச்சாசனத்தின் முக்கியத்துவம் பற்றி கூறிய கருத்தை இங்கு நோக்கலாம்.

“தமிழ்மொழியிலும், தமிழ்ப்பிராமி எழுத்துக்களிலும் ஆன இச்சாசனம் கி.மு. 03 அல்லது 02 நூற்றாண்டுகளைச் சேர்ந்ததென்று எழுத்தமைதியில் இருந்து கூறுமுடியும். வேளான் என்ற பெயர் சங்ககாலவேள், வேளீர் ஆகிய குறுநில மன்னர்களையும், பிற்கால சோழர் காலத்தைய (மூவேந்தர்) வேளான் என்ற பெயரையும் ஒத்திருப்பதால் இலங்கை யாழ்ப்பாணப் பகுதியில் (பூநகரி) சங்ககாலத்திலேயே தமிழ்வேளீர் அல்லது வேளார் குடியிருந்தனர் எனக் கூறலாம்.”

இவரது கூற்றிலிருந்தும், வேளீர் தொடர்பாக இலங்கையிற் கிடைத்த கல்வெட்டுகளில் இருந்தும் சங்ககாலத்தை ஒத்த சமூகம் சமகாலத்தில் இலங்கையிலும் வாழ்ந்தது என்பதை நிச்சயப்படுத்திக் கூறலாம். இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் வேளீர் என்ற சமூகம் பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய பிராந்தியங்களோடு இணைந்து வாழ்ந்ததை சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இப்பெருங்கற்காலப் பண்பாட்டோடு தான் இரு பிராந்தியங்களிலும் நிலையான விவசாய அமைப்பு முறை தோன்றியது. இதற்கு பெருங்கற் கால மக்களின் குடியிருப்புக்களோடு வயற்பரப்பும், குளமும் இணைந்திருந்தமை சிறந்த எடுத்துக்காட்டாகும். செம்பகலட்சுமி என்ற தொல்லியலாளர் பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்த வேள்குடியின் பிரதான தொழிலாக விவசாயம் விளங்கியதென்றார். இப்பின்னணியிலே தான் பிற்காலத்தில் வேளாளர் என்ற சமூகம் விவசாயத்துடன் தொடர்புடையவர்களாக மாறுவதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. இலங்கையில் வேளார் என்ற சமூகம் ஆதி காலத்தில் மட்டுமன்றி 10 ஆம் 11 ஆம் நூற்றாண்டில் உயர் பதவி வகித்த நிர்வாகிகளாக கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதனால் தற்கால தமிழ் சமூகத்தில் வாழும் வேளாளர் சமூகத்தின் பூர்வீகத்தை கி.மு. 03 ஆம் நூற்றாண்டில் இருந்து ஆராய இடமுண்டு.

கல்வெட்டில் இடம்பெறும் மற்றொரு முக்கிய பெயராக “ஆய்“ விளங்குகிறது. இப்பெயர் சில இடங்களில் இனக்குழுவாகவும், சில இடங்களில் பதவிப் பெயராகவும் கல்வெட்டுக்களில் தோற்றமளிக்கிறது. இதன் மூலத்தை ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதான இது வடமொழியில் உள்ள “அரய“ என்ற சொல்லின் திரிபு எனவும், பிற்பட்ட சிங்களக் கல்வெட்டில் வரும் “ஆப“ என்பது இதன்வழித் தோன்றல் எனவும் கூறினார். பேராசிரியர் மகாலிங்கம் இக்கருத்தை மறுத்து சங்க இலக்கியத்தில் வரும் “ஆய்“ என்ற நிலக்குழுத் தலைவர்களை, இனக்குழுவை இப்பெயர் குறித்ததென்றார். சங்க இலக்கியத்தில் இந்த “ஆய்“ என்ற பெயர் முல்லை நில மக்களைக் குறிக்கப்பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பெயர் ஒரு இனக்குழுவாக மட்டுமன்றி சிற்றரசனை, தனிமனிதனைக் குறிக்கும் பெயராகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு சிறுபாணாற்றுப்படையில் வரும் வேள்-ஆய், புறநானூற்றில் வரும் மாவேள் – ஆய், தேர்வேள் – ஆய், அகநாறூற்றில் வரும் நன்னன் – ஆய் போன்ற பெயர்கள் சான்றாகும். இவ்வொற்றுமைத் தன்மை இலங்கைப் பிராமிக் கல்வெட்டிலும் காணப்படுகிறது. இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் வரும் ஆய் என்ற பெயரின் பெண்பால் வடிவமாக “அபி“ என்ற பெயருக்கு மேன்மை, பெருமை, விருப்பத்திற்குரியவள் என விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இதன் ஆண்பால் வடிவமாக ஆய் தமிழ்ச் சமூகத்தில் இருந்த ஆயார் குலத்தைக் குறித்ததெனக் கூறலாம்.

வெளிச்சம் – வைகாசி 1995

பயணம் தொடரும்...

# சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே

# “மகாவம்சம்”

# இன்றும் எழுதப்படுகிறது

# அரசியல் கைதிகளை விடுவிக்க கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் உத்தரவை பெற வேண்டும்

## அருட்தந்தை மா. சத்திவேல்

மார்ச் 22, 2022

நீண்ட காலம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை அடுத்த பேச்சு வார்த்தைக்கு முன்னர் விடுவிப்பதற்கான உத்தரவை நடக்கவிருக்கும் ஜனாதிபதிக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்



துள்ளார்.

அவரால் இன்று (22) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு இம்மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதியின் நேரப்படி நடைபெறவுள்ளது.

சோதிடர்களின் நல்ல நேர கணிப்பின்படியே ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்தும் அது அவர்களுக்கு நல்ல நேரமாக அமையவில்லை என்பதையே மக்கள் முகம் கொடுக்கும் பொருளாதார பிரச்சினைகள், அரசு முகம்கொடுக்கும் சிக்கல்கள் வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் ஜனாதிபதியோடு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நடத்தும் பேச்சு வார்த்தை தமிழ் மக்களை அரசியல் சிக்கல்களுக்கு இட்டு செல்லக்கூடாது.

இச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தமிழ் தேசியக்கூட்டமைப்பினை மட்டும் சந்திப்பிற்கு அழைப்பது இரு தரப்பினருக்கும் இடையில் அரசியல் உறவை வளர்த்து கொள்ளவா? அல்லது நல்லாட்சி காலமென கூறப்பட்ட மைத்திரி-ரணில் ஆட்சி காலம் போன்று கட்சியிலிருந்து ஆதரவை பெற்று கொள்ளலாம் என்பது தொடர்பில் தெரியவில்லை.

ஜனாதிபதியின் அழைப்பில் உள்நோக்கம் ஓரளவிற்கு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு தெரிந்திருக்கும் என நம்பலாம். அதன் காரணமாகவே வடகிழக்கின் தமிழ் கட்சிகளோடு உரையாடாது ஜனாதிபதியை சந்திக்க செல்கின்றனர்.

தமிழர்களின் அரசியல் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் எனில் அரசு தமிழ் தேசிய கூட்டமைப்போடு மட்டும் ஏன் பேச்சுவார்த்தையில் ஈடுபட அழைக்க வேண்டும்?

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தனித்து ஏன் செல்ல வேண்டும்? பேச்சுவார்த்தை என்பது கடந்த கால அனுபவங்களோடு கூட்டுத் தன்மை கொண்டதாக அமைய வேண்டும்.

தற்போது தமிழர்கள் புலம்பெயர் நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தமிழர் தாயகத்தின் அரசியலை முன்னகர்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளை செய்துவரும் நிலையில் அவர்களுடைய ஆலோசனையும் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியான பிரச்சினையை கதைப்பதற்கு செல்ல வேண்டும்.

இந்தப் பேச்சு வார்த்தையை மையப்படுத்தி நடக்கவிருப்பதாக கூறப்படும் மாகாணசபை தேர்தலில் அரசியல் லாபம்




தேடும் முயற்சியாகவும் இது அமைந்து விடக்கூடாது. இந்த நோக்கில் மக்களை திசை திருப்புவது என்பது அழிவிற்கே வழிவகுக்கும்.

நலமான பேச்சுவார்த்தைக்கான அடித்தளமாகவும் நல்லெண்ணத்தின் அடையாளமாகவும் நீண்ட காலம் சிறையில் வாடும் அரசியல் கைதிகளை அடுத்த பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுவிப்பதற்கான உத்தரவை நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தையில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

அத்தோடு புத்தர் சிலைகளை ஆக்கிரமிப்பின் சின்னமாக தமிழர் தாயகத்தில் பலவந்தமாக வைப்பதை தடுத்து நிறுத்தவும் உத்தரவிடுமாறு கோர வேண்டும்.

மேலும் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தை அயலக மற்றும் வல்லரசுகளின் அரசியல் தேவைகளை மட்டும் நிறைவேற்றும் ஒன்றுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தமது நலன் சார்ந்து கைக்கூலிகளாக ஏற்படக்கூடாது என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும் என மேலும் தெரிவித்துள்ளார்



# கோட்டாவின் சூழ்ச்சித் திட்டத்தை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும்!

அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை




நான் பெரிது. நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள். நாடு நமக்குப் பெரிதானால். நாம் எல்லோரும் அதற்குச் சிறியவர்களே. ஏனெனில், நாட்டின் வாழ்வு எமது நிலையற்ற வாழ்விலும் பெரியது. -தேசியத்தலைவர் அவர்கள்-

மார்ச் 23.2022

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்கு அவசர அவசரமாக நாள் குறித்து நேரம் தீர்மானித்து கோட்டாபய ராஜபக்ச விரித்துள்ள சூழ்ச்சித் திட்டத்தை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் என்பதை அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை உரிமையுடன் வலியுறுத்திக்கொள்கின்றோம்.

சிறீலங்காவின் சனாதிபதி அழைத்தவுடன் வரிந்து கட்டிக் கொண்டு செல்வதற்கு இந்த விடயமானது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகளின் குடும்ப விவகாரம் அல்ல. இலங்கையில் இருந்து வெள்ளையர்கள் வெளியேறிய காலத்தல் இருந்து திட்டமிட்ட ஒடுக்கு முறைகளைத் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் ஒரு தேசிய இனத்தின் இருப்புச் சம்பந்தமான பிரச்சினை.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளையும், நீதிக்கான கோரிக்கைகளையும் எதேச்சதிகார மனப்போக்கில் ஒட்டுமொத்தமாகவே நிராகரிப்பதுடன் நின்றுவிடாது திட்டமிட்ட இனவழிப்பு யுத்தத்தை ஆட்சி - அதிகார துணையுடன் வடக்கு, கிழக்கில் முழுவீச்சுடன் தொடர்ந்துவருவதுடன், தன்னை பௌத்த - சிங்கள மக்களின் தலைவனாகவே பகிரங்கமாக பிரகடனப்படுத்திவரும் இலங்கையின் இன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் சூழ்ச்சித் திட்டமே பேச்சுக்கான அழைப்பாகும்.

அனைத்துலக ரீதியாக எழுந்துவரும் நேரடி, மறைமுக அழுத்தங்களில் இருந்து தப்பிக்கும் சூழ்ச்சித் திட்டதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியப்பரப்பில் இருக்கும் தலைமைகள் அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியாக செயற்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் கோரிக்கைகள் யாதென கோட்டா அன் கோவுக்கு நன்றாகவே தெரியும். அதனை எடுத்துச் சொல்வதற்காக இந்த சந்தரப்பத்தை பயன்படுத்த உள்ளோம் என்ற பேரில் கோட்டாவுடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியாயப்படுத்த முனைவது வாக்களித்த மக்களை ஏமாற்றி கழுத்தறுக்கும்செயலாகும்.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வை நோக்கிய முன்னெடுப்பு எதுவாக இருப்பினும், ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே அரசியல் செய்வதாக கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்பட்டுவரும் அனைவரும் ஓரணியாக செயற்படுவதன் மூலமே அவர்களது கூற்றை அர்த்தப்படுத்த முடியும்.

ஆகவே, அனைத்துலக அழுத்தங்கள், நெருக்கடிகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் ஒரே நோக்கத்திற்காக கோட்டா விடுத்துள்ள பேச்சுக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக மறுக்க வேண்டும் என்பதுடன், ஈழத் தமிழ் மக்களின் தீர்வு விடயம் தொடர்பான எந்த பேச்சுவார்தைகளாக இருந்தாலும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளுடனும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் அமைப்புகளுடனும் இணைந் ததாகவே அமையவேண்டும். கல்லோயா குடியேற்றத் திட்டம் முதல் இன்றுவரை வரலாறு கற்றுத்தந்த பெரும் படிப்பினையூடாக சம்பந்தனும் சுமந்திரனும் இன்னும் கற்றுக்கொளவில்லை என்றால் இவர்கள் தங்கள் இருப் பிற்காக ஈழத்தமிழர்களை சிங்களத்திடம் அடகுவைக் கிறார்கள் என்பதே நிதர்சனம்.

பௌத்த - சிங்கள மக்களின் அபிலாசைகளை நிறை வேற்றவும், அவர்களது உரிமைகளை பாதுகாக்கவுமாக பகிரங்க பிரகடனம் செய்துள்ள கோட்டாபய ராஜபக்சவிடம் தமிழ் மக்களுக்கான தீர்வை எதிர்பார்ப்பது கேலிக்கூத் தான விடயம் என்பதுடன் எங்களை நாங்களே ஏமாற்றும் செயலாகும். இன்று வரை ஒரு நல்லெண்ண சமிக்ஞையைக் கூட காட்டாமல் தொடர்ச்சியாக தமிழர் பூர்வீக பிரதேசங்களில் புத்தமயமாக்கலைத் தொடரும் பேரின வாத சிங்கள அரசுடன் என்றுமே பேச்சு வார்த்தை மூல மாகத் தீர்வு காண முடியாது.

இலங்கைத் தீவின் ஆதி குடிகள் என்ற உரித்தின் அடிப் படையில் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொண்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு தயாராக உள்ளமையை வெளிப்படுத்தும் சமிக்ஞைகளை செயற்பாட்டு ரீதியாக கோட்டாபய அரசு காட்டிய பின்னரே தமிழ்த் தரப்பு பேச்சு தொடர்பில் சிந்திக்க முடியும் என்ற செய்தியை இடித்துரைத்து கோட்டாவின் சூழ்ச்சித் திட்டத்தை முறியடிக்குமாறு அன்புரிமையுடன் கேட்டு நிற்கின்றோம்.

## கண்ணீர் வணக்கம்



பிறப்பு 24 - 02 - 1941

இறப்பு 21 - 03 - 2022

மாமனிதர்
கமலாம்பிகை கந்தசாமி
(கந்தசாமி அம்மா / விக்ரர் அம்மா)

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

# 30ம் ஆண்டு

# வீரவணக்கம்







வீரப்பிறப்பு:
09.05.1972

வீரச்சாவு:
23.03.1992

**கப்டன் மணாளன் [டயஸ்]**
**சண்முகநாதன் ஸ்ரீராம்**
**தொல்புரம் மேற்கு சுழிபுரம், தமிழீழம்**

*(23.03.1992 அன்று மணலாற்றில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையினரின் கஜபார நடவடிக்கைக்கெதிரான 7 ஆம் நாள் சமரில் வீரச்சாவு)*

முப்பது ஆண்டென்ன ஏழேழு ஜென்மத்துக்கும்
மறவோம் கண்ணிலே தோன்றும் காட்சி எல்லாம்
கனவாகி நனவாகி போவதுண்டு
மண்ணிலே பிறந்திட்ட மனிதரெல்லாம்
மண்ணாகி மறந்தோடிப் போவதுண்டு
எண்ணில் அடங்காத விண்மீன்களும்
என்றோ நாளொன்றில் மறைந்துபோதும்
நெஞ்சிலே உங்கள் நாமம் என்றும்
நீங்காமல் நிலைத்திருக்கும்.
என்றும் உன்னை நினைப்பவர்கள்.

அறிவித்தல்: உறவுகள்

# போர்க்குற்றம் சாட்டப்பட்ட ஓய்வுபெற்ற சிறீலங்கா ஜெனரல் ஜகத் ஜயசூரியவை தடை செய்யுங்கள்

**அவுஸ்ரேலியா அரசிடம் அவுஸ்ரேலியத் தமிழர்களும் மனித உரிமை அமைப்புக்களும் கோரிக்கை!**



மார்ச் 31.2022

அவுஸ்ரேலியா வந்த சிறீலங்கா ஜெனரல் மீது போர்க்குற்ற விசாரணை நடத்த அவுஸ்ரேலிய காவல்துறையினர் தவறியுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதேநேரம், அவுஸ்ரேலியாவின் புதிய மக்னெஸ்கி சட்டத்தின் கீழ் அவரை தடை செய்யும் நேரம் இதுவென மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

சிறீலங்காவின் ஒய்வுபெற்ற ஜெனரல் ஜகத் ஜயசூரிய சிறீலங்காவில் நடந்த கொடூர செயல்களுக்கு தலைமை தாங்கி நடாத்தியமைக்காகவும், அவுஸ்ரேலியாவிற்குள் அவரை விஜயம் செய்ய அனுமதிக்கப்பட்ட பின்னர் அவரை அவுஸ்ரேலிய காவல்துறை விசாரணை செய்யத் தவறியதைத் தொடர்ந்தும் அவர் மீது தடைவிதிக்குமாறு அவுஸ்ரேலிய அரசாங்கத்திற்கு அவுஸ்ரேலியத் தமிழர்களும் மனித உரிமை அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த அமைப்புக்கள் இணைந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
பிரித்தானியாவுக்கும் ஏனைய அரசாங்கங்களுக்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்தே ஜயசூரியாவைத் தடைசெய்யவேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. மக்னிஸ்கை தடைகள் என்று அறியப்படும் அவுஸ்ரேலியாவின் புதிய மனித உரிமைகள் தடைச்சட்டத்தினைப் பயன்படுத்தி ஜயசூரியாவைத் தடை செய்யுமாறு அவுஸ்ரேலிய அரசாங்கத்தை வலியுறுத்தும் 100 பக்கங்களைக் கொண்ட முதலாவது வேண்டுகை கடந்த 2022 மார்ச் 4ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

2019ஆம் ஆண்டு மே இல் போர்க்குற்றவாளி என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஜகத் ஜயசூரியா தன் குடும்ப உறுப்பினர்களைச் சந்திப்பதற்காக அவுஸ்ரேலியாவுக்கு வந்ததுடன் மட்டுமன்றி மெல்போணில் நடந்த பொது நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார். சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கானசெயற்திட்டம், நீதி சர்வதேச நீதிக்கான அவுஸ்ரேலிய மையம், மனித உரிமைகள் சட்ட மையம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து அவுஸ்ரேலியச் சட்டத்திலுள்ள சர்வதேச சட்டஅதிகார வரம்பின் கீழ் ஜயசூரியா மீது அவசர குற்ற விசாரணையை நடத்துமாறு அவுஸ்ரேலிய கூட்டாட்சி காவல்துறைக்கு எழுதின.

தொடர்ந்து, கொடுமைகள், சித்திரவதைகளிலிருந்து உயிர்தப்பியவர்கள், சாட்சிகள் 40 பேருடைய ஒருதொகுதி வாக்குமூலங்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை வரைவினையும் அவர்கள் சமர்ப்பித்திருந்தர்கள். குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்ட அதிகார வரம்பிற்குள் இருந்தும், அவர் மீண்டும் திரும்பவும் வருவதற்கான சாத்தியங்கள் இருந்தும் பாரதூரமான சர்வதேசக் குற்றச்செயல்கள் தொடர்பான அறிக்கைகளை சிரத்தை எடுத்து விசாரணை செய்யத் தவறியதன் ஊடாக பொறுப்புக்கூறலை சிறுமைப்படுத்துவதாக அவுஸ்ரேலிய கூட்டாட்சி காவல்துறை மீது இவ்வமைப்புக்கள் குற்றம் சுமத்துகின்றன.

கடந்த 2019 ஒக்ரோபர் பிற்பகுதியிலும் நவம்பரிலும் ஜயசூரியா மீண்டும் அவுஸ்ரேலியாவுக்கு வந்திருந்தார் என்றும், பொது நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார் என்பதும் அண்மையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அவுஸ்ரேலிய கூட்டாட்சி காவல்துறை, அவுஸ்ரேலிய உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பிலுள்ள அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகரகம் ஆகியவற்றின் தவறான நடவடிக்கைள் மீது விசாரணை நடத்துமாறு இவ்வமைப்புக்கள் அழைப்பு விடுக்கின்றன.

அவுஸ்ரேலியாவில் விசாரணைக் குழு ஒன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது என்பதையே இப்பாரதூரமான தவறுகள் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. அதன் மூலமாக சர்வதேச குற்றச்செயல்கள் தொடர்பில் நிபுணத்துவம் வாய்ந்த விசாரணையாளர்கள் இவ்வாறான சூழ்நிலைகளில் விரைந்து செயற்பட்டு உடனடியாக பதில்தரமுடியும்.

2009 மே மாதத்தில் முடிவடைந்த சிறீலங்காவின் உள்நாட்டுப்போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியவற்றின் பாரதூரமான மீறல்களுக்கும் போர்க் குற்றங்களுக்கும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கும் இட்டுச்சென்ற பரவலான நடவடிக்கைகளுக்கு அல்லது தவறுகளுக்கு ஜயசூரியா பொறுப்பானவராவார்.

**பின்வரும் நடவடிக்கைகளுக்கு அவர் அங்கீகாரம் வழங்கி, மேற்பார்வை செய்துள்ளார்:**

- சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள்,
- பாதுகாக்கப்பட்ட நபர்கள், பொருட்கள் மீதான தாக்குதல்கள் கொலைகள் உட்பட சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள்,
- பொதுமக்கள் கொலைகள்,
- வலிந்து காணாமல் ஆக்குதல் மற்றும் நீதிக்குப் புறம்பான கொலைகள்,

2017 ஆகஸ்டில் ஜயசூரியா இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்குரிய தூதுவராகப் பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில் பிரேசில், சிலி, கொலம்பியா ஆகிய நாடுகளிலுள்ள வழக்குத் தொடுனர்களுடன் இணைந்து சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கானசெயற்திட்டம் அவர் மீது குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து அவர் சிறீலங்காவுக்குத் தப்பியோடினார்.

ஜயசூரியாவின் உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராகவும் தடைகளை நியமிக்க வேண்டும் என்ற வேண்டுகோளும் இந்த தடைக்கோரிக்கையில் உள்ளடங்கும். இது அவுஸ்ரேலியாவின் மக்னிஸ்கை சட்டத்தின் கீழ் உள்ளது.

ஜயசூரியாவின் குடும்ப உறுப்பினர்கள் அவுஸ்ரேலியாவில் தங்கியிருந்து இங்கு மூன்றாம் நிலை படிப்பில் சேர்ந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. சிறீலங்காவில் உள்நாட்டுப்போர் முடிந்து ஒரு தாசாப்தம் கடந்த நிலையிலும், போரில் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்குக் காரணமென எந்தவொரு சூத்திரதாரிகளும் தண்டிக்கப்படவில்லை. உலகளாவிய சட்ட அதிகார வரம்புக் கோட்பாடு என்பதைத் தாண்டி பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் தப்பியவர்களுக்கு எந்தவொரு பொறுப்புக்கூறும் பொறிமுறைகளும் இல்லை. ஆகவே, பொறுப்புக்கூறலில் காணப்படும் இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கும், இந்த ஜெனரல்கள் அனுபவித்துவரும் தண்டனையிலிருந்து விலக்களிப்பினை இல்லாமல் செய்வதற்கும் இத்தடைகள் உதவும். இது சிறீலங்காவின் ஜெனரல்களைத் தடைசெய்ய வேண்டிய நேரம் இது.

**வன்னியின் பாதுகாப்பு வலயத்திலிருந்து உயிர்தப்பி வந்த செல்வி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பின்வருமாறு கூறினார்:**

"போரின் இறுதிக்கட்ட நேரத்தில் நான் "பாதுகாப்பு வலயத்தில்; இருந்தேன். நான் பயங்கர நிகழ்வுகளை நேரில் கண்டேன். போர் முடிந்து ஒரு தசாப்தம் கடந்துவிட்ட போதிலும், அதன் ஆறா வடுக்களும் மனப்பாதிப்புக்களும் இன்னமும் என்னுடைய வாழ்க்கையைப் பாதித்துக்கொண்டுதான் இருக்கின்றன. குற்றமிழைத்தவர்கள் எவ்விதமான வருத்தமும் இன்றி அல்லது தாம் செய்த தவறுகளுக்கு விமோசனம் தேடாமல், சுதந்திரமாகச் சுற்றித்திரிய முடியும் என்பதை நினைக்கும்போது எனக்கு வலிக்கின்றது. நீதிக்கான வேட்கையில், தவறு செய்பவர்களுக்குரிய இச்சலுகைகள் மறுக்கப்படவேண்டும்."

**தமிழ் அகதிகள் சபையைச் சேர்ந்த திரு. அரண் மயில்வாகனம் பின்வருமாறு கூறினார்:**

"சிறீலங்காவின் போரிலிருந்தும் அங்கு நடந்த சித்திரவதைகளிலிருந்தும் உயிர்தப்பி வந்த பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் சமூகத்தில் இருக்கின்றார்கள். இவர்களில் சிலர் அவுஸ்ரேலியக் குடிமக்களாக இருக்கின்றார்கள். இவர்களில் பலர் ஜகத் ஜயசூரியாவின் தலைமையின் கீழ் சிறீலங்கா இராணுவத்தின் குற்றச்செயல்களுக்கு ஆளாக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து வந்து அகதித் தஞ்சம் கோரியவர்கள். அவர் செய்த குற்றச்செயல்களுக்கு எவ்விதமான விசாரணைகளுக்கும் உட்படுத்தப்படாமல் சுதந்திர மனிதராக அவுஸ்ரேலியாவில் அவரை அனுமதித்தது அபத்தமானது.

உயிர்தப்பியர்வகளுக்கு அவுஸ்ரேலியா செவிமடுத்து, ஒன்றில் அவரைத் தடைசெய்யவேண்டும் அல்லது அவர் மீது விசாரணை தொடரவேண்டும்.

**சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா பின்வரு மாறு கூறினார்:**

"சிறீலங்காவிலிருந்து வரும் போர்க் குற்றவாளிகள் என்று குற்றச்சாட்டப்பட்டவர்களுக்கு அவுஸ்ரேலியா ஒரு சொர்க்கபூமியாக இருக்கக்கூடாது - குறிப்பாக இங்கே வாழும் பெரியளவிலான தமிழ்ச்சமூகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனித உரிமைக் கடப்பாட்டினை மதிக்கவேண்டும் என்று தமது அரசாங்கத்தை எதிர்பார்க்கும் வேளையில் இது நிகழ்ந்துவிடக்கூடாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது சொந்த நாடு நீதிவழங்க விருப்பமின்றி இருக்கும் நேரத்தில் அவர்களுக்கு உண்மையை நிலைநாட்டுவதற்கு சர்வதேச சமூகத்திற்கு முக்கியமான கருவியாக மக்னிஸ்கை சட்டங்கள் காணப்படுகின்றன.

**சர்வதேச நீதிக்கான அவுஸ்ரேலிய மையம் அமைப்பின் நினைவேற்றுப் பணிப்பாளர் றவான் அரவ் பின்வருமாறு கூறினார்:**

"ஜகத் ஜயசூரியா தான் இழைத்த குற்றங்களுக்காக ஒரு நாள் நீதிமன்றத்திற்கு பதில்சொல்ல வேண்டிவரும் என்று நாம் நம்புகின்ற அதேவேளையில், அவர் சிறீலங்காவில் நடந்த கொடுமைகளில் அவர் வகித்த வகிபாகத்திற்காக அவரை தடைசெய்ய வேண்டும் என்று நாங்கள் அவுஸ்ரேலியா அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். அவருடைய குற்றச்செயல்களில் பாதிகப்பட்டு உயிர்தப்பி வந்த பலர் அவுஸ்ரேலியாவை தாயகம் என்று அழைக்கின்றார்கள். இப்பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதுடன், பிரித்தானிய மற்றும் இதர நாடுகளுடன் இணைந்து சர்வதேசக் குற்றங்களுக்குப் பொறுப்பான ஜயசூரியா மீதும் இதர சிறீலங்காவின் ஜெனரல்கள் மீதும் தடைகளை விதிக்கவேண்டும்."

"பாரதூரமான ஒரு குற்றவியல் பரிந்துரையையும் அவுஸ்ரேலியாவில் போர்க்குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் சுதந்திரமாக நடமாடுகின்றார் என்ற எங்களது எச்சரிக்கையையும் கையாண்ட விதத்திற்கும் அவர்கள் இழைத்த தவறுக்கும் அவுஸ்ரேலிய ஃபெடரல் காவல்துறை பதில்கூறவேண்டும். அவர்களது இக்குழப்பத்தின் மீது ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டும். பல தடவைகள் எவ்வாறு ஜயசூரியாவால அவருடைய ஆட்பரிசோதனையைத் தாண்டி பல தடவைகள் அவுஸ்ரேலியாவுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டார் என்பதற்கு உள்நாட்டு அலுவலகம் பதிலளிக்கவேண்டும்.

"நாங்கள் அவுஸ்ரேலிய ஃபெடரல் காவல்துறையை எச்சரிக்கை செய்து ஐந்து மாதங்களின் பின்னரும் அவர் மீண்டும் அவுஸ்ரேலியாவுக்குள் வந்துள்ளார் என்பது மனித குலத்திற்கு எதிரான மிகக் கடுமையான குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரித்து விசாரணை நடத்துவற்கான அவுஸ்ரேலியாவின் பொறுப்புக்கு விழுந்த ஒரு அவமானமாகும்.

**அவுஸ்ரேலிய வாழ் தமிழ்ச் செயற்பாட்டாளராக மருத்துவர் சாம் பாரி பின்வருமாறு கூறினார்:**

"சிறீலங்காவில் நடந்த கொடுமைகளிலிருந்து உள்ளாகி உயிர்தப்பி இங்கு வந்துள்ள தமிழர்கள் அவுஸ்ரேலியாவை தயாகமாகவே அழைக்கின்றார்கள். இக்குற்றச்செயல்களில் ஈடுபட்ட சூத்திரதாரிகளை நீதியின்முன் கொண்டுவருமாறு அவுஸ்ரேலியத் தமிழ்ச் சமூகம் பல வருடங்களாக அறைகூறவல் விடுத்துவருகின்றது. இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக ஜயசூரியாவை விசாரணைக்குட்படுத்தத் தவறியதன் மூலமாக, பொறுப்புக்கூறலுக்கான உண்மையான ஒரு கட்டமைப்பினை ஒருபோதுமே ஏற்படுத்தாத சிறீலங்காவில் எப்படி அவர்கள் தண்டனைவிலக்கினை அனுபவிக்கின்றார்களோ அதேபோன்றே அவுஸ்ரேலியாவிலும் குற்றச்சாட்டப்பட்ட சூத்திரதாரிகள் தண்டனைவிலக்கினை அனுபவிக்கலாம் என்ற செய்தியையே அவுஸ்ரேலியா வெளியுலகுக்கு அனுப்புகின்றது."

"தனது சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்கிச்செல்வதற்காக ஒரு உண்மையான செயற்றிறன் மிக்க கட் டமைப்பினை அவுஸ்ரேலியா ஏற்படுத்தவேண்டும். விசாரணை செய்வதற்கான தன்னுடைய கடப்பாட்டிலிருந்து தவறியதன் ஊடாக, அவுஸ்ரேலிய அரசாங்கம் சிறீலங்காவில் கொடுஞ்செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதை காட்டும் நம்பகரமான ஆதாரங்கள் உள்ள ஜயசூரியா போன்ற நபர்களைத் தடைசெய்யவேண்டும்.

# மியான்மாரில் ரொஹிங்கிய இனப்படுகொலை! அமெரிக்காவின் அங்கீகாரத்தை வரவேற்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்!

மார்ச் 31, 2022

மியான்மாரில் ரொஹிங்கியாக்களுக்கு எதிரான பௌத்த பேரினவாதத்தின் குற்றங்களை இனப்படுகொலை என்று அமெரிக்க இராஜாங்க செயலர் பிளிங்களின் அங்கீகரித்தை வரவேற்றுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், நீதிக்காக போராடும் ஈழத்தமிழ் மக்களாகிய நாங்களும் ஒருமைப்பாட்டுடன் ரொஹிங்கியா மக்களின் கரங்களைப் பற்றிக் கொள்கின்றோம் எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இனப்படுகொலை மற்றும் தொகையான அட்டூழியத் தடுப்பிற்கான அமைச்சகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,
மியான்மார் இராணுவம் ரொஹிங்கியா மக்களுக்கு எதிராக இழைத்த சர்வதேச குற்றங்களை இனப்படுகொலை என்று, கடந்த மார்ச் 21, 2022 அன்று அமெரிக்க இராஜாங்க செயலர் பிளிங்கன் அறிவித்திருந்தார். “இந்த அறிவிப்பினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்கிறது.



இனப்படுகொலைக்கு ஆளாகி, நீதிக்காக ஏங்கும் ஈழத் தமிழ் மக்களாகிய நாங்கள்,
ஒருமைப்பாட்டுடன் ரொஹிங்கியா மக்களின் கரங்களைப் பற்றி, இந்த நீதிக்காக அவர்களை வாழ்த்துகிறோம்” என இனப்படுகொலை மற்றும் தொகையான அட்டூழியத் தடுப்பிற்கான அமைச்சர் திரு.றோய் விக்னராஜா தெரிவித்துள்ளார்.

கனடா, பிரான்ஸ், துருக்கி மற்றும் பிற நாடுகள் ரொஹிங்கியா மக்களுக்கு எதிரான குற்றங்களை இனப்படுகொலை என்று ஏற்கனவே அறிவித்துள்ளன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஜன.20, 2021 அன்று வீகர் இனப்படுகொலை, மற்றும் ஏப்ரல் 24, 2021 அன்று ஆர்மேனிய இனப்படுகொலை, அகியவற்றை அங்கீகரித்தமையானது, “பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது”, பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது என்ற போர்வையில் இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் ஆகியவற்றைப் புரியும் அரசுகளையும், தனி நபர்களையும் நீதியின் முன் நிறத்துவதிலும் மனித உரிமைகளை நிலைநிறுத்துவதிலும் அமெரிக்க நிர்வாகத்திற்கு இருக்கும், அசைக்க முடியாத அர்ப்பணிப்பிற்குச் சான்றாக இது அமைந்துள்ளது. இப்படியானதொரு போர்வையில் தான், மியான்மார் பௌத்த பேரினவாதடி இராணுவ ஆட்சியாளாகளும், “சட்டபூர்வமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள்” எனற பேர்வையில் தமது சர்வதேச குற்றங்களை நியாயப்படுத்துகின்றனர்.

ரொஹிங்கியா இனப்படுகொலையை அங்கீகரிக்கையில், “எண்ணிக்கை, சதவீதம், வடிவம், நோக்கம் - ஆகியன இனப்படுகொலயை நிர்ணயம் செய்வதற்கு மிகவும் முக்கியமானவை” என்று இராஜாங்கச் செயலர் கூறியுள்ளார்.

2009ம் ஆண்டு இலங்கைத்தீவில் நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இனஅழிப்பின் போது சிறீலங்கா இராணுவத்தின் கைகளில் 40,0001 - 70,0002க்கும் மேற்பட்ட எமது உறவுகளை இழந்துள்ள ஈழத் தமிழர்களாகிய நாங்கள், இராஜாங்க செயலரின் அறிக்கையில், அத்தகைய நிர்ணயத்தை எட்டுவதற்காக எடுத்துக் கொண்டுள்ள கூறுகள் பற்றிய குறிப்பினை மிகுந்த கவனத்தில் எடுத்துள்ளோம்.

ரொஹிங்கியாக்கள் கொல்லப்பட்டது, பாலியல் வன்புணர்வு மற்றும் இடம்பெயர்வுகள் ஒரு இனப்படுகொலை என்று பிரகடனப்படுத்திய இராஜாங்க செயலரின் உரையில், உக்ரைன் மக்களின் துன்பங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, “ஓம், நாங்கள் உக்ரைன் மக்களுடன் நிற்கிறோம் என உலகெங்கிலும் உள்ள பல இராஜதந்திரிகள் கூறுகின்றனர், ஆனாலும் மற்றைய இடங்களிலும் அட்டூழியங்களால் பாதிக்கப்படும் மக்களுடன் நாங்கள் நிற்க வேண்டும்.” எனவும் கூறியிருந்தார்.

உக்ரேனிய மக்களின் துன்பங்கள் உலகின் பல பகுதிகளிலும் மற்ற மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களை மறைத்துவிடும் என்ற அச்சத்தை இராஜாங்கச் செயலரின் இக் கருத்து நீக்குகிறது.

தொடர்ச்சியாகத் தண்டனையின்மையை அனுபவித்து வரும் துணிவினால் இலங்கைத் தீவில், தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையில், தமிழ் அடையாளத்தை அழிக்கும் நோக்குடன் தமிழர்கள் மீதான திட்டமிட்ட மற்றும் பரவலான அடக்குமுறையில் சிங்கள பௌத்த பேரினவாத அரசு தொடர்ந்தும் ஈடுபடுவது, தண்டிக்கப் படாமற் போகாது என்பதனை இந்த அறிக்கை உறுதிப் படுத்துகிறது.

மியான்மாரில் வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்குத் தொடரக்கூடிய ஆதாரங்களைத் திரட்டும் ஐக்கிய நாடுகளின் புலன் விசாரணை அமைப்புக்கு ஏறத்தாள 1 மில்லியன் டொலர்களைப் புதிய நிதியுதவியாக அமெரிக்கா அளிக்கும் என்றும் இராஜாங்கச் செயலர் கூறியுள்ளார்.

2021ம் ஆண்டு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46/1 தீர்மானத்திற்கு இணங்க, இலங்கைத்தீவிலன் இறுதிக்கட்ட போரின் போது இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்களுக்கு சாட்சியங்களை சேகரிப்பதற்குப் பணிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கும், இதேபோன்ற நிதியை வழுங்குமாறு இராஜாங்க செயலரை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்துகிறது.

இடையீடுகள் வாயிலாகப் பெறப்பட்ட, சிறீலங்காவின் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கு இடையிலான தொலைத்தொடர்புகள், செயற்கைக்கோள் புகைப் படங்கள் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும், தமிழர்களுக்கான பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்காக, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் வழக்குரைஞர்களிடம் வெளியிடுமாறும் நாங்கள் இராஜாங்க செயலரைக் கேட்டுக் கொள்கிறோம்.

சிவில் சமூகத்தையும், குறிப்பாக 2018ம் ஆண்டு முதல் பொறுப்புக்கூறலுக்காக, ரொஹிங்கியா மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் என்று முடிவெடுக்க சட்டப்பூர்வ அடிப்படை உள்ளது என்று வாதிட்டு வரும், பொதுச் சர்வதேச சட்டம் மற்றும் கொள்கைக்கான குழுமத்தையும் நாங்கள் வாழ்த்துகிறோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இனப்படுகொலை மற்றும் தொகையான அட்டூழியத் தடுப்பிற்கான அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# உலக வணிகம்
# ULAGA VANIKAM
# 2022

# வெளிவந்துவிட்டது




இப்பொழுது அனைத்து தமிழர் வியாபர நிலையங்கள்,
உணவகங்கள் மற்றும் அலுவலகங்களிலும்

**‘உலக வணிகம் 2022’**

கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக தொடர்புகளுக்கு: 437.345.4203**

# தமிழீழ ஈகைச்சுடர்

# அன்னை பூபதி

## 34 ஆம் ஆண்டு நினைவு நாள்

உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

Annai Poopathy was the first woman to embrace martyrdom in the fasting struggle for Thamileelam

நாட்டுப்பற்றாளர் நாள்

ஏப்ரல் 19

மண்ணில்: 11.03.1932

ஈகைச்சாவு: 19.04.1988



அன்னை

# பூபதி கணபதிப்பிள்ளை

**Annai Poopathy Kanapathipillai**

கிரான், மட்டக்களப்பு, தமிழீழம்

## அன்னை பூபதிக்கான மலர் வணக்க நிகழ்வு

இடம்: நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

அரச உறுப்பினர் பணிமனை

445 Milner Ave. Unit 11

Scarborough ON M1B 2K4

நேரம்: 6:00 PM - 8:00PM

தொடர்புகளுக்கு: மகாஜெயம் மகாலிங்கம் பாராளுமன்றம் உறுப்பினர், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

647.262.5587

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் - The Thirst of Tamil is the Homeland of Thamileelam" சங்கத்தமிழ்

# 13ம் ஆண்டு
# வீரவணக்கம்





***04.04.2009 அன்று முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில் சிறீலங்கா ஆகிரமிப்பு சிங்களப்படைகளின் நச்சுக்குண்டு தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவைத்தழுவிக்கொண்ட மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய மாவீரர்களின் 13ம் ஆண்டு வீரவணக்க நாள்***



பிரிகேடியர்
**விதுசா**
கந்தையா ஞானபுரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)



பிரிகேடியர்
**துர்க்கா**
பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகமாமம், யாழ்
(24.03.1971 - 04.04.2009)



பிரிகேடியர்
**தீபன்**
வேலாயுதம்பிள்ளை பகிரதகுமார்
கண்டாவளை, கிளி
(08.01.1966 -05.04.2009)



பிரிகேடியர்
**மணிவண்ணன்**
அருளம்பலம் தவேந்திரன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)



பிரிகேடியர்
**ஆதவன்**
ஆறுமுகம் அருந்தவச்செல்வன்
கொற்றாவத்தை - வடமராட்சி, யாழ்
04.04.2009

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்